தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒக்டோபர் 1997

# எரிமலை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அக்கறைப் பூக்கள்

மதிப்புக்குரிய எரிமலை ஆசிரியர் குழுவுக்கு வணக்கம்,

நீங்கள் அனுப்பி வைத்துள்ள எரிமலை இதழ் கிடைக்கப்பெற்றேன் மிக்க மகிழ்ச்சி. நான் தமிழ், தமிழன், தமிழ் நாடு என்ற கொள்கைக் கோட்பாட்டுக்குள் நிலைத்துவிட்டவன். 1983 தொடக்கம் ஈழத் தமிழர் பிரச்சனையைத் தெரிந்துகொண்டவன். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளேன். ஈழத்தமிழர்களின் போராட்டச் செய்திகளை தாங்கிவரும் எரிமலைக்கு எனது வாழ்த்துக்கள்.

துரை பெரியசாமி
நெறியாளர்
அறிவியற் தமிழர் இலக்கிய மன்றம்.

★ ★ ★

அன்புடையீர் வணக்கம்,

எரிமலை இதழ்கள் தொடர்ந்து கிடைக்கின்றன. திட்டமிட்டு தமிழர்களின்பால் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன, அதைக்கண்டிக்கத் தகுதியிருந்தும், கண்டிக்காத அரசியல் தலைவர்கள் புறந்தள்ளும் அவலநிலை குறித்து மிகுந்த வேதனைப்படுகிறேன். உயிரைப்பணயம் வைத்து, வாழ்க்கை சுகங்களைத் துறந்து இனமானம் காக்கப்போராடும் விடுதலைப் புலிகளைப் பாராட்டாமல், போட்டி போட்டுக்கொண்டு எதிர் அறிக்கைகள் விடுவது வெட்கப்பட்டு வேதனைப்பட வைக்கிறது. பங்களாதேசப் பிரிவினையை ஆதர்த்தவர்கள், யாசீர் அரபாத்தைப் பாராட்டியவர்கள், ஈழவிடுதலைப்போராட்டத்தையும், பிரபாகரனையும் ஆதரிக்க மனம் இல்லையே என்று வேதனைப்படுகின்றேன். உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

கோ. இராமசாமி
தளவாய்ப்பட்டி

★ ★ ★

அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு என் இனிய வணக்கம்.

நான் தாய்நாட்டிலிருந்து அண்மையில்தான் ஜேர்மன் நாட்டை வந்தடைந்தேன். தற்போது பல நாட்டவரும் உள்ளடங்கிய தங்குமிட நிலையத்தில் இரண்டு மாதகாலமாக இருக்கின்றேன். தற்செயலாக இங்கு வசிக்கும் தமிழர் ஒருவரின் தொடர்பு




கிடைத்தபடியால் எரிமலையை வாசிக்கும் பாக்கியம் பெற்றேன். பெயருக்கேற்றவாறு எரிமலையில் ஒவ்வொரு ஆக்கங்களும் அடங்கியுள்ளன. தமிழீழ விடுதலைப் போரின் தாக்கங்களும், எமது போராளிகளின் தியாக உறுதியையும் படம் போட்டுக் காட்டுகின்றது. பிற நாட்டவருடன் உரையாடும்போது தமிழர்களின் போராட்டத்தின் வளர்ச்சியையும், பெருமையையும் அறியக்கூடியதாக இருந்தது. இங்கு என்னுடன் 12 தமிழர்கள் இருக்கின்றார்கள். தயவு செய்து எனது முகவரிக்கு எரிமலை சஞ்சிகை அனுப்பி உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புடன்,
ச.ராஜேந்திரம்
டோட்முண்ட் - ஜேர்மனி.

★ ★ ★

அன்பின் ஆசிரியர் குழுவுக்கு வணக்கம்,

நணபர் வாயிலாக ஜுலை இதழ் கிடைக்கப்பெற்றேன் நன்றி. வடக்கு கிழக்கு தமிழர்களுக்கென்று தனி வானொலிச்சேவையினை சிறீலங்கா அரசு ஆரம்பித்துள்ளது தெரிந்ததே. இச்சேவையில் சினிமாப்பாடல்களே ஒலிபரப்புகிறார்கள். இவ்வாறு, எதிரி பின்புறமாக நுழைவதை நாம் மன்னிக்கவே கூடாது. அண்மையில் அம்பாறையில், ஆறு அப்பாவித்தமிழர்கள் சுட்டுகொல்லப்பட்ட சம்பவம் சிங்களப் பேய்களின் தமிழ் மக்கள் மீதான இனவெறியாட்டத்தையும், கொடூர எண்ணங்களையும் வெளிக்காட்டுகின்றன. ஐக்கிய இலங்கையில் ஈழத்தமிழனுக்கு என்றுமே பாதுகாப்பில்லை. இரு தேசிய இனங்கள் வாழும் இலங்கையில் தமிழ்த்தேசிய மக்கள் பல ஆண்டுகளாக துன்புறுத்தப்பட்டும், கொலைசெய்யப்பட்டும் வருவதுகண்டு தில்லி தமிழக அரசுகள் மவுனம் சாதிப்பது மனிதநேயமற்ற செயலாகும். உலகநாடுகளின் கண்திறக்க அண்டை நாடான இந்தியா, சிறிலங்காவில் நடைபெறும் இனப் படுகொலைகளைக் கண்டித்து வாய்திறக்கவேண்டும். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மட்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கட்டியமைத்து போராடாமல் இருந்திருந்தால் ஈழத்தமிழினம் அழிக்கப்பட்டிருக்கும். தமிழீழம் மலர என்னாலான உதவிகளைச் செய்யக்கடமைப்பட்டுள்ளேன். வாழ்க பிரபாகரன். வளர்க விடுதலைப் புலிகள்.

நல்மனதுடன், ச.வேல்முருகன்
புதுச்சேரி

★ ★ ★

அன்புள்ள எரிமலை ஆசிரியர் குழுவுக்கு வணக்கம்

எனக்கு மார்ச் மாதத்திலிருந்து எரிமலை கிடைக்கவில்லை. தயவு செய்து எனக்கு தொடர்ந்து எரிமலை அனுப்பி வைக்கவும். தமிழீழத்தில் நடக்கும் போர் நிலவரங்களை தென் செய்தி, நந்தன் போன்ற இதழ்கள் மூலம் அறிந்து வருகின்றேன். திலீபனின் பத்தாவது ஆண்டு நினைவாக, திலீபனின் படமும், கவிதையும் கொண்ட 200 நகல்கள் விநியோகம் செய்து எனது உணர்வை வெளிப்படுத்தினேன். எரிமலை கிடைத்திருந்தால் இன்னும் சிறப்பாகச் செய்திருக்க முடிந்திருக்கும். என் உயிர் உள்ள வரை தமிழீழத்திற்கு ஆதரவு திரட்டுவேன். தமிழ் தேசியத்தலைவர் சர்வதேச சமூகத்திற்கான வேண்டுகோளைப் படித்தபோது என் உணர்வுகள் பொங்கியது. மேலும் தாங்கள் வெளியிடும் செய்திகளை எரிமலை மூலம் அறிய ஏக்கத்துடன் காத்திருக்கும் தமிழீழ உணர்வாளன்.

மேவி. கரிகாலன்
சேலம்.

★ ★ ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...


சர்வதேசத்திற்கு தீர்வுத் திட்டம்
தமிழினத்திற்குப் போர்த் திட்டம் ........பக்கம் 10

நன்னம்பிக்கை முனையாய் நின்ற பன்னிரு வேங்கைகள்
ஒரு நினைவுப் பார்வை ..................பக்கம் 11

'ஜெயசுக்குறுய்' - எம்மவர் அனுபவம்
சோவியத்ரசிய மக்களின் முன்னுதாரணம் ...பக்கம் 18

**வெள்ளை** - ஒரு போராளிக் கவிஞனின்
நினைவுக் குறிப்புகள் ..................பக்கம் 20

தண்டவாளங்களில் தடுமாறும்
சமூகப் புகைவண்டி ..................பக்கம் 22

'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கை தோல்வி
நிச்சயம் என்றே வரலாற்றில் பதியும் ......பக்கம் 23

பஞ்சம் - பசி - பட்டினி ..................பக்கம் 29

மாணவர் ஆக்கங்கள் ..................பக்கம் 32

இன அழிப்பிற்கான ஒத்துழைப்பு ........பக்கம் 33

செத்தவர் செருப்புக்காகக் காத்திருப்பவர் ....பக்கம் 34

'தலைக்காத்து' ......................பக்கம் 40

தென் தமிழீழம் - தீயாகிச் சுடுகின்ற தீகவாவி ...பக்கம் 41

வன்னிப் பிரதேசத்தின் கலைச் சொத்து
**கோவலன் கூத்து** ..................பக்கம் 43

வரும்காலம் எமதன்றோ? ..............பக்கம் 46




'ஜெயசுக்குறுய்' நடவடிக்கையை
புலிகள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர்
- பக்கம் 04



கொழும்புக் குண்டு வெடிப்பின் எதிரொலி
- பக்கம் 08





நாதன் - கஜன் சுவடுகள்
- பக்கம் 24



தமிழ்த் தேசிய
விடுதலைப் போராட்டத்தில்
**சர்வதேசத்
தலையீடு**
- பக்கம் 14



கோணேஸ்வரிகளா?
யாழினிகளா?
முடிவு தமிழீழப் பெண்கள்
கையில்
- பக்கம் 17



சேகுவேரா
திரும்பி
வந்துவிட்டார்
- பக்கம் 26



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிங்கள அரசியல் கட்சிகளை எடுத்துக்கொண்டால் இலங்கைத்தீவு சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே மாறி மாறி ஆட்சி நடத்தியுள்ளன. இந்த இரு கட்சிகளும் எவ்விதத்திலும் எங்கள் பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. எமது போராட்டம் சிறிமாவோ அம்மையார் பிரதமராக இருந்த காலத்தில் துவக்கப்பட்டது என்பதைக்கூட இங்கே சுட்டிக்காட்டலாம். தீவிரவாதப் போராட்டம் 1972–ம் ஆண்டில்தான் கூர்மையடையத் தொடங்கியது. இந்த ஆண்டு எங்கள் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. பழைய அரசியல் அமைப்பில் தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கொஞ்ச உரிமைகள் கூட இப் புதிய குடியரசு அரசியல் அமைப்பினால் பறிக்கப்பட்டன. இதற்குக் காரணமானவர்களில் இடதுசாரி முற்போக்குக் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கொல்வின் ஆர். டி. சில்வா என்ற சிங்களத் தலைவரும் ஒருவராவர். புதிய அரசியல் அமைப்பை உருவாக்கிய சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் தலைமையிலான கூட்டுக்கட்சி ஆட்சியில் அப்போது கொல்வின் ஆர். டி. சில்வா மட்டுமல்ல – இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பீட்டர் கெனமனும் முக்கியமானவராய் இருந்தார். 'முற்போக்காளர்களான' இடதுசாரிகள் கூட அரசியல் அமைப்பு மூலம் எமது அடிப்படை உரிமைகளைப் பறித்தெடுக்க முயன்ற இவ்வேளையில்தான் எங்கள் விடுதலைப்போர் கூர்மையடையத் தொடங்கியது. 1972–ல் எமது விடுதலைப் போரானது குடியரசு அரசியலமைப்புக்கு எதிராக தீவிரமடைந்தது. இக்குடியரசு அரசியல் அமைப்பை எழுதியவர் நாடறிந்த பழம்பெரும் இடதுசாரியான கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். குடியரசு அரசியல் அமைப்புக்கு ஒப்புதல் தரமாட்டோம் எனக் கூறி பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தார்கள். இந்த அரசியலமைப்பில் கையெழுத்திட்ட ஓரிரு தமிழ்ப் பிரதிநிதிகள் எமது மக்களால் துரோகிகளாகக் கணிக்கப்பட்டார்கள்.

**தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள்**

'The Hindu' சஞ்சிகைக்கு *04.09.1986*–ல் வழங்கிய பேட்டியிலிருந்து)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

ஒக்டோபர் 1997

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# பயங்கரவாதமல்ல விடிவிற்கான பயணம்

சர்வதேச அரசியல் என்பது தேசங்களின் அரசியல், இராணுவ, பொருளாதார, புவிசார் கோட்பாடுகளின் பிரதிபலிப்புக்களே என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நியதியாகிவிட்டது. இங்கு நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளுக்கும், நீதியான அமைவுகளுக்கும் இடம் கிடையாது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நடவடிக்கை மூலம், அமெரிக்கா இந்த உலகப் பொது விதியை மீள ஒருமுறை நிரூபித்துள்ளது. தென்னாசியப் பிராந்தியத்தில் தாம் வகுத்துக்கொள்ள விழையும் பனிப்போருக்கு பிற்பட்ட காலத்திற்குரிய வெளிவிவகார கொள்கைகளின் வெளிப்பாடாகவோ அல்லது தவறான கோட்பாட்டு முன்னுரிமை சார்ந்தோ அமெரிக்கா இம் முடிவினை எடுத்துள்ளது. ஆயினும் இது உலகத்தின் முடிவெல்லையில்லை. ஒரு தேசிய இனத்தின் ஆத்மார்த்தமான விடுதலை வேட்கைக்கும், நியாயபூர்வமான கோபாவேசத்திற்கும் இவ்வாறான தவறான தீர்மானங்கள் முடிவெல்லையாக இருக்கவும் முடியாது. மாறாக விடுதலைப் புலிகள் வோஷிங்டன் நீதிமன்றத்தின் முன் தாம் சமர்ப்பித்துள்ள மனுவில் குறிப்பிட்டதுபோல், அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தவறான நடவடிக்கையினை எதிர்க்க வேண்டிய தார்மீகக் கடமை எமக்கு உண்டு.

இன்று போர் முனையில் தமிழீழப் போரணிகள் மரபுசார் தந்திரோபாயங்களுடன் ஒரு நவீன இராணுவமாக பரிணாமம் கொண்டு வருகின்றது. சந்திரிகாவின் 'ஜெயசிக்குறுய்' போர் நடவடிக்கை, இப் பரிணாமத்தின் சூட்டை இன்று அனுபவபூர்வமாக உணர்ந்து வருகின்றது.

மறுபுறம் சந்திரிகாவின் 'தீர்வுப் பொதி' போலியானதொரு வெற்று வேட்டு என்பது சகல தரப்பினராலும் உணர்ந்துகொள்ளப்பட்டு வருகின்றது. எதுவித தேசிய இனமுரண்பாட்டைத் தீர்க்கும் பண்பியல் குறியீடுகளும் அற்ற இச் 'சந்திரிகாவின் தீர்வுப் பொதி', நவீனமயப்படுத்தப்பட்ட சிங்கள பௌத்த இனவாதத்தின் தந்திரோபாயங்களையும், உத்திகளையும் கொண்டதாகும்.

இவ் அரசியல், இராணுவச் சூழ்நிலையில் தமிழர்களின் அரசியல் இலட்சியத்திற்கான போரில், சர்வதேசத் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இன்றைய அமெரிக்காவின் தவறான நடவடிக்கையினைச் சுட்டிக்காட்டி மாற்றி அமைக்கக் கோரும் தார்மீகக் கடமைகூட புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு உண்டு.

எமது விடுதலைப் போருக்கான சர்வதேசப் பாதுகாப்பு அரணாகத் திகழவேண்டியது புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகமாகும். விடுதலைப் போருக்கு இரத்தம் சிந்தி உயிர்கொடுக்கும் போராளிகளும் பொதுமக்களும், இத் தம் எதிர்பார்ப்பை காலம்காலமாக முன்வைத்து வருகின்றனர். இந்த எதிர்பார்ப்பின் தாக்கத்தை உணர்ந்துகொண்ட சந்திரிகா – கதிர்காமர் கூட்டணி புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களது ஜனநாயக உரிமைகளைக் கூட பறித்துவிட பல்வேறு பிரச்சார தந்திரோபாயங்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு அமெரிக்காவின் நடவடிக்கை துணை போகலாம். ஆனால் நாம் தளர்ந்துவிட முடியாது. அமெரிக்க நடவடிக்கையை ஒரு அங்கீகாரத்தின் தொடக்கமாக எடுத்துக்கொண்டு, நாம் ஒரு தேசிய இனம், எமக்குப் பிரிந்து சென்று சுயமாக வாழும் சுயநிர்ணய உரிமை உண்டு. நாம் அடக்குமுறையையும், வன்முறையையும் எதிர்கொள்ளும்போது, அதனை ஆயுதம் தரித்து எதிர்த்துப் போராடுவதற்கான ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தின் அங்கீகாரத்திற்கு உரித்துடையவர்கள் என்பதை உலகமெங்கும் பறைசாற்றுவோம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஜயசிக்குறுய் நடவடிக்கையை புலிகள் எவ்விதம் எதிர்கொள்கின்றனர்?!

கடந்த நான்கரை மாதகாலமாக வன்னியில் ஒரு மரபுவழிச்சமர் உக்கிரமான முறையில் நடைபெறுகின்றது. புளியங்குளம் சந்தியை அண்டிய பகுதியிலிருந்து நெடுங்கேணிவரையான சுமார் 30 கி.மீ. நீளமான பகுதியில் சண்டைகள் நடைபெறுகின்றன. இந்த நீண்ட முனையைக் கொண்ட சமர்க்களத்தில் ஏறக்குறைய முப்பதாயிரம் படையினர் சண்டைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிங்களத்தின் தாங்கிப்படை மற்றும் ஆட்டிலறி — மோட்டார் படையின் தொண்ணூறு வீதமான பலம் இந்தச் சமரில் பயன்படுத்தப்படுகின்றது. வான் படையும் அவ்வாறே செயற்படுகின்றது. அதேசமயம் ஆள் தொகையைச் சமாளிப்பதற்காக, சிறீலங்காவின் கடற்படையினரும் காவல்துறையினரும் சமர்முனைப்பணிகளுக்கென அனுப்பப்பட்டுள்ளனர். சிறீலங்கா அரசைப் பொறுத்தவரையில் தனது படைவளத்தின் பெரும் பகுதியை ஒருங்குதிரட்டி ஜயசிக்குறுய் சமரில் பயன்படுத்தி வருகின்றது.

தாண்டிக்குளத்தில் இருந்தும், கென்—டொலர் பண்ணைப் பகுதிகளில் இருந்தும் நகரத் தொடங்கிய இந்தப் பெரும் படை புளியங்குளப் பகுதியில் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்து, கடந்த நான்கு மாதகாலமாக, அங்கேயே முடங்கிப்போயுள்ளது.

புல்டோசர் கொண்டு மண்ணைத் தள்ளுவது போல வவுனியா — கிளிநொச்சிப் பாதை வழியே புலிகளின் எதிர்ப்பைத் தள்ளிக் கொண்டு செல்ல விரும்பிய சிங்களப்படைக்கு அந்த நகர்வு வியூகம் முடியாததாகிவிட்டது. இப்போது, வேறு ஒரு வியூகத்தை அது அமைத்துள்ளது.

தற்போதைய நிலையில் வளைவான கைப்பிடியைக்கொண்ட ஒரு குடைத்தடி போல, ஜயசிக்குறுய் படையின் சண்டை அணிகள் வியூகமிட்டுள்ளன. புளியங்குளத்தைச் சுற்றி அரைவட்டவடிவமாக, குடைக்கம்பின் வளைவு போல, தமது நிலைகளை அமைத்துள்ளனர். அந்த வளைவின் தொடர்ச்சியாக இருக்கும் குடைத்தடி போல புளியங்குளத்திலிருந்து, பிரதான பாதைக்குக் கிழக்காக, காடுகளுக்கூடாக கனகராயன்குளப்பகுதியை அண்டி நிலைகளை அமைத்துள்ளனர். இந்தக் குடைத்தடி வியூகப்படையணிக



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ளுக்கு ஓமந்தையூடாகவும் — நெடுங்கேணியூடாகவும் விநியோகம் நடைபெறுகின்றது. விநியோகப்பாதைகளும் படையினர் வசமே உள்ளன.

தரையைக் களமாகக் கொண்டு நடைபெறும் மரபுவழிச்சமரில் தாங்கிகளும், ஆட்டிலறி – மோட்டார்களும், வான்கலங்களும் மிக முக்கிய ஆயுதங்களாக விளங்கும் அதே நேரம், போதிய அளவு ஆட்தொகையும் மரபுவழிச் சமருக்கு அவசியம். சிங்களப்படைக்கு இவை அனைத்தும் இருக்கின்றன. புலிப்படையைப் பொறுத்தவரையில் இவற்றில் சிலது முழுமையாக இல்லை, மற்றயவை மட்டுப்படுத்தப்பட்டளவில் உள்ளன. இந்த படைக்கல வளச் சமநிலையில் குறைவாக உள்ள படை (புலிப்படை) மற்றைய படையைவிட (சிங்களப்படை) அதிகளவு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உணவு – உறக்கம் – ஓய்வு போன்ற அத்தியாவசிய விடயங்களிலும் அது பல நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியேற்படும். இத்தகைய சவால்களுக்கும் — நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்தபடி, புலிப்படை, வீரமாகப் போராடுகின்றது.

30 கி.மீ. நீளமான ஜயசிக்குறுய் சமர்க்களத்தின் பிரதான பொருதுகளமாக ஒரு சில கிலோமீற்றர்களைக் கொண்ட புளியங்குளம் சண்டைமுனைகளே விளங்குகின்றன. சந்திப் பகுதிக்கு அருகில் நிலைகொண்டிருந்தவாறு, சந்தியைக் கைப்பற்ற எதிரிப்படை எடுக்கும் தீவிர முயற்சிகளும், அதைத்தடுக்க தமிழர் சேனை தொடுக்கும் கடுமையான எதிர்த்தாக்குதல்களும் புளியங்குளம் சந்தியை தீவிர சண்டைக்களமாக்கியுள்ளது. சில நூறு மீற்றர்கள் இடைவெளிக்குள் இரு பகுதிப் படைகளும் நிலைகொண்டவாறு – தடுப்பு அரண்களையும், பதுங்குகுழிகளையும் அமைத்து – சண்டையிட்டவண்ணமுள்ளன.

துப்பாக்கிக்கு ஓய்வு கிடைக்கும்போது அதே கைகள் மண்வெட்டியைப் பிடிக்க வேண்டும். துப்பாக்கிக்கும் ஓய்வுகிடைக்கும். மண்வெட்டிக்கும் ஓய்வுகிடைக்கும். அவற்றைப் பிடிக்கும் புலிவீரர் கைகளுக்கு ஓய்விருக்காது.

பங்கர் சண்டைகள் என்ற இராணுவப் பரிமாணத்தில் புளியங்குளம் சண்டைகள் இடம்பெறுகின்றன. படையினரின் கண்ணெதிரிலேயே புலிகளின் அரண்களும் உள்ளன. போராளிகள் நிலைகொண்டுள்ள இடங்கள் – பயன்படுத்தும் வழிகள், பாதைகள் பகைவனுக்கும் தெரியவரும். இது, பகைவனின் எறிகணைவீச்சிற்கு வாய்ப்பான சூழல்.

சண்டையில்லாத நேரங்களில் வந்துவிழும் எறிகணைகளில் இருந்து காப்புத் தேடுவது வேறு விடயம். சண்டை நேரங்களில் மழைபோல் வந்துவிழும் எறிகணைத் தாக்குதல்களுக்குத் தற்காத்தபடி – முன்னேறமுனையும் எதிரிப்படையுடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபடுவது வேறு விடயம். நிலமட்டத்திற்கு மேல் தலைகளை உயர்த்த எறிகணைகள் விடாது. ஆயினும், தலையை வெளியே நீட்டி – எதிரியைக் குறிபார்த்து – அவனைத் தாக்கிக் கொல்ல வேண்டும். தாமதித்தால் அவன் கொன்றுவிடுவான். செக்கனுக்கு ஐந்தோ – பத்தோ அதனிலும் கூடவோ எறிகணைகள் வெடிக்கும். கோடைக்கால இடிமுழக்கம் போல காது செவிடுபடும்படி தொடர்ச்சியாக எறிகணைகள் வெடித்து – முழங்கும். வெடி அதிர்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வுகளால் உடல் அதிரும் — ஆனாலும் உள்ளம் பதறாது நின்று போராட வேண்டும். இந்த வெடிமுழக்கச் சத்தங் களையும் ஊடறுத்தவாறு எமது கென்சன் லீடர்களினதும் — பிளட்டூன்



தலைவர்களினதும் கட்டளைச் சத்தங் கள் சக போராளிகளின் காதுகளுக்குக் கேட்கவேண்டும். எதிரி நிற்கும் திசையை சுட்டிக்காட்டி, சகபோராளிகள், வெறும் வாயால், கத்திக்கூறும் ஆலோசனைக ளும் — எச்சரிக்கைகளும் குழுத் தலை வர்களுக்கு கேட்க வேண்டும். எறிக ணைத்துண்டுகள் வெட்டி, ரவைக்குண் டுகள் கிழித்து காயம்பட்டு வீழும் அன் புத் தோழர்களின் அலறல் ஓசைகளும் இடையிடையே கேட்கும். இவ்வள வையும் கிரகித்துக்கொண்டு, இத்தனை யையும் சகித்துக் கொண்டு, முன்னால் நகரமுனையும் எதிரி மீதே கண்களை ஒட்டவைத்து — சுட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

புலிகளின் பங்கர் அரண்களை உடைத்தெறிய எறிகணைகள் தவறி னால், தனது தாங்கிப் படையை — பகைவன் — அரணுடைக்க ஏவி விடு வான். தனியன் யானைகள் போல உறுமிக்கொண்டு சண்டை வலயத்திற் குள் நுழையும் சிங்களத்து தாங்கிகள் கவசம் தரித்தவை. உருக்குக் கவசம் உடுத்தபடி ஓடி ஓடிக் குண்டேவும் எம னின் வாகனங்கள் இவை. புலிகளின் தாக்குதல் வலயத்திற்குள் இந்தக் கவ சப் பீரங்கிகள் வரும்வரை, தூரத்திலி ருந்து அவை எறியும் நீளக்குண்டுகளை புலி வீரர்கள் தாங்கத்தான் வேண்டும். குண்டேவிக் குண்டேவி நகரும் கவச அரக்கனுடன் கூடவரும் புழுதிமண்ட லத்திற்குள், தூர இருந்தபடி கண்களை ஆழமாகச் சொருகி — சரியாக அதனை அடையாளம் கண்டு — அடிக்கவேண் டிய இடத்தில் குறிதவறாது அடிக்க வேண்டும். அப்போதுதான் எமனின் வாகனம் எரியுண்டுபோகும். ஆர்.பி. ஜீ.யிலிருந்து ஏவப்படும் தாங்கி எதிர்ப் புக்குண்டுகள் சக்திவாய்ந்தவைதான். ஆனால், ஒரு குண்டில், எய்தவனைத் தவிர, மிகுதி எல்லாவற்றையும் எரித்து அழிக்கும், திரைப்படக் காட்சிபோல, அந்தக் குண்டுகள் மாயசக்தி படைத்த வையல்ல. அல்லது, எய்தால் கட்டா யம் இலக்கை வீழ்த்தும் நாகாஸ்திர மும் அல்ல. தாங்கி எதிர்ப்புக் குண் டெய்யும் புலி வீரனின் குறிபார்க்கும் திறன் — பதறாத மனஉறுதி — வீழ்த்தியே தீரவேண்டும் என்ற ஓர்மம் இவை ஒன்றுசேரும்போதுதான் தாங்கி எரி யும். ஆயினும், இவைகள் ஒன்றுசேர களப்பூகம்பம் பெரும் தடையாக இருக் கும்.

சிலவேளைகளில், புலி வீரர்களின் அரண்களைக் கடந்து அதற்குமேலால் ஏறிமிதித்தபடி தாங்கிகள் உள்நுழைய வும் கூடும். அந்த நேரங்களில் அரணை விட்டு வெளியே வந்து, உயிரை ஒரு கையிலும், கழற்றிய கைக்குண்டை மறு கையிலும் கொண்டேந்தியோடி கவச அரக்கனை அழிக்க முயலும் வீரகாவி யங்கள் ஒரு சில கண்முன்னால் அரங் கேறும்.

தாக்குதல் உலங்குவானூர்திகளைக் கொண்டும், கிபீர்களைப் பயன்படுத்தி யும் புலிகளின் காப்பரண்களைத் தாக்கி நகர்வுப்படைக்கு முன்னால் உள்ள தடைகளை அகற்ற பகைவன் முயல் வான். எறிகணைமழை ஓயும் ஒரு கணப் பொழுதில், குஞ்சைத்தூக்க வரும் பருந்து போல வானிலிருந்து, சத்தமின்றி, கிபீர் கள் சறுக்கிவரும். 'வண்டுகள்' எடுத்த படங்களை வழிகாட்டியாகக்கொண்டு தாக்குதலை நடாத்தும். ஆகக்குறைந்த உயரத்தில் — தாழப்பறக்கும் சண்டைக் ஹெலிகள் வேகமாகத் தாக்கவரும்.

**பகைவனின் ரவைகளுக்கு - எறிகணைகளுக்கு புலிகள் நிற்கும் திசைதான் இலக்கு. புலிகளின் ரவைகளுக்கு - எறி கணைகளுக்கு பகைவனின் உடல்தான் இலக்கு.**





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**ராங்க் எதிர்ப்புக் குண்டெய்யும் புலி வீரனின் குறிபார்க்கும் திறன் - பதறாத மனஉறுதி - வீழ்த்தியே தீரவேண்டும் என்ற ஓர்மம் இவை ஒன்றுசேரும் போதுதான் ராங்க் எரியும். ஆயினும், இவைகள் ஒன்றுசேர களப்பூகம்பம் பெரும் தடையாக இருக்கும்.**

இறக்கைகளை விரித்துப்போட்டது போல, மிரட்சியூட்டியபடி மிதந்து வரும் இந்தப் பறக்கும் தாங்கிகளை சாதாரண ஆயுதங்களாலும் அடித்து வீழ்த்த முடியும். அதை ஓட்டிவரும் பகைவனுக்கும் அது தெரியும். ஆனால், இத்தகைய தாழப்பறப்பு இலக்கை அச்சொட்டாக அடித்து – அழிக்க அவனுக்குப் பெரிதும் உதவும். இதில் முந்துபவர் வெல்வார். முந்துவதற்காக எம் தோழர்கள் எந்தநேரமும் வைத்த கண் வாங்காமல் விழிப்பு நிலையில் வான் காவல் காக்க வேண்டும். அத்தகைய விழிப்பு நிலையிலேயே உண்ண வேண்டும். உறங்க வேண்டும்.

பங்கர்ச் சண்டையில் ஒவ்வொரு பதுங்குகுழியும் – ஒவ்வொரு காப்பரணும் ஒரு கோட்டை போலச் செயற்படும். தங்குமிடமும் அதுதான். பாதுகாப்பையும் அதுதான் வழங்கும். உணவும் – ஓய்வும் அதனுள்ளேதான். உறக்கமும் அதற்குள்ளேதான். மழைபொழிந்து அகழிகள் நனைந்தால் ஒவ்வொரு கோட்டையும் சேறாகும் – ஈ, நுளம்புகளின் இருப்பிடமாகும். சேற்றுக்குள் உறங்க வேண்டும்; சகதிக்குள் இருந்து உண்ண வேண்டும்; ஈ, நுளம்புகளுடனும் போராட வேண்டும், எதையும் எதிர்கொள்ள வேண்டும். எதையும் எதிர்பார்க்க வேண்டும். ஆனால், எதிரியை எழுந்து நடக்க அனுமதிக்கக் கூடாது. இவைதான் சமர்முனை விதிகள். எதிரி ஏவிய குண்டுகளால் உருக்குலைந்துபோகும் ஒவ்வொரு கோட்டையையும் இயன்றளவுக்கு விரைவாக மீள அமைத்து, பகைவனின் அடுத்த கட்டத் தாக்குதலை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். துப்பாக்கிக்கு ஓய்வு கிடைக்கும்போது அதே கைகள் மண்வெட்டியைப் பிடிக்க வேண்டும். துப்பாக்கிக்கும் ஓய்வுகிடைக்கும். மண்வெட்டிக்கும் ஓய்வுகிடைக்கும். அவற்றைப் பிடிக்கும் புலிவீரர் கைகளுக்கு ஓய்விருக்காது. ஓய்வு என்பது சமர்க் கடவுள்களுக்கு பிடிக்காத ஒன்று. அதை அடைய அதிக ஆசைப்பட்டால் வெற்றித் தேவதை எங்களை விவாரகத்துச் செய்துவிடுவாள்.

சமர்க்களத்தில் சண்டைகள் இல்லாத நாட்களும் உண்டு. சண்டைகள் அற்ற நாட்களே பதுங்கிச் சுடுபவனின் வேலைநாள். இந்த நிழல் மனிதன் அபாயகரமானவன். சண்டைக்களத்தின் வேட்டைக்காரன் இவன்தான். உயரமான இடங்களில் ஒரு திட்டியாகவும் – கட்டட இடிபாடுகளுக்கிடையில் ஒரு சிதைவைப்போலவும் – உயர்ந்த மரத்தில் ஒரு கிளையைப் போலவும் கரைந்துறைந்து இரைக்காகக் காத்துக் கிடப்பான். எதிரிநிலைகளை நோட்டமிட தலையைத் தூக்கும்போது எங்கிருந்தோ இவன் அடிப்பான். வெளிகளில் அரணமைக்கும்போது இந்த நிழல் மனிதன் சுடுவான். அடுத்த அரணுக்கு நடந்து செல்லும்போது இவன் ரவையனுப்புவான். சூட்டுச் சத்தங்கள் காதை வந்தடையமுன் ரவைக் குண்டு வந்து உயிர்குடிக்க முந்தும். எதிரிப் பிரதேசத்தில் உயிர் வேட்டையாடுவதற்காக ஒரு பதுங்கிச் சுடும் புலிவீரன் தனது நிலையில் பிணம்போல அசையாது காத்துக் கிடப்பான். அவதானமற்ற அசைவு — அஜாக்கிரதையான நகர்வு களமுனையில் தடை செய்யப்பட்டுள்ளது. தவறுபவர்கள் யாராக இருந்தாலும், ரவைகளால் தண்டிக்கப்படுவார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக நிலம் பிடிக்க முயலும் துப்பாக்கிச் சண்டை உக்கிரமாக நிகழும். புலிகளின் பங்கர்களை அடைய வேண்டுமாயின், பகைவன், தனது பங்கர்களை விட்டு வெளியே வரவேண்டும். பகைவனை வீழ்த்தவும் – வீழ்த்தியவனின் படைக்கலங்களைக் கைப்பற்றி எடுக்க வேண்டுமாயின் புலிவீரர்கள் தத்தமது பங்கர்களை விட்டு வெளியேறி வர வேண்டும். எதிரியின் ஆட்பலம் எப்போதும் அதிகம்தான். அவன் செலவிடும் ரவைகளும் – குண்டுகளும் அதிகம்தான். பகைவனின் ரவைகளுக்கு – எறிகணைகளுக்கு புலிகள் நிற்கும் திசைதான் இலக்கு. புலிகளின் ரவைகளுக்கு – எறிகணைகளுக்கு பகைவனின் உடல்தான் இலக்கு.

புலிவீரர்களின் மன உறுதி சாதாரணமானதல்ல. அவர்களின் அர்ப்பண உணர்வு உலகமே வியந்து பாராட்டுவது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த மன உறுதியும் அர்ப்பண உணர்வும் பகைவனின் இராணுவ நோக்கங்களுக்கு பாரிய தடையாக இருந்துவருகின்றது. ஜயசிக்குறுய் படைக்கும் அதுவே மிகப்பெரும் சவாலாக விளங்குகிறது. சண்டைகளின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு – பகைவனின் வியூகங்களுக்குத் தகுந்தவாறு பதில் நடவடிக்கை எடுப்பதற்குரிய ஆலோசனைகளை – தந்திரோபாயங்களை, தலைவர் பிரபாகரன் அவர்கள், உடனுக்குடன் வகுத்துக் கொடுத்து களத்தை வழிப்படுத்துகின்றார். அவற்றை நடைமுறைப்படுத்தி, புலிவீரர்கள் வரலாறு படைக்கின்றனர்.

நன்றி: 'விடுதலைப் புலிகள்'



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




"**எ**ந்தப் பிசாசுடனும் பேசத் தயார்"

சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, கொழும்பு நகரையும் கூடவே ஆட்சியாளர்களையும் உலுக்கியெடுத்த ஒக்டோபர் 15 குண்டுத் தாக்குதல் நிகழ்ந்து இரண்டாம் நாள், விசேட செய்தியாளர் மாநாட்டில் இப்படித் தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதல் ஏற்படுத்திய அதிர்ச்சி, அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை, தலைநகரின் பாதுகாப்புக் குறித்த கேள்வி, றெட் அலேட் எனப்படும் சிறப்பு உசார் நிலையின் கேலிக்கிடமான பரிதாப நிலை, பொருளாதார முன்னேற்ற முயற்சிக்கு விழுந்த பலமான சம்மட்டி அடி... இவையெல்லாம் இணைந்து குழம்பிய நிலையில், பீதியும் வெட்கமும் கோபமும் தலைக்கேற நிதானம் இழந்த நிலையில் சந்திரிகா அம்மையார் உரைத்தது.

குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட விளைவின் ஆழ அகல நீளத்தை வெளிப்படுத்த இந்த நிலையிழந்த பேச்சே போதுமானது.

1996–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் திகதி, சிறீலங்காவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பை முறித்துப் போட்டதாய் ஆன கொழும்பு மத்திய வங்கித் தாக்குதல் நடந்து சரியாக 20 மாதங்கள் கடந்த நிலையில், இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் இலக்கு, தேர்வு செய்யப்பட்ட காலம், இடம் என்பன தெளிவான இலக்கை வெளிப்படுத்துகின்றன. புதிய தென்புடன், முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் வகையில் நகர்த்தப்பட இருந்த தடைகள், தாக்கியழிக்கப்பட்டு, இலக்கு நோக்கிய நகர்வு துரிதகதியில் நடத்தப்பட்டிருக்கின்றது.

அதன் பின்னரும் துப்பாக்கிச் சண்டை நடந்திருக்கின்றது. இது கொழும்பைப் பொறுத்தவரை முதல் அனுபவம்.

முன்னர் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், வீதிக்கொரு தடைகளை அமைத்து, பலத்த பாதுகாப்புக்களை ஏற்படுத்தி, தீவிர கண்காணிப்போடு பாதுகாக்கப்பட்டு வந்த கொழும்பின் இதயப்பகுதியே தாக்கப்பட்டுள்ளது. அதிலும், முன்பு தாக்கப்பட்ட மத்தியவங்கி இருந்த பகுதியிலேயே இத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசாங்கம், இத் தாக்குதலை விடுதலைப் புலிகளே செய்தனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ளபோதும், இத் தாக்குதலுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

### எப்படிச் சாத்தியம்?

சிறீலங்காப் படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, வெடிமருந்து பொருத்தப்பட்ட வாகனம், தாக்குதல் இலக்கை நெருங்க எப்படி முடிந்தது? இத்தனைக்கும் கடந்த மாதம் தமது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சிறீலங்காப்படையினர் தீவிரப்படுத்தியிருந்த நிலையில், கரும்புலிகளைப் பிடித்துவிட்டோம்... அவர்களது அங்கிகளைக் கைப்பற்றிவிட்டோம் என்று பயங்கரமான பிரச்சார யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வேளை, பல தமிழர்களைக் கைது செய்தும் விசாரணை செய்தும் தமிழர்களின் நடமாட்டத்தை வெகுவாக கட்டுப் படுத்தியிருந்த நிலையில் இந்தப் பாரிய தாக்குதலுக்கான முயற்சி எப்படி சாத்தியமாயிற்று? இது விடை காணமுடி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யாத கேள்வி. சிறீலங்கா அரசு, இதற்கென உயர்மட்ட விசாரணைக்குழுவொன்றை அமைத்து இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றபோதும், இதற்கு விடைகாணவோ அன்றி இதனை தடுத்துநிறுத்தவோ காலம் அனுமதிக்கப்போவதில்லை.

### பிரதிபலிப்பு

தமிழ்மக்கள் மீதான சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ள யுத்தத்தின் பிரதிபலிப்பே இக்குண்டுத்தாக்குதல் என, நவசமாசக்கட்சியைச் சேர்ந்த கருணாரத்தின தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைக்கான தீர்வைத் துரிதப்படுத்த வேண்டிய தேவையைக் குண்டுத்தாக்குதல் வலியுறுத்துவதாக சந்திரிகா அம்மையார் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளை வடக்கே முடக்கிவிட்டோம், யுத்தத்தை 85வீதம் முடித்துவிட்டோம் என அரசாங்கம் பிரச்சாரம் செய்துவருகின்ற போதும், தமது பலத்தையும் பாத்திரத்தையும் விடுதலைப் புலிகள் மீண்டும் நிரூபித்துள்ளனர் என, எதிர்கட்சியினர் தெரிவிக்கின்றனர். அரசின் யுத்த முயற்சியை அவர்கள் சாடுகின்றனர். ஆக, அவர்களின் கூற்றுப்படி பார்த்தாலும், சிறீலங்கா அரசு தமிழ் மக்கள்மீது தொடுத்துள்ள அழிவை ஏற்படுத்தும் ஒரு கொடிய யுத்தத்தின் அறுவடையே இது என்பது தெளிவாகின்றது.

### பின்விளைவு

குண்டுத் தாக்குதல் நடப்பதற்கு மூன்று தினங்களிற்கு முன்னரேயே, தாக்குதலுக்கு இலக்கான உலக வர்த்தக மையம், சந்திரிகா அம்மையாரால் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது. 39 மாடிகளைக் கொண்ட, சிறீலங்காவின் உயர்ந்த கட்டிடமாக திகழும் உலக வர்த்தக மையத்திலேயே, முன்னர் தாக்குதலுக்கு இலக்கான மத்திய வங்கியும், பங்குச் சந்தையும் இயங்கிவந்தது. சுற்றிலும், வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் தங்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள். நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையப்பகுதியில், அதிலும் வெளிநாட்டவர்கள் பெருமளவில் வர ஆரம்பிக்கும் காலப்பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. யுத்தம் வடக்கே முடக்கப்பட்டு, கொழும்பு ஏனைய பகுதிகளுக்கும் அமைதிப்பூங்காவாக மாற்றப்பட்டுள்ளது என்ற அற்ப ஆசையைக் கொண்ட சந்திரிகா அரசின் பிரச்சாரப் பொய்மையில் மயங்கி சிறீலங்காவில் முதலீடு செய்யும் ஆவலில் சில வெளிநாட்டவர்கள் தலைநகரில் கூடியிருந்த வேளையே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 110 கோடி அமெரிக்க டாலர்கள் செலவில் அமைக்கப்பட்டு மூன்று தினங்களிற்கு முன்னரேயே திறந்துவைக்கப்பட்ட உலக வர்த்தக மையம் மூன்று நாளில் மூடுவிழாக் கண்டுள்ளது. இது சிறீலங்காவின் பொருளாதாரம் எதிர்காலத்தில் எத்திசைநோக்கி நகரும் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

சேதமடைந்த கட்டிடங்கள் சில வாரங்களில் சில மாதங்களில் திருத்திக் கட்டப்படலாம். அவை மீண்டும் கோலாகலமாக திறந்துவைக்கப்படலாம். ஆனால் சந்திரிகா அம்மையார் உலக வர்த்தக மையத் திறப்புவிழாவின் போது குறிப்பிட்டது போல் சிறீலங்கா, பொருளாதார வளர்ச்சி கண்ட சிங்கப்பூராக மாறப்போவதில்லை.



உடனடிப் பாதிப்பைவிட, இக்குண்டுத் தாக்குதலால் நீண்டகாலப் பாதிப்பே அதிகம். சிறீலங்கா இதனை மூடிமறைக்க முனைந்தாலும், யதார்த்தம் எப்போதும் கிடுக்குப்பிடியால் சிறீலங்காவின் உயிர் நிலையை நெரிக்கவே செய்யும்.

### சிக்கித் திணறும் அரசு

வடக்கே வன்னியில் ஆக்கிரமிப்புப் பாதையமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு, தினமும் பேரழிவைச் சந்தித்துவரும் படையினர் ஒருபக்கம். குடாநாட்டில் விநியோகத்திற்கான எந்த வித உத்தரவாதம் நிறைந்த பாதையும் இன்று, தனிமைப்பட்டதாய் உணரும் முப்பதினாயிரத்துக்கு மேற்பட் படையினர் ஒரு பக்கம். படுதோல்வியை நாளும் சந்தித்து வரும் வெற்றி நிச்சயத்தை நம்பியிருக்கும் சூரியக்கதிர்கள். வெற்றி நிச்சயம் தோல்வியுறும் பட்சத்தில், சிங்கள அரசின் குடாநாட்டைக் கைப்பற்றிய இராணுவ நடவடிக்கை தோல்வியைச் சந்திக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. விநியோகப்பாதையின்றி, பெருந்தொகைப் படை நீண்டகாலம் ஆக்கிரமிப்புப் பகுதியில் நிலைகொள்ள முடியாத நிலையில் ஏற்படப் போகும் நெருக்கடி.

**இக்குண்டுத் தாக்குதலால் நீண்டகாலப் பாதிப்பே அதிகம். சிறீலங்கா இதனை மூடிமறைக்க முனைந்தாலும், யதார்த்தம் எப்போதும் கிடுக்குப்பிடியால் சிறீலங்காவின் உயிர் நிலையை நெரிக்கவே செய்யும்.**

இந்த நிலையில், யாராலும் உரிமை கோரப்படாத கொழும்புக் குண்டு வெடிப்பு. தமிழர் தாயகத்தில் சிங்களக் கொடியேற்றிய குதூகலத்தின் அறுவடைக்கு சிங்கள நாடும் அரசும் தாங்காது.

**- சுப்பு**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சர்வதேசத்திற்கு தீர்வுத்திட்டம் தமிழினத்திற்கு போர்த்திட்டம்

மூன்று வருட ஆட்சி நிறைவை, சந்திரிகா அரசாங்கம் அடைந்துவிட்டது. அந்த நிறைவுநாளை அடுத்து, கூட்டப்பட்ட பாராளுமன்றக் கூட்டம் போதிய உறுப்பினர்கள் வராமையினால் ஒத்திவைக்கப்பட்டது. மூன்று ஆண்டில் சாதித்ததாக எந்தச் சாதனையை பிரமாதப்படுத்துவது! என்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களின் அங்கலாய்ப்பு, வராமைக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

சிங்கள – தமிழ்மக்களுக்கென எத்தனையோ அரசியல் – பொருளாதார வாக்குறுதிகளை ஆட்சிக்கு வருமுன் அம்மையார் வழங்கியிருந்தார். வாழ்க்கைச் செலவீனத்தை குறைத்து – வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் இருந்து, இனப்போரை நிறுத்தி – பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவது வரை பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வழங்கியிருந்தார். இந்த மூன்று வருடத்தில் எதுவுமே நிறைவேற்றப்படவில்லையென சிங்கள அரசியல் விமர்சகர்கள் பிரகடனப்படுத்துகின்றனர்.

தமிழர்களின் பட்டணங்களை அழித்து – ஆக்கிரமிக்கும் ஒவ்வொரு இராணுவ வெற்றிச் செய்தியுடனிம் – ஒவ்வொரு கிரிக்கெட் வெற்றிச் செய்தியைத் தொடர்ந்தும், சிங்களவர் மகிழ்ச்சியடைந்திருக்கும் பொழுது, பொருட்களின் விலைகள் கூட்டப்படுகின்றன.

போரின் கொடூரத்தையும் – அது ஏற்படுத்தும் அவல விளைவுகளான அநாதைகள் – விதவைகள் சோக வாழ்வையும் – அன்று நயம்பட உணர்ச்சிபூர்வமாக எடுத்துரைத்து வாக்குக்கேட்ட தேர்தல் காலம் நினைவுக்கு வருவது தவிர்க்கமுடியாதுள்ளது.

இலங்கைத் தீவின் வன்முறை அரசியல் போக்கிற்கு தந்தையை இழந்த ஒரு அனாதைப் பெண்ணாக தன்னை உதாரணம்காட்டியும் – கணவனைப் பறிகொடுத்த ஒரு விதவைத்தாயாக தன்னையே சுட்டிக்காட்டியும் அவர் செய்த உணர்ச்சிமிகு தேர்தல் பிரச்சாரம் கைமேல் பலன்கொடுத்தது. சிறீலங்காவின் தேர்தல் வரலாற்றில் அம்மையாரின் வெற்றி, ஒரு சாதனையாகப் பதியப்பட்டது. அமைதிப்புறா, சமாதானத்தேவதை என்ற பட்டங்களும் சூட்டப்பட்டன. ஆனால் நடந்தது என்ன!

இலங்கைத்தீவின் வரலாற்றில் என்றுமே இல்லாதவகையில் கடந்த இரண்டரை வருடத்தில் – சந்திரிக்காவின் ஆட்சியில் – மனித உயிர்கள் அழிந்தொழிந்துள்ளன. தமிழ் – சிங்கள இனங்களைச் சேர்ந்த சுமார் 12 000 பேர் இந்த இரண்டரை வருடப் போரில் இறந்துள்ளனர். பல்லாயிரம் இளம் பெண்களும் – குழந்தைகளும், விதவைகள் அல்லது அநாதைகள் என்ற வகைக்குள்அடங்கி துயரவாழ்க்கை வாழ்கின்றனர். இடப்பெயர்வுகளாலும் – பட்டினிகளாலும் பல இலட்சம் தமிழர்கள் வதைக்கப்படுகின்றனர். எனினும், சந்திரிகா அரசாங்கம் போரை மேலும் தீவிரப்படுத்துகின்றது. தமிழர் ஊர்கள் ஒவ்வொன்றாக சிதிலமாக்கப்பட்டு, கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆக்கிரமிப்புப் படைகளின் ஆட்சியின் கீழ் தமிழ்மக்களின் வாழ்க்கை நசிந்து – நகர்கிறது.

சமாதானம் பற்றியும் – போர் ஒழிப்புக் குறித்தும் உணர்ச்சி பூர்வமாக உரைகள் ஆற்றிய அம்மையார், இப்போது போரின் அவசியம் குறித்தும் – போர் விரிவாக்கம் பெறவேண்டிய தேவையை விளக்கியும் முழங்கி வருகின்றார்.

***சமாதானச் சங்கை ஊதியும் சிங்கள மக்களது ஆதரவைப் பெறமுடியும் – போர்முரசு தட்டியும் அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற விநோத உளவியல் மனதுடன் சிங்கள மக்கள் உள்ளனர்.***

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கள தேசத்து அரசியல், சிங்கள – பௌத்த பேரினவாதச் சித்தாந்தத்திலேயே மையங்கொண்டுள்ளது. சிங்கள பௌத்தர்களுக்கென்றே கௌதமபுத்தர் கொடுத்த புனிதத்தீவாக, இலங்கைத் தீவை அது கருதுகின்றது. எனவே, மற்றைய இனங்களுக்கு – மதங்களுக்கு தீவு சொந்தமல்ல. வேண்டுமானால் ‘மரம் மேல் படரும் கொடியாக’ இருந்துவிட்டுப்போகலாம் என்பதே அதன் அரசியல் நிலைப்பாடு.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நன்னம்பிக்கை முனையாய் நின்ற

# பன்னிரு வேங்கைகள்

தமிழீழ மக்களின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்விற்கோர் தலைவிதி வரைய முற்பட்ட இந்திய–இலங்கை ஒப்பந்தத்தையும்; அதன் தாரதம்மியத்தையும் ஆற அமர எடைபோட முற்படுவோர்க்கெல்லாம் தற்போது பத்தாண்டு கால அவகாசம் வந்து வாய்த்திருக்கிறது. மேற்படி ஒப்பந்தத்தில் சிறிலங்கா அரசு இதயசுத்தியுடன் கையொப்பமிட்டிருக்குமானால் இப்பொழுது எதற்காக ஓர் புதிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்ற கேள்வி கேட்பாரின்றியே காற்றில் கிடக்கிறது. இத்தகைய கேள்விகளையும்; அதற்கான பதிலையும் தம் ஈகத்தால் எழுதிவைத்தவர் பலர். அவர்களில் மிக முக்கியமானவர்கள் தளபதிகள் குமரப்பா, புலேந்திரனுடன் பன்னிரு வேங்கைகளுமாவர். தமிழீழப் போர் என்பது சிறீலங்கா, தமிழீழம் என்ற இரு பக்கங்களை மட்டும் கொண்டதல்ல; அது சிறீலங்கா, இந்தியா, தமிழீழம், என்ற முக்கோண அச்சைக் கொண்டதென்ற உண்மையை உலகின் முன் அரங்கப்படுத்த தீருவில் வெளியில் தீயானவர்களும் இவர்களே.





இலங்கைத் தீவின் சுதந்திரம் வெளிப்படையானதல்ல; சுதந்திர சாசனத்தில் கையொப்பமிடும்போதே அதில் பல தவறுகள் திட்டமிட்டபடி நிகழ்த்தப்பட்டிருந்தன. அந்தத் தவறுகளின் மீது மோதிய எதிர்விசையே தமிழீழப் போர். இந்தப் போர்ப் பயணத்தில் பன்னிரு வேங்கைகளின் தியாகமே சடுதியான மாற்றத்தை ஏற்படுத்திய புள்ளியாகும்.

15–ம் நூற்றாண்டில் ஆபிரிக்கக் கடல் வழியாக இந்தியாவிற்கு வழிதேடிய ஐரோப்பிய மாலுமிகள் தென்னாபிரிக்க முனையைக் கடக்க முயன்றபோது கடும் புயலினால் தாக்குண்டதும், அதற்கு 'புயல் முனை'யெனப் பெயர் சூட்டினர். இதை மறுதலித்து புயலைக் கடப்போரே சீரான வழியைக் காண்போரெனக்கூறி, அதற்கு மறுபடியும் 'நன்னம்பிக்கை' முனை என்று பெயரிட்டு, இந்தியாவைக் கண்டுபிடிக்க வழிசமைத்தவன் ஸ்பானிய அரசனான 3–ம் ஜோன். இந்தப் புயல் கடந்த பயணமே இன்றைய விஞ்ஞான உலகின் வரவிற்கு வழிசமைத்தது என்பது அனைவரும் அறிந்த வரலாறு. இதுபோலவே தமிழீழப் போர்ப் பாதையிலும் முதலில் புயல் முனையாகவும் பின் நன்னம்பிக்கை முனையாகவும் வழிகாட்டியவர்கள் பன்னிரு வேங்கைகளாவர். இவர்களின் தியாகத்தின்பின் இந்தியப் படைகளுடன் ஏற்பட்ட பயங்கர மோதலை; கடக்க முடியாத புயலென வர்ணித்தவர் பலர். ஆனால் தமிழீழத்திலிருந்து இந்தியப் படை அகன்ற பின்னர், அந்தப் போர் கடந்தது புயல்முனையல்ல பல வெற்றிகளுக்கு ஆதாரமாக அமையப்போகும் நன்னம்பிக்கை முனையென எல்லோராலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படியே தமிழீழப் போரும் நம்ப முடியாத வெற்றிகளையெல்லாம் நிகழ்த்தியவண்ணம் சென்றது. அத்தகைய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலுமே தமிழீழம் தன் தொப்பியைக் கழற்றி மரியாதை செலுத்தக் கடப்பாடுடையோராக உயர்வு பெற்று நின்றவர்கள் பன்னிரு வேங்கைகளுமாவர். ஏனெனில், போராட்டக் களத்தில் இந்தியப் படைகளுடனான மோதலைத்தாண்டியதானது. புலிகள் அணி இனிவரும் எத்தடைகளையும் தாண்டவல்லது என்ற உண்மையை நிரூபிப்பதாயிருந்தது. அந்தப் பெருமைக்குள் மறைந்து நிற்கும் நாயகர்களே பன்னிரு வேங்கைகள்.

தமிழரின் தாயக பூமியான வடக்கையும், கிழக்கையும் இணைப்பதை இன்றும் கூட அரசதரப்பினர் ஒப்புக்கொண்டதாகவில்லை. இந்திய–இலங்கை ஒப்பந்தம் வடக்குக்கிழக்கு இணைவற்ற ஓர் தீர்வைத் திணித்தபோது, குமரப்பாவும், புலேந்திரனும் ஓர் எழுதப்படாத ஒப்பந்தத்தின் மூலம் அதை நிராகரித்திருந்தனர். இந்த மகத்தான உண்மையை இன்றும்கூட பலர் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. மரணமடைந்த போது குமரப்பா யாழ் மாவட்டத் தளபதியாகவும், புலேந்திரன் திருமலை மாவட்டத் தளபதியாகவும் இருந்தனர். இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து நிகழ்த்திய மரணத்தின் பொருள், வடக்கும் கிழக்கும் மரணத்திலும் பிரிக்க முடியாது கைகோர்த்து நிற்பதையே உணர்த்துவதாயிருந்தது. தமிழர்களின் ஒன்றிணைந்த தாயகக் கோட்பாட்டை வெளிப்படுத்த மனித சக்தியில் இதற்குமேல் ஓர் உயர்ந்த எல்லையை தேடி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






விட முடியாது. ஏனெனில் மரணமடையும்போது தளபதி குமரப்பா திருமணமாகி ஒருமாத காலமே ஆகியிருந்தது. தோளில் போட்ட மாலைகூட வாடிப் போகாத வேளையில் அவர் அந்த எட்டமுடியாத தியாகத்தைப் புரிந்திருந்தார். அவரைப் போலவே தளபதி புலேந்திரனும் மணமுடித்து இரண்டு மாதகாலமே நிறைவுபெற்ற மணமகன் தான். இத்தகைய இக்கட்டான சூழலில் மானிடத்தின் மீது சவால் விடும் பின்னணியில் நின்று இவ்விரு இளைய உள்ளங்களும் புரிந்த தியாகமும்; வடக்கையும் கிழக்கையும் இணைத்துக்காட்டிய விதமும் சாதாரண தியாகங்களல்ல. மணமாலை வாடுமுன்னர் போரில் மாண்ட புறநானூற்றுக்காலப் பூதப் பாண்டியன் புகழை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருந்து தகர்த்து விட்ட வரலாற்றின் குறியீடுகள் இவர்கள்.



தளபதிகள் குமரப்பா, புலேந்திரனும் பதினைந்து போராளிகளும் 03.10.87 அன்று கடலில் கைதானார்கள். ஒப்பந்தத்திற்கு முரணாக கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்படவிருந்த வேளையில் 05.10.87 அன்று சயனைட் அருந்தி பன்னிரு வேங்கைகள் மரணமடைந்தார்கள்.

கைதுசெய்யப்பட்டபோது அவர்கள் தப்பிச் செல்லவேண்டிய தேவை இருந்திருக்கவில்லை. காரணம் இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அவர்கள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட போராளிகளே. எனினும் அவர்கள் கைதின் பின்னர், தலைவர் பிரபாகரன் அவர்கள், "தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. ஆகவே சிறீ லங்கா அரசு எம்மைக் கைதுசெய்யும் பட்சத்தில் இந்தியாவே எம்மைப் பாதுகாக்கவேண்டிய கடமைப்பாட்டிற்குரியது" என்று சுட்டிக்காட்டி இருந்தார். ஆனால் அவ்வேண்டுகோள் இந்திய – இலங்கை அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் இறுக்கமான நிலையையே கடைப்பிடித்தனர். எனினும் கடலில் ஏற்பட்ட இந்த அனுபவமும்; உரிமை நிராகரிப்பும்கூட ஓர் புதிய வரலாற்றுத் தேவையை ஏற்படுத்திவைத்தன. அதன் பொருட்டு உருவாக்கப்பட்டதே கடற்புலிகள் அணியாகும். அன்று அவர்களுக்கு வழங்க மறுக்கப்பட்ட கடற் பாதுகாப்பை ஓர் குறுங்காலத்திலேயே புலிகள் ஏற்படுத்திக்கொண்டனர். இன்று கடற்புலிகள் பெற்றுள்ள அபார வளர்ச்சி, சோழ சாம்ராஜ்யத்திற்குப் பின்னர், தமிழன் பெற்ற பேரெழுச்சியாகும். இந்த வளர்ச்சிக்குப் பின்னாலும் நிழல் போலத் தெரிவது பன்னிரு வேங்கைகளினதும் தியாக முகங்களே.



மேலும், தமிழீழ அரசு பற்றிய அங்கீகாரமும் இக்காலத்தில்தான் தெளிவாக வரையறை செய்யப்படுகிறது. அரசு என்றால் என்ன என்பதற்கு நீண்டகாலமாக எண்ணற்ற அறிஞர்கள் தோன்றி தமது வரைவிலக்கணங்களைக் கூறிக் கொண்டார்கள். அதுபோல தமிழீழ அரசுக்கும் ஓர் எல்லை வகுத்துத்தந்தவை இந்திய இலங்கை அரசுகளே. உண்மையாகவே இலங்கை ஒற்றைத் தேசியமுள்ள நாடாக இருந்தால் இந்திய இராணுவம் தீவு முழுவதும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களிலேயே முகாமிட்டிருந்தார்கள். அவர்களது பணி மலையகம் தவிர்ந்த தமிழீழத்தேசியம் நிலவும் பகுதிகளுக்குள்ளேயே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் இலங்கை பல்லினத் தேசியமுள்ள நாடென்பதை அவர்கள் தெளிவாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுடனான போரில் இந்திய இராணுவம் நகர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிறம் தீட்டினால், அதுவும்; இன்றைய தமிழீழத் தேசத்திற்குரிய வரைபடமும் ஒன்றாக இருக்கும் அதிசயத்தைக் காணமுடியும். ஆகவே தான் போருக்காக அணிவகுத்து நின்ற இந்திய இராணுவம் தன்னை அறியாமலே தமிழீழத்திற்குரிய வரைபடத்தையும் வரைந்து சென்றுள்ளதெனலாம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்









மேலும் சோவியத் யூனியனின் குலைவுடன் ஒற்றைத் தேசியக்கோட்பாடும் உலகளாவிய ரீதியில் சுரத்திழந்துவிட்டது. அல்லாமலும் தமக்குள் இணையும் நாடுகளின் ஒன்றியங்கள் யாவுமே பல்தேசிய அடையாளங்களை அங்கீகரித்த பின்பே இணைவுபடுகின்றன. இலங்கைத்தீவில் இவ்வளவு இழப்புக்களும், பொருளாதாரப் பின்னடைவுகளும், நெடிய போரும் நிலவும் சூழலில் இரட்டைத் தேசியம்கூட ஏற்கப்படாதிருப்பது கூர்ந்து நோக்கற்குரியது.

இருந்தபோதும் தம்மீது நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு சிதைவுகளின் போதும் ஈழத் தமிழ் மக்கள் ஓர் இலட்சியத்திற்காகவே உறுதியுடன் அணிதிரள்கின்றனர். வடமராட்சி மீதான தாக்குதல் நடைபெற, கரும்புலிகள் தாக்குதல் அறிமுகமாக வேண்டியிருந்தது. ஐந்தம்சக் கோரிக்கைக்காக திலீபன் ஈகம் புரியவேண்டியிருந்தது. அதிகாரமற்ற இடைக்கால அரசுக்கான பேரம்பேசலில் பன்னிரு வேங்கைகளின் தியாகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அமைதி ஒப்பந்தம் முறிவடைய போர் தொடங்கியது. முதற் பெண்புலி 2-வது லெப்டினன்ட் மாலதியின் தியாகம் நடைபெற அதன்வழி எண்ணற்ற நட்சத்திரங்களாலும், அவற்றை மறைக்க வந்த மேகங்களாலும், இடி முழக்கங்களாலும் தமிழீழப் போர்வானம் நிறைந்துபோய் பத்தாண்டுகள் கடந்துவிட்டன. மாவீர நட்சத்திரங்கள் நிறைந்து போயுள்ள வானத்தின்கீழ் நின்று, சகல சோகங்களை சுமந்தபடி தமிழீழ மக்கள் களைப்பின்றிக் காத்திருப்பதும் மாவீரர் நேசித்த சுதந்திரத்திற்காகத்தான். "மனிதன் மனிதன்தான் அதற்கு மேல் எவ்வளவு நாள் நீடிக்கும் அவனது வேட்டை!" என்பது பிரான்சிய நாட்டின் தேசிய கீதத்தின் சில வரிகள். இதுவே மனிதனால் மேற்கொள்ளக்கூடிய ஆக்கிரமிப்பு எண்ணத்திற்கு வரையப்படும் கடைசி எல்லைக்கோடாகும். பன்னிரு வேங்கைகளின் பின் முடிந்துவிட்ட பத்தாண்டுகளை எடைபோட்டால், குண்டு வீச்சு, உணவுத்தடை, உலகால் துண்டிக்கப்பட்ட தனிமை யாவுமே தமிழீழ மக்கள் இனிமேல் சந்திப்பதற்கு பெரிதாக எதுவுமில்லை என்ற நிலையை உருவாக்கிவிட்டது. எனினும், அவர்கள் கடந்துகொண்டிருப்பது புயல் முனையை அல்ல நன்னம்பிக்கை முனையையே என்பதை வரலாறு நிச்சயமாக எழுதவேண்டி இருக்கும். ஏனெனில், குமரப்பா புலேந்திரனுடன் பன்னிரு வேங்கைகளின் காலத்திலேயே அவர்கள் புயலைக் கடந்து போகப் பயிற்சி பெற்ற இனமாகி விட்டனர்.

★★

## சமூக வாழ்வு?

படலையைத் திறந்தேன்,
பிசாசுகளே கண்ணில் பட்டன.
"சுடலைக் குருவிகள்"
ஆங்காங்கே வீதிகளின் விளிம்பில்
என்னைத் தின்னுமாற்போல்
பற்களை நறுமின அவை.
அதட்டல் குரல்கள்
துப்பாக்கிச் சன்னங்களாய்
என்னில் பட்டு வெடித்துச் சிதறின
அறியாத குரல்...
புரியாத மொழி... இவை
மேலுமென்னை அச்சமூட்டின.
நிறுத்தவும் என்னை...
உறுத்தவும் யார் இவர்கள்?
எனது நிலம்,
எனது வீதி,
ஏன் கலங்க....
எதற்காக நான் முடங்க....?
திரும்பத் திரும்ப அவை
என்னில்....
வார்த்தைக் கணைகளை ஏவின.
'தட்டு கொட்டு' என
நீண்டது வெறித்தனம்
எனக்கோ...
வார்த்தைகள் கொதித்தெழுந்தன.
'அறைய' வேண்டுமாற் போல்
கைகள் விறுவிறுத்தது
செல்லுமிடம் கேட்டால்
சொட்டும் பிடிக்காது எனக்கு
இது அருவருத்த வாழ்வு!
ஆத்திரம் என்னை ஆவேசப்படுத்தியது.
யார்; யாரிடம் காட்டுவது, என்றது
என் பையிலிருந்த அடையாள அட்டை
பொறுமையிழந்தவனாய்....
நாடி நாளமெல்லாம்
கோபம் புடைத்தோட
என்னுள் நான் நின்று வெடிக்கிறேன்.
இதயம் நிறைந்து...
ரவைகளாய் குத்தியது.
இதற்குத்தான் பெயரா
சமூக வாழ்வு?
எனது நிலம்...
எனது வீதி...
ஏன் கலங்க...
எதற்காக நான் முடங்க...?

- வேலணையூர் சுரேஸ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சர்வதேசத் தலையீடு

**பற்றிமாகரன் B.A, Bsc,**
*Special Diploma (University of Oxford)*

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு யுத்தத்தில் ஒரு பகுதிக்குச் சாதகமான எந்தச் செயலைச் செய்தாலும் அது தலையீடு ஆகும் என்பது "தலையீடு" என்பதற்கு விளக்கமாக அமைகிறது.

இவ்வகையில் அமெரிக்கா தனது ஆதிபத்திய இறைமை எல்லைக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலுள் சேர்த்திருப்பது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் சர்வதேசத் தலையீடாக அமைகிறது.

சர்வதேசத் தலையீடு என்று இனங்காணப்படும் எந்தப் பிரச்சினையும் சர்வதேசப் பிரச்சினையாக மாறுகிறது. ஆகவே இனியும் இலங்கைத் தீவில் உள்ள தமிழர் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்ற அடைமொழிக்குள் எடுத்து நோக்க இயலாது என்பது நிரூபணமாகின்றது. இந்நிலையில் சர்வதேசப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு பொறுப்புவாய்ந்த சர்வதேச அமைப்பாக உள்ள ஐக்கிய நாடுகள் சபை தமிழீழ மக்கள் குறித்த இந்த சர்வதேசப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உடனடி நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளின் முதன்மை நிகழ்ச்சி நிரலாக, தமிழீழ மண்ணில் நிலைகொண்டு தமிழீழ மக்களை பகிரங்க இன அழிப்புச் செய்து வரும் சிறீலங்கா இராணுவத்தை வாபஸ் பெறும்படி சிறீலங்காவுக்கு மேலான தனது அழுத்தங்களை ஐக்கியநாடுகள் சபை கையாள வேண்டும். ஏனெனில், சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தின் நடைமுறைச் சாதனமாக உள்ள இந்த இராணுவ ஆக்கிரமிப்பு உள்ளவரை அரசியல் தீர்வுக்கான சூழ்நிலை உருவாக விடாது தடுப்பதுடன் எதிர் விளைவுகளையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும். இவ்விடயத்தில் 'மைக்கல் வலஸரின்' அதிமுக்கிய கூற்றான 'ஆக்கிரமிப்பு' என்பது யுத்தக் குற்றங்களுக்கு வழங்கப்படும் பெயராக உள்ளது. யுத்த நிறுத்தத்தினால் மட்டும் உரிமைகளுள்ள அமைதியை உருவாக்க முடியாது. 'சுதந்திரமும் பாதுகாப்பும் உருவாவதற்கான நிபந்தனையாக ஆக்கிரமிப்பு இல்லாநிலை அமைகிறது' என்பதனை நாம் மிக ஆழமாக எடுத்து நோக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இந்த ஆக்கிரமிப்பு இல்லாநிலையை உருவாக்கி, தமிழீழ மக்களின் பாதுகாப்பான அமைதியை மீண்டும் நிலைநிறுத்தப் போராடும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களின் உரிமைகளை மறுக்கக்கூடிய



செயற்பாட்டை அமெரிக்கா எதற்காக தனது நாட்டில் எடுக்க வேண்டும்? தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தால், அமெரிக்காவுக்கு எதிராகவோ அல்லது வேறு எந்த நாட்டிற்கு எதிராகவோ எந்தச் செயற்பாடுகளும் இடம்பெற்றதில்லை. அமெரிக்க மக்களுடைய காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தினால் தமிழீழ மக்கள் கவரப்பட்டு அமெரிக்கத் தலைவர்களான ஆபிரகாம்லிங்கன், வூட்ரோவில்சன், ரூஸ்வேல்ட் ரூமன் போன்ற பலருடைய பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்கு தமிழர்கள் பெயரீடு செய்துள்ளனர். அமெரிக்கன் மிஷனுடைய இறைபரப்புப் பணியாலும், கல்விப்பணியாலும் தமிழீழ மக்களுக்கும் அமெரிக்க கலாச்சாரத்துக்குமிடையே நீண்டகால நட்புறவு உண்டு. தமிழீழ வரலாற்றில் பிரித்தானிய காலனித்துவ அமெரிக்க மிஷன்மாரின் கல்விப்பணிகளால் ஆசியாவிலே முதன்முதல் மருத்துவப் படிப்பு மானிப்பாய் கிறீன் வைத்திய சாலையில் ஆரம்பமாகி பின்னர் வேலூர் மருத்துவக்கல்லூரியாக தமிழகத்துக்கு இடமாற்றப்பட்டது. அத்துடன் ஆசிய மொழிகளில் முதலில் விஞ்ஞான நூல்கள் கணித நூல்கள் வெளியான மொழியாகவும் தமிழ் மொழி சிறப்புப்பெற்றது. அத்துடன் மேலைத்தேய கல்வி சிந்தனைகளின் வழி வளர்ந்த தமிழீழ மக்கள் வலதுசாரிகள் என ஒரு காலத்தில் இடதுசாரிகளால் நாமகரணம் சூட்டப்பட்டதினாலேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இடதுசாரி நாடுகள் அங்கீகரிக்க தயங்கின என்ற உண்மையையும் அமெரிக்கா மறுக்கமுடியாது. ஆகக் கூட்டுமொத்தமாக நோக்கினால் அமெரிக்கா — தமிழீழ மக்களின் நேச உறவு, தமிழீழ மக்களுக்கு சோதனைகளையும் கூடத் தேடிக்கொடுத்துள்ளது. அத்தகைய ஒரு தேச மக்களின் விடுதலை இயக்க

> **தமிழ் மக்களைப் பாதுகாத்து அவர்களது சுயநிர்ணயப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா.க்கு உண்டு.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மான தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கப் பட்டியலில் சேர்த்ததின் மூலம் அமெரிக்கா தனக்குத்தானே கரிபூசிக் கொண்டுள்ளது. ஆயினும் அமெரிக்காவின் இச் செயற்பாடு தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எந்தவித நேரடித்தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இதற்குக் காரணம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்களுடைய உயிர்த்தியாகங்கள் ஊடான தேசிய எதிர்ப்பு. அதற்கான ஆயுத உதவியோ நிதியீட்டல்களோ அமெரிக்காவிடம் இருந்து பெறப்பட்டதாகவும் இல்லை. எனவே, அமெரிக்காவில் மட்டும் அமுலாக்கப்பட்டுள்ள இந்தப் பட்டியலில் தமிழீழ மக்களை நேரடியாகத் தாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிகக்குறைவாகவே காணப்படுகிறது.

ஆனால் அமெரிக்காவின் இந்தச் செயற்பாடு சர்வதேசத் தலையீடு தமிழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உண்டு என்பதை மட்டும் உலகுக்கு தெளிவாக்கியுள்ளது. அமெரிக்கா மிகப் பலம்பொருந்திய நீதித்துறையையும் காவல்துறையையும் கொண்ட நாடு. அந்த நாட்டில் நடைபெறக்கூடிய எத்தகைய குற்றச் செயல்களையும் அமெரிக்க நீதித்துறை சட்டத்துறைகளைக் கொண்டு ஒடுக்குவதற்கான வலிமை அமெரிக்க அரசுக்கு உண்டு. அமெரிக்கா வாழ் தமிழர்களின் செயற்பாடுகளில் ஏதாவது தவறுகள் காணப்பட்டால், அவர்களையும் இதே சட்ட நீதித்துறை விசாரணைக்கு உட்படுத்தலாம். அதை விடுத்து தமிழீழ மண்ணில் அமெரிக்காவுடன் எவ்வித தொடர்பும் இல்லாது, காலனித்துவத்தால் உருவாக்கப்பட்ட அந்நிய அரசொன்றின் ஆட்சியில் இருந்து, தம்மை விடுவிப்பதற்குத் தேசிய விடுதலைப் போராட்டம் ஒன்றை நடாத்திக்கொண்டிருக்கும் ஒரு விடுதலை இயக்கத்தின் நற்பெயருக்கும் புகழுக்கும் அபகீர்த்தி ஏற்படக்கூடிய முறையில் அமெரிக்கா நடந்துகொண்டது ஏன் என்பதை தமிழர்களால் விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது.

இந்நேரத்தில் தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டம் எனும் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் விரைவுபடுவதைத் தடுப்பதற்காக சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கம் எடுத்துவரும் சர்வதேச சதிவலைக்குள் அமெரிக்கா வீழ்ந்துவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது. இத்தனைக்கும் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடே காலனித்துவ ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் உச்சரித்த மொழி என்பதை அமெரிக்காவால் மறுக்க முடியாது. இந்த சுயநிர்ணய உரிமை இனமொன்றின் கூட்டுரிமையை (*Collective rights*)



வற்புறுத்தி வெளிப்படுத்தப்பட்டது. அதனை எதிர்த்த அப்போதைய காலனித்துவ பிரித்தானிய ஏகாதிபத்திய சிந்தனையாளர்கள், இனமொன்றின் கூட்டுரிமையை மறுத்து தனிமனிதனுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டால் அது போதுமென மனித உரிமை (*Human Rights*) கோட்பாடுகளை வலியுறுத்தினர். ஆயினும், ஐ.நா. சபையின் சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் சுயநிர்ணய உரிமையையும் பிரிக்கப்பட முடியாத உரிமையாக பிரகடனப்படுத்தியது. பின்னர் காலனித்துவத்திலிருந்தும், காலனித்துவ விலகலின்பின் காலனித்துவத் தவறுகளின் வழித்தோற்றம் பெற்ற நவகாலனித்துவ ஆட்சிகளிலிருந்தும், தேசிய இனங்கள் விடுதலை பெறுவதற்கான போராட்டங்களுக்கு சர்வதேசச் சட்ட அங்கீகாரமளிக்கும் ஐ.நாவின் சக்தியாக 1960களை அடுத்து சுயநிர்ணய உரிமை வளர்ச்சி பெற்றது. அந்த சுயநிர்ணய உரிமையினை உபயோகித்து தமிழீழத்தேசிய இனம் தனது தனி ஆட்சி அதிகாரத்துடன் திகழ்ந்த தமிழீழத்தேசத்தை மீளப்பெறும் புனிதமான போராட்டத்தை நடாத்துகையில் அதனை தலைமை தாங்கி முன்னெடுக்கும் சுதந்திர போராட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா பயங்கரவாத இயக்கமெனப் பட்டியலிட்டு உள்ளமை அமெரிக்கா தனது அரசியல் சாசனத்தை உருவாக்கிய தனது மூதாதையர்களின் முகத்தில் கரிபூசிய செயலாக நாளைய வரலாற்று ஆய்வாளர்களால் விமர்சிக்கப்படப்போகிறது. முன்னாள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல்யமான அரசியல் விமர்சகருமான டொனி பென் பலஸ்தீனிய விடுதலை இயக்கம், அயர்லாந்து புரட்சிகர இராணுவம் என்பவற்றை மையமாக வைத்துக்கூறிய "ஒரு தேசிய இனத்தின் தேசத்தலைவன் இன்னொரு தேசத்தவரால் பயங்கரவாதியாக கூறப்படுகிறான்'' என்ற கிண்டல்மொழிதான் அமெரிக்காவின் செயற்பாட்டை விமர்சிக்கப் பொருத்தமானதாக உள்ளது. அதேவேளை இச் செயற்பாட்டை இந்திய உபகண்டத்தின் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய பலதுறைகளில் இணைத்தும் பார்க்கப்படுகிறது.

எவர் எதைச்சொன்னாலும் தமிழீழ மக்களுக்கு இவைகள் எல்லாவற்றையும் விட முக்கியமானது தமது விடுதலை உணர்வை அமெரிக்கா அவமதிக்கின்றது என்பதே.

இவ்விடத்தில், 'மிருகங்களின் ராச்சியத்தில் சாப்பிடு அல்லது சாப்பிடப்படுவாய்' என்பதே சட்டம். அதேபோல்

**தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டம் எனும் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் விரைவுபடுவதைத் தடுப்பதற்காக சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கம் எடுத்துவரும் சர்வதேச சதிவலைக்குள் அமெரிக்கா வீழ்ந்துவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது.**



www.tamileelamarchive.com

மனிதர்களுடைய இராச்சியத்தில் 'வரை விலக்கணப்படுத்து அல்லது வரை விலக்கணப்படுத்தப்படுவாய்' என்பதே சட்டம் என்ற மொழியை தமிழீழ புலம் பெயர் மக்கள் ஆழமாக சிந்திக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர். நாம் நம்மை, நாம் தமிழீழ தேச மக்கள், எங்கள் தேச மீட்புக்கான எமது மறு உருவமே தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதை ஆழமாக வேகமாக வரைவிலக்கணப்படுத்துவதில் காட்டிய அசட்டையீனங்களும் சுயநலங்களும் தான் இன்று எமக்காக தங்கள் உயிரை, வாழ்வை தமக்குள்ள அத்தனையுமே அர்ப்பணித்து எமது தேசத்தை மீட்கப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா தவறாகப் புரிந்து கொள்ள வைத்துள்ளது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எனவே, இன்று சர்வதேசப் பிரச்சினையாக தெளிவாக உணரப்படும் எமது தமிழீழ தமிழ் மக்கள் பிரச்சினையை, இனிமேலும் உள்நாட்டுப் பிரச்சினை, பெரும்பான்மை — சிறுபான்மை இனப்பிரச்சினை, சிறீலங்காவின் இறைமைக்குள் உள்ள பிரச்சினை என்ற நிலைப்பாடுகளை விலக்கிவிட்டு, சர்வதேசப் பிரச்சினையாக ஐக்கிய நாடுகள் சபை எடுத்து நோக்கி சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகளை வாபஸ்பெற வைத்து, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவைக்குமாறு ஐ.நா.வை வலியுறுத்துவோமாக.

அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் அவர்கள் ஐ.நா.வின் ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கூறிய சூளுரையான "இன அழிப்பு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சர்வதேச குற்ற விசாரணை நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டும்'' என்பதனை நினைவுறுத்தி, தமிழர்களின் பகிரங்க இன அழிப்பினையே தனது அரசியல் செயற்திட்டமாக கொண்டு திகழும் சந்திரிகா அரசின் உண்மை நிலையை அவர் உணர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், பலஸ்தீனிய விடுதலை இயக்கம், தென்னாபிரிக்கா விடுதலை இயக்கம் போன்று ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பதை அமெரிக்க அரசு வெளிப்படுத்தவேண்டும் என உலகத் தமிழர்கள் அவரை வலியுறுத்திக் கேட்டு வருகின்றனர்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் தமது நாட்டின் அந்நிய அரசுக்கு எதிராக, அடக்குமுறைகளுக்கு எதிராக போராடும் மக்களுக்கு உதவுவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு எனச்சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய உரிமை அமெரிக்கா வாழ் தமிழின மக்களதும் மனித உரிமை. இதை மறுப்பது அமெரிக்கா மனித உரிமைகளை வன்முறைப் படுத்துவதாகிறது. எனவே எமது அமெரிக்கா வாழ் தமிழ் மக்களுக்கு அவர்களது மனித உரிமைகளை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்வோமாக.

அமெரிக்க அரசின் மீது தமிழீழ மக்கள் வைத்துள்ள மதிப்பும் நம்பிக்கையும் காரணமாகவே தமிழீழ மக்கள் தங்களுக்கு சிறீலங்கா இழைக்கும் அநீதிகள் குறித்து அடிக்கடி அமெரிக்க ஜனாதிபதிக்கு மகஜர்கள் அனுப்பினர். அவர்கள் நம்பிக்கையில் மண்போட வேண்டாமெனவும் புலம்பெயர் தமிழர்கள் அமெரிக்க அரசைக் கேட்டுக் கொள்வதுடன் சுதந்திரத் தீபத்தை கையில் ஏந்தி நிற்கும் சுதந்திரச் சிலையின் கீழ் வாழும் அமெரிக்க மக்களிடம் அந்த சுதந்திர ஒளிக்காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்துப் போராடும் தமிழீழ மக்களுக்கு அவர்களின் அரசின் ஆதரவை தேடிக் கொடுப்பதற்கு உதவுமாறும் கேட்டுக் கொள்கின்றனர்.

### அமெரிக்காவின் விடுதலைப் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டை எதிர்த்து

## தமிழகத்தில் பரவலான போராட்டம்



- விடுதலைப்புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்த அறிவிப்பை கேள்வியுற்றதும் பாட்டாளி மக்கள் கட்சி, அதன் தலைவர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் போராட்டத்தில் இறங்கியது. அமெரிக்க தூதரகத்தின் முன் பல நூற்றுக்கணக்கான பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்கள் திரண்டு போராட்டம் நடத்தினர்.
- மார்க்சிய லெனினிய கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தில், அமெரிக்க தேசிய கொடியை எரித்து தமது எதிர்ப்பைக் காட்டிய 60 பேர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.
- ஒகடோபர் 10–ம் திகதி பெங்களூரில், தனித்தமிழர் கழகம் போராட்டத்தில் ஈடுபட்டது. கொடும்பாவி எரிப்பிலும், கொடி எரிப்பிலும் அங்கு திரண்ட மக்கள் ஈடுபட்டனர். திரு. குணா, திரு. தேவதாஸ், திரு. ராவணன் தலைமையில் நடந்த இப்போராட்டத்தில், தமிழ் நாட்டிலிருந்து திரு. நகைமுகனும் சென்று கலந்து கொண்டார்.
- நவம்பர் 12–ம் திகதி தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு பல இடங்களில் போராட்டம் நடாத்தியது. மதுரையில் திரு. பழ. நெடுமாறன், சென்னையில் திரு. பெ. மணியரசன், திரு. ஆனந்தராஜ், திரு. பன்னீர்ச்செல்வம், சிவகங்கையில் திரு. மெல்ரியோர், திரு. பரந்தாமன், விருதுநகரில் திரு. தியாகு, புதுச்சேரியில் திரு. அழகிரி, கரூரில் திரு. பி. ஆர். குப்புசாமி, நெல்லையில் திரு. வியனரசு, தஞ்சையில் திரு. சி. முருகேசன், திரு. பழனிமாணிக்கம் ஆகியோர் போராட்டத்திற்கு தலைமை தாங்கினர். அமெரிக்க அரசின் கொடும்பாவி மற்றும் கொடியெரிப்பில் ஈடுபட்ட இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் தமிழக அரசினால் கைதுசெய்யப்பட்டனர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கோணேஸ்வரிகளா? யாழினிகளா?

## முடிவு! தமிழீழப் பெண்கள் கையில்.

ஒரு புதிய நிலப் பகுதி தன் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்பதை நிறுவ எல்லா ஆக்கிரமிப்பாளர்களினாலும் தவறாது செய்யப்படுகின்ற விடயங்களில் இது முக்கியமானது. கைப்பற்றப்பட்ட பகுதியில் வாழும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுதான் அந்த முக்கிய விடயங்களில் ஒன்றாகும். இன, மத, மொழி வேறுபாடற்ற எல்லா ஆக்கிரமிப்பாளர்களும் இந்த விடயத்தில் மட்டும் முரண்படாதவர்களாகவே காணப்படுகின்றனர். தாமும் ஆக்கிரமிப்பாளர்கள்தான் என்பதைச் சிறீலங்காப் படைகள் நமக்குப் பல தடவைகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இன்னமும் சளைக்காது உறுதிப்படுத்தி வருகின்றன.

ஒரு பெண்ணாகவும், தாயாகவும், கணவரை இழந்தவராகவும், வன்முறையினால் பாதிக்கப்பட்டவராகவும் உள்ள சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள படைகள், தமிழ்ப் பெண்கள் மீது தொடர்ந்தும் வன்முறையைக் கட்டவிழ்த்து வருகின்றன. தென்தமிழீழத்தில் மட்டும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பெண்களை விதவைகளாக்கி இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தை அரசபடைகள் கைப்பற்றிய பின் அங்கு அவர்களால் செய்யப்பட்ட பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பல மூடிமறைக்கப்பட்டுள்ளன. கிரிசாந்தி, ராஜினி போன்ற ஒரு சிலரின் சம்பவங்களே வெளிவந்தன. அவைகூட 'விசாரணை செய்யப்படுகின்றன' என்ற போர்வையில் இழுத்தடிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பில் சிறீலங்காப் படைகளாலும், அதன் அடிவருடிகளாலும் மேற்கொள்ளப்பட்ட தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் சில இப்போதுதான் மெல்ல மெல்ல வெளிவருகின்றன.

கடந்த வருடக் கடைசியில் மயிலாம்பவெளியில் குடும்பப் பெண்ணான வனிதா இராணுவத்தினர் சிலராலும், தன்னாமுனையில் ராசம்மா, வசந்தா எனும் சகோதரிகள் ஐந்து இராணுவத்தினராலும், கல்குடாவில் சொர்ணம்மா ஏழு இராணுவத்தினராலும், வாழைச்சேனையில் தவமணி, ஜெயந்திமாலா ஆகியோர் சிறீலங்கா காவற்துறையினராலும், மண்டூரில் நான்கு பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண் சிறப்பு அதிரடிப் பிரிவினராலும், நாவற்குடாவில் இளம்பெண் ஒருவர் தமிழ் விரோதக் குழு உறுப்பினர் ஒருவராலும், அம்பாறையில் குடும்பப் பெண்ணான கோணேஸ்வரி காவற்றுறையினராலும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர்.

வனிதா ஊருக்கும் இராணுவத்தினருக்கும் பயந்து தன் அவலத்தை முறைப்பாடு செய்யவில்லை. வசந்தா நஞ்சு அருந்திய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தன்னைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியவர்களை அடையாளம் காட்டிய ராசம்மா இராணுவத்தினரால் மிரட்டப்பட்டார். இவை எல்லாவற்றினதும் உச்சக்கட்டமாக, வைத்திய பரிசோதனையின் போது எந்தத் தகவல்களும் வெளித்தெரியாமல் இருப்பதற்காக படையினர் கோணேஸ்வரியின் உடலில் கைக்குண்டு வெடிக்க வைத்து கொன்றனர்.

இவை யாவும் இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள். முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவங்களுக்கே இன்னமும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனிமேல் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கோ, சம்பவங்களில் ஈடுபட்ட படையினரைத் தண்டிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை எவ்வாறு நம்புவது?

சிறீலங்கா அரச படைகளின் இத்தகைய அரக்கத்தனங்களை, வன்முறையினால் பாதிக்கப்படும் பெண்களைப் பாதுகாக்கின்ற பணியில் தம்மை ஈடுபடுத்தும் அனைவரினதும் பார்வைக்கும் முன் வைக்கின்றோம்.

அது இருக்க, ஏற்கனவே தன்வசம் உள்ள பகுதிகளில் தனது படையினரால் செய்யப்படும் வன்முறைகளைத் தடுக்க அல்லது தவிர்க்க இயலாத அரசு, மேலும் புதிதாக நிலப்பகுதிகளைக் கைப்பற்ற முனைகிறது.

எனவே, தென் தமிழீழம் போன்று வன்னியிலும் இன்னுமொரு பத்தாயிரம் விதவைகள் உருவாகாமல் தடுப்பதோ,

அல்லது,

திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும்



போன்று தமிழ் பெண்களை சிறீலங்காப் படைகள் பாலியல் வல்லுறவுக்குட்படுவதைத் தடுப்பதோ,

யாழினிகளாக மாறுவதோ,

எந்த முடிவும் தமிழீழப் பெண்களின் கையிலேதான் உள்ளது.

நன்றி: சுதந்திரப்பறவைகள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யாழ்ப்பாணம்
12.06.1997

என்றும் அன்புடன் சு–ர–க–ஜீ–செ அறிவது, இன்று நீங்கள் எல்லோரும் முற்று முழுதான ஒரு சந்தோஷத்தை சுதந்திரமாகக் கொண்டாடுகிறீர்கள். இந்த நேரம் நான் உங்களுடன் இல்லையென்ற ஏக்கம். ஆனாலும் இங்கு எம் சார்ந்தவர்களுடன் நாங்களும் எங்கள் சந்தோஷத்தை வெளிக்காட்டக்கூடியதாக உள்ளது.

தாண்டிக்குளம் தடைமுகாம் தாக்குதல் செய்தியைக் கேட்டபோது என் மனம் உங்களையும் வன்னி மண்ணையும் தான் நினைத்துக் கொண்டது. தங்களிடம் ஓடி வரவேண்டும் போல் இருந்தது. எம் நிலையில் எல்லாமே ஒரு கனவுபோலக் கலைந்து விடுகிறது. இப்போது கணநேர சந்தோஷத்தையும் கணநேர வேதனையையும் தாங்கிக் கொண்டு எங்கள் படகு கானல்நீரில் கரைகளைத் தேடுகிறது. ஆனால் நிச்சயம் இந்த நிலை தொடராது எமக்கென்று ஒருநாள் பிறக்கும்; பொழுதொன்று வெடிக்கும்; பூ ஒன்று மலரும், புது விடியல் ஒன்றில் மீண்டும் கைகளை இணைப்போம்; அதுவரை ஒரு சுகமான காத்திருப்பாம்...

நிற்க!

களநிலை என்னமாதிரியுள்ளது. இத்துடன் பாதை திறப்பிற்கான இராணுவ நடவடிக்கை தடைப்படுமா என்பதுபற்றி பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். 'உதயன்' பத்திரிகையில் (12.06.97 திகதியில்) 130 மி.மீ. ஆட்லறி இரண்டைப் புலிகள் கைப்பற்றியதாகவும் 04 டாங்கிகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாதென்றும் செய்தி வெளியாகியிருந்தது. இதைப்பார்க்கும் போது போர்முனை இன்னும் தீவிரமாக இருக்கும் என்பதை அனுமானிக்கமுடிகிறது. ஏதோ எல்லாம் நல்ல படியாக முடிந்து இழந்து போன அந்த நாட்கள் மீண்டும் எம்கைகளில் வந்து இரவிரவாக எமது சுதந்திரப்பாடலை எமது ஊர்வீதிகளில் எல்லோருமாக பாடிக் கொண்டு திரியும் நாளொன்று விரைவாக எமக்குக்கிட்ட விடுதலைப் போருக்குக் கைகொடுப்போம்.

என்றும் உங்கள்
பா.......

# ஜெயசிக்குறு

## எம்மவர்களின் அனுபவம் சோவியத்ரசிய மக்களின் முன்னுதாரணம்

என்னுடைய கவனத்தைக் கவரும் செய்திகள் இரண்டு இன்று கிடைத்தன. ஒன்று செவிவழியாகவும் மற்றையது கடிதமூலமாகவும் கிடைத்தன. அவற்றின் சுவாரஸ்யம் காரணமாக அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

வவுனியாவில் இருந்து ஒப்பரேசன் ஜெயசிக்குறு நடவடிக்கை தொடங்கிய பின் வன்னிக்கு வந்த நண்பர் சொன்னது; சண்டை உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தபோது புலிகள் ஏவிய எறிகணைகள் வவுனியா இராணுவ நிலைகள், விமானத் தளம் மீது வீழ்ந்து வெடித்தன. எறிகணை அதிர்வால் அதிர்ச்சியுற்ற நண்பர் ஒரு சிங்களவரின் கடைக்கு முன்பாகப் பூமித்தாயை சரணடைந்து பாதுகாப்புத் தேடிக் கொண்டார். பயத்தால் பதற்றமடைந்திருந்த நண்பனைப் பார்த்து அந்தச் சிங்கள வியாபாரி கூறினார், "மாத்தயா பயம் வேணா. அது புலி செல் அடிக்கிறது. செல் ஆமிக்குத்தாங் விழும் நீங்க பயம் வேணா இங்க நா நிக்கிறது பாருங்க நீங்க பயம் வேணா".

நீண்ட காலமாகவே இராணுவத்தின் செல் வீச்சை அனுபவிப்பதால், அது அங்கிங்கெனாதபடிக்கு எங்குமே விழுந்து நாசம் விளைத்து உயிர்களைக் குடிப்பதால், அந்த அனுபவத்தையே செல் வீச்சின் இயல்பு என்ற மனப்பதிவைக் கொண்டிருந்த நண்பர் புலிகளின் செல் வீச்சைக் கேட்க நேர்ந்த போதும் பாதுகாப்பைத் தேடி படுத்துப் பதுங்கிக் கொண்டார். ஆனால், ஒரு வருடத்துக்கும் குறவான காலமாகத்தான் புலிகளின் செல் வீச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் அச் சிங்கள வியாபாரிக்கு செல் வீச்சு என்பது இலக்கைத் தாக்கும் ஓர் ஆயுதப் பிரயோகம்; ஒரு போர் நடவடிக்கை என்பது புரிந்து, பதற்றமடையாமல் இருந்ததோடு தமது நண்பரையும் தேற்றினார்! இதுதான் எந்தப் பொருளும் அதைப் பாவிப்பவராலேயே சிறப்படைவதும் மதிப்பிழந்து போவதும் ஆகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஜெயசிக்குறு படையினர் மீது தாண்டிக்குளம்

### – உணர்வுகள் –

நொச்சிமோட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடாத்திய பாரிய அதிரடித்தாக்குதலின் பின் யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்த கடிதம் மேலே உள்ளது. சமாதானத்துக்கான யுத்தத்தின் மூலம் 'புலிகள் பிடி'யில் இருந்து விடுவிக்கப்பட இவர் தன் உடன் பிறப்புக்கள் வாழும் தன் மண்ணின் இன்னுமொரு பகுதி மீது சமாதானத்துக்கான யுத்தம் விடுவிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் போது ஏன் புழுங்க வேண்டும்? விடுவிக்கப்பட்ட ஒரு பிரஜை சந்தோசமல்லவா அடைய வேண்டும்? என்னைப் போலவே எனது மக்களும் விடுவிக்கப்பட்டு நல்லவீதி, சொகுசு பஸ், மின்சாரம், ரெலிபோன், வேலைவாய்ப்பைப் பெற்று சமாதானத்தின் காவலரின் பாதுகாப்பில் மகிழ்ச்சியா இருக்கட்டும் என்றல்லவா எண்ணியிருக்க வேண்டும்? விடுவிக்க வந்த மீட்பர்கள் மரண அடிவாங்கியதை கொண்டாட முனைவானேன்? அவர்களுக்காக கடவுளிடம் வேண்டிக் கொண்டல்லவா இருந்திருக்க வேண்டும்?

இங்கேதான் யதார்த்தம் எம் கண் முன் எழுகிறது தன் மெல்லிய குரலில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஓங்கி உரைக்கிறது. இந்த மனிதனின் வாக்குமூலத்தின் ஊடாக மீட்பர் எனச் சொல்லி வந்த ஏய்ப்பர்கள் எம் மானம் உயிர் என்பவற்றையே விலை கொள்வதால் துடித்துப்போன ஆன்மாவின் குரல் தன்சுயத்துடன் ஒலிக்கிறது. அதனால்தான் தன் பூமியில் தன் உறவுகளாவது சுதந்திரமாக வாழ முற்பட்ட மிகுதிப்பகுதிகளில் தம் இரும்புக் காலணியைப் பதிக்க முற்பட்டவர்கள் தன் தேசத்தின் புதல்வரால் நொருக்கப்பட்ட போது அந்த ஆன்மா உரத்த குரலில் பாட முனைந்தது. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் அது முடியக் கூடிய காரியமா? அதனால்தான் சுதந்திரமாக வாழும் தன் உறவுக்கு கடிதமெழுதி அந்த மனவெழுச்சியைத் தணித்துக் கொண்டது அந்த ஜீவன்.

வரலாற்றின் பக்கங்களில் பதிந்து கிடக்கும் நிகழ்வு ஒன்றினையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் ரஷ்யா மீது ஜேர்மனியின் பாரிய படையெடுப்பு நிகழ்ந்தது. ரஷ்யாவைக் கைப்பற்றுவதனோடு தன்னை எதிர்த்த ஏனைய நாடுகளை அச்சுறுத்த ஹிட்லர் எண்ணியிருக்கக் கூடும். ரஷ்யாவுக்குப் பெரும் அழிவைக் கொடுத்த இந்தப் படையெடுப்பில் ரஷ்ய மக்கள் சொல்லொணாத் துன்பங்களைச் சந்தித்தனர், பல இலட்சம் மக்கள் மடிந்தொழிந்தனர். ஆனால் தோழர் ஸ்ராலின் தலைமையில் போரிட்ட ரஷ்யா படையெடுத்து வந்த ஜேர்மனியப் படைகளின் 3 வருட முற்றுகையை முறியடித்து முன்னேறி ஜேர்மனியின் தலைநகரான பேர்லினை முற்றுகையிட்டு கைப்பற்றின.

1000 மைலுக்கு மேற்பட்ட விநியோகப்பாதையைக் கொண்டிருந்த ஜேர்மனியப் படைகள் சண்டை முன்வரிசையில் எதிர்கொண்ட தாக்குதல்களை விட பின்னணி நிலைகள் விநியோகப்பாதை ஆகியவற்றின் மீது ரஷ்யப் படையினர் தொழிலாளர் ஃபிரண்டுகள் கெரில்லாக்குழுக்கள் என்பன மேற்கொண்ட ஓயாத தாக்குதல்களாலும் சின்னாபின்னமாகித் திரும்பி ஓடின. ரஷ்யத் துருப்புக்களால் முற்றுகையிடப்பட்ட பேர்லின் ஒரு வாரத்தில் சரணடைந்தது.

விடுதலைக்கு உயிர்விலை கொடுத்துப் போரிடும் எமக்கு ரஷ்ய மக்களின் வீரம் செறிந்த போராட்டம் ஊன்று காரணமாயிருந்து நம்பிக்கையளிப்பதுடன் எமது கடமையையும் உணர்த்தி நிக்கிறது அல்லவா? ★




தமிழ் மக்களின் இப்போதைய தலைமைத்துவமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழரின் உரிமைகளை தெளிவாகவும் திடமாகவும் கூறுவதனால், அதே உரிமைகளைக் கூறும் மற்றவர்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர்கள் என முத்திரைகுத்துவது இலகுவானது. நான் தமிழ் ஈழ விடுதைலப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு உடையவனல்ல. அவர்கள் பேரிலோ, அவர்கள் சார்பாகவோ பேச நான் முன்வரவில்லை. எனது சிங்கள சகாக்கள் கொழும்பிலுள்ள அரசை ஏற்றுக்கொள்வதுபோல் நானும் வடக்கில் வாழும் தமிழன் என்ற மட்டிலும் கத்தோலிக்க குரு என்ற மட்டிலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கிறேன். மக்களோடு இணைந்து இனப் பிரச்சினையின் மத்தியில் வாழ்ந்த ஒரு சில கத்தோலிக்க குருக்களில் நானும் ஒருவன் என்பதையிட்டுப் பெருமை அடைகின்றேன். எனது பல்கலைக்கழக நாட்களிலும், பிற்பாடு குருத்தவப் பணிவாழ்வுக்கு முன் எரிக்கரைப் பத்திரிகை நிருபராக கடமையாற்றியபோதும் பெற்ற அனுபவங்கள், வரலாற்று உண்மைகளும் என்னை உறுதிப்படுத்த வழிவகுத்துள்ளன.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சார்பானவன் என்றால் விடுதலைப் புலிகள் செய்வது எல்லாவற்றையும் கண்முடித்தனமாக ஆதரிக்கிறவன் என்று என்னை அர்த்தபடுத்தினால் அது பெரும் தவறு, அநீதியானது. ஆனால், தமிழினத்தால் 1977 பாராளுமன்ற தேர்தலில் அமோகமாக ஆதரிக்கப்பட்டு பின்பு புலிகளினால் வற்புறுத்தப்பட்டு வரும் தமிழ் உரிமைளை, தமிழரின் சுயநிர்ணய உரிமை, நாட்டினம், பிரதேச ஆட்சி, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாத்தல் இவை போன்ற உண்மைகளை எடுத்து வாதாடுபவன் என்று அர்த்தப்படுத்தினால், ஆயிரக்கணக்கான தமிழர்கள் போல், நானும் அப்படியான ஒருவன் என்று சொல்வேன்.

1996 யாழ் திருச்சபையின் சார்பில் ஆயர், குருக்கள், துறவற சபையினர் விடுத்த அறிக்கையொன்று போரையும் மற்றைய வன்செயல்களையும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்தன. அதே வேளையில் தமிழர்களின் மேற்கூறிய அத்தனை கோரிக்கைகளையும் நீதியானதென ஆதரித்தது. ஆகையால் வடக்குத் திருச்சபை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் சார்பானவர்கள் என்று தெற்கிலுள்ள சிங்களத் தேசியவாதிகள் சொல்லலாம்.

இச்சாடுதலின் மறுபக்கத்தில் இருக்கும் உண்மையைக் குறிப்பிடுவது நல்லது என நான் எண்ணுகிறேன். தமிழினப் போராட்டத்துக்காக எழுபவர்கள் அனைவரையும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சார்பானவர்கள் என்று முத்திரை குத்தினால், அதன் அர்த்தம் என்ன? உண்மையில் தமிழ் ஈழ விடுதைலைப் புலிகள்தான் வடக்குக் கிழக்கில் தற்போதைய தலைமைத்துவம்; அவர்கள்தான் நீண்டகாலமான தமிழ்ப் போராட்டத்தின் தற்போதைய கட்டத்தைத் வழி நடத்துகின்றனர் என்பதே.

நான் மேலே விளக்கமாகக் கூறியபடி, தமிழரின் அடிப்படையான கோரிக்கைகளும் தமிழர் போராட்டமும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தை விட நீண்டகால வரலாறு உடையது. மாறிமாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களின் நடைமுறைகள் ஜனநாயத்திற்கொவ்வாத மனிதமற்ற இராணுவ ஒடுக்குமுறைகளைக் கையாண்டு, அரச பயங்கரவாதமாக மாறியதால், தமிழ்ப் போராட்டமும் இராணுவக் கட்டத்தைத் தாண்டியது. அரசானது தனது போர்த்திட்டத்திற்கு சர்வதேச ஆதரவையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ள, தமிழ்ப் பிரச்சினையை வெறும் பயங்கரவாதம் என தனக்குச் சாதகமாக முத்திரை குத்தியது. அடிப்படையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அல்லது மத்தியஸ்தம் வகிக்க சர்வதேச முயற்சிகளை நிராகரித்து விட்டு, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட பணத்திற்கும், ஆயுதங்களுக்கும் தொடர்ந்து பிச்சை எடுக்கிறது, எல்லாத் தமிழர்களும், சிறப்பாகத் தெற்கில் இருப்போரும் இந்த அரசின் வெற்றிக்கு ஆதரவளித்தவர்கள் கூட தமது மௌனத்தால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு சார்பாக இருக்கின்றார்கள் என்று ஜனாதிபதியே குற்றம் சாட்டுகின்றார்.

- அருட்கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அவர்களின் 'என் மக்களை வாழவிடுங்கள்' என்னும் நூலிலிருந்து.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'வெள்ளை'

# ஒரு போராளிக் கவிஞனின் நினைவுக் குறிப்புகள்

ஒரு கவிஞனின் படைப்புகளைப் பிரசுரித்து வரும்போது திடீரென அவனது அஞ்சலிக் குறிப்பை எழுத நேர்வது அதிர்ச்சிதரும் துக்கத்துக்குரியது. அடுத்த இதழுக்கென தயாரிப்பு வேலைகளிலீடுபட்டுக் கொண்டிருந்தபோது, தேர்வாகியிருந்த கவிதை ஒன்றின் கவிஞன் வீரச்சாவடைந்துவிட்டான் என்ற செய்தி வந்தது. 'வெள்ளை' ஒரு போராளி, ஒரு கவிஞன், சமூகவியலிலிருந்து கலை, இலக்கியம் வரை தன் அக்கறையை ஆழமாக்கிக் கற்றுக்கொள்ள விரும்பிய ஆர்வமிக்க இளைஞன். மக்களிடத்தில் ஆழமான அன்பு வைத்தவன். விடுதலையின் மீதான அளவற்ற விருப்பும் சுதந்திர தாகமும் கொண்டவன். வெள்ளையினுள் குடிகொண்டிருந்த கவிஞனே வெள்ளையை ஆளுமை மிக்க போராளியாகத் தொடர்ந்தும் செயலூக்கத்துக்கு விரித்தது. வெள்ளையைப் பற்றி யோசிக்கும்போது எந்த விதமான சம்பிரதாயமுமற்ற வார்த்தைகளுமின்றி இப்படித்தான் எழுத முடிகிறது.

ஒரு போராளியாக இருந்தபோதும் ஒரு கவிஞனாகவே, வெள்ளை வெளிச்சத்துடன் அறிமுகமானான். அது அவனை கலை, இலக்கியத்திலும் படைப்பாளிகளிடத்தும் அறிமுகப்படுத்தியது. தமிழீழத்தின் கலை, பண்பாட்டு, இலக்கிய மேன்மை பற்றிய அவனது ஆவல் மேலும் வெளிச்சத்தோடும் படைப்பாளிகளோடும் அவனை உறவாக்கிற்று. விடுதலைப் போராட்டத்தின் தாற்பரியத்தைப் புரிந்து கொண்டு கலை, இலக்கியப் படைப்பாளிகள் இந்தக் காலத்தில் புதிய படைப்புகளை உருவாக்கி போராட்டத்தை மேலும் புது வேகத்துக்குக் கொண்டு செல்லவேண்டுமென்று தன்னோடு நெருங்கி உறவாடும் படைப்பாளிகளுக்குச் சொல்லுவான். இந்த மண்ணின் புதிய படைப்புக்களை செழுமையுடன் வெளிக்கொண்டு வரவேண்டுமென்பதில் ஒவ்வொரு படைப்பாளியின் பங்களிப்புப் பற்றியும் அவர்களுக்குள்ள பொறுப்புணர்வையும் சுட்டிக் காட்டுவான். மிக இயல்பாக, நட்பின் நெருக்கத்துடன் தன்னுடைய போராட்டக் கருத்தை முன் வைப்பதில் எப்போதும் அவன் வல்லவனாகவேயிருந்தான். இலக்கியத்தில் மட்டுமின்றி கலையின் எல்லாக் கூறுகளிலும் வெள்ளையின் ஈடுபாடு வேரோடியிருந்தது. இசைமீது அவனது ரசனை தனித்துவமானது. அதன் ஈர்ப்பில் அவன் இசைப்பாடல் கூட எழுதியிருக்கிறான். இயக்கத்தின் பணிகளை நிறைவாகச் செய்ய வேண்டுமென்ற அக்கறையோடு கலை, இலக்கியத்தைப் போராட்டத்தின் எழுச்சிக்காகப் பயன்படுத்துவதிலும் கலை, பண்பாட்டுக்கழகத்துடன் அவன் சில வேலைகளைச் செய்வதிலும் முன்னின்று உழைத்தான்.

யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்தபோது வெள்ளை நெருப்பாக நின்றான். அவ்வளவு ஆக்ரோஷம் அவனுக்கிருந்தது. தனது ஊர், தான் தவழ்ந்து, விளையாடி, எழுந்து, நடந்து, உறவாடி,வாழ்ந்த மண் அந்நியனிடம் பறிபோகக்கூடாது என்ற தவிப்பும், அந்நியர்களை அங்கே விட்டுவைக்கக்கூடாது என்ற உறுதியும் அவனுள் தீவிரமாயிருந்தன. தங்கள் ஊரை விட்டுவந்து இங்கே வாழத் தவிக்கும் மக்களைப் பார்த்து அவனடைந்த துக்கம் கொஞ்சமல்ல. துயரப்படுவோரை ஆறுதற்படுத்தினான். போராட்டத்தின் தன்மையையும் அவசியத்தையும் வழிமுறையையும் தெளிவுபடுத்தி அவர்களைப் புதிய வாழ்வில் பதியம் போட்டுவிட்டு வெள்ளை யாழ்ப்பாணத்துள் நுழைந்தான். சந்தி, தெரு, வீடு, முற்றம், கோவில், பள்ளி, கடை, நகரம் என்று பரவி நிற்கும் சிங்கள இராணுவத்தின் கனவுகளைச் சிதைக்கத் தொடங்கினான். ஒரு அதிர்ச்சிமையமாக வெள்ளை அங்கே பரிண



**கப்டன் வெள்ளை**
(கார்த்திகேசு - ரவிதரன்)

கள்ளமில் லாத பிம்பம்
கவிதைகள் ஊறிப் பீறி
வெள்ளமாய் வடியும் நெஞ்சம்.
விடுதலை நெருப்பை மூட்டும்
சொல்; செயல் யாவும் சேர்ந்து
சிகரமாய் நிமிர்ந்த வெள்ளை
இல்லையா இன்று? இல்லை;
இருக்கிறான். இருப்பான் என்றும்.

கற்பனை அதிகம்; இந்தக்
கவிஞனுக் குள்ளே வாழ்ந்த
அற்புதம் அதிகம்; தாய் மண்
அழுவதைக் கேட்டு நெஞ்சில்
கொப்பளித் திட்ட கோபம்
கொஞ்சமா? அதிகம்; ''வெள்ளை''!
பொற்பதி வீதி தன்னில்
போகவா போனாய் தம்பி?

— புதுவை இரத்தினதுரை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வெள்ளையின் கவிதைகள்

## புதுமலர்கள் வாடாது

பூத்துவிட்ட புதுமலரே!
ஏனம்மா வாடிவிட்டாய்
இளந்தளிரே!
நீ பூத்த மறுநாளே
புல்லர்கள் உனை
அழித்துப் போட்டாரோ?

தாய் மடியில்
நீ உறங்கும் வயதினிலே
சாவு வந்து சேர்ந்ததா
அத் தெய்வத் திருச்சபையில்?

சாவுக்குப் பயந்தோடி
இருக்க இடந்தேடி
திரிந்தோரை இரக்கமின்றி
அழித்தொழித்த பாவி எவன்தானோ?
அவனுக்கும் சாவு வந்து சேராதோ?
எங்கள் துயரம் என்றும் ஆறாதா?

போரென்றால் புலியுடனே
போரென்று உலகமெங்கும்
கூறிக்கொண்டு
ஒரு நொடியில்
இருநூறு பேர் தன்னைப்
புலியென்றா பலியெடுத்தாய்?
தெய்வத் திருச்சபையும்
புலிவாழும்
குகையென்றா கணக்கெடுத்தாய்?
நேற்றோடு எம் தேசம்
நெருப்பாகிப் போயாச்சு
இனிமேலும் எம் மண்ணில்
இளம் பூக்கள் வாடாது.

*வெளிச்சம் – புரட்டாதி - 1995*

## விரைவாய் மீளும் எம்தேசம்

நிசப்தமான இரவில் எனக்கு
உறக்கம் வரவில்லை
எனது வீட்டை, ஊரை, உறவை
எண்ணி விழியை நனைத்தேன்.
ஓ! நாளை விடிந்தால்
எனது ஊர்க்கோயில் கொடி ஏறும்
வகை வகையாய் காவடிகள்
வரிசையிலே போகும்
நானும் என் நண்பர்களும்
வெள்ளை வேட்டியுடன் விடியும் முன்பே
உருள்வதற்குச் சென்றிடுவோம்
இவ் வருடம் இது இல்லை
எனக்காக என் தாய் பிடிக்கும்
விரதம்தானே மிச்சம்
காற்றோடு பெருமூச்சு
கலந்தபோது திடீரென்று
ஒலிபெருக்கி பாடத் தொடங்கியது
"எங்கள் தமிழீழ மண்ணில் இனியும்
எத்தனை காலம் இருப்பாய் 'நீ'
பொங்கி எழுந்தது பாராடா எங்கள்
புலிகள் தாயகம் நெருப்பாய்..."
பாடல் வரிகளைக் கேட்டதும்
நிம்மதிப் பெருமூச்சு
என்னை நிறைத்தது.

*வெளிச்சம்*
*ஆனி - 1996*

## நிலையாகப் பகை வாழ முடியாது

செம்மணித் தெரு,
தமிழன் வாழ்ந்ததை சுட்டெரிக்க வந்த
சிங்களத்துச் சூரியக்கதிரிலிருந்து
விடுபடவைத்த
ஒரு வரலாற்றுப் பதிவது.
உலகத்திலுள்ள தமிழனை
ஒன்றாக்கி எழவைத்த
புதியதொரு வரலாற்றின் வடிவது.
மழையில் நனைந்தபடி
அந்தத் தெருவைக் கடந்தோரின்
அழுகை ஒலி எட்டுத்திசை
கடந்தும் இன்னும் ஒலிக்கிறது.
அந்தத் தெருவும் அழுகிறது.
ஊர்பிரிந்து வந்தவரை சுமந்துநின்ற
சிறு தெருவே
எம் ஊரில் வந்தபகை துரத்த
எங்கள் வேங்கைகளை ஏற்றிச் சென்ற
எம்தெருவே
உன்மீது அழுதபடி சென்ற மக்கள்
சிரித்தபடி...
மீண்டும் ஊர்போவார்
மீண்டும் நீ எம்மோடு
கலகலப்பாய் சிரித்திருப்பாய்
புலிவீரர் பகை துரத்தி வருவார்கள்
சென்ற மக்கள் துயர்போக்கித்
தருவார்கள்
ஒருநாளும் எம்மண்ணில்
நிலையாகப் பகைவாழ முடியாது.

*வெளிச்சம்*
*கார்த்திகை -1995*

மித்தான். உள்ளொடுங்கி, உணர்ச்சிகளைச் சுருக்கி வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கும் யாழ்ப்பாண மக்களின் துயரத்தை வன்னியிலிருக்கும் மக்களிடம் சொல்லிவிட வேண்டுமென்று அவனது கவிதைமொழி அவாவுற்றது. 'கொஞ்சம் பொறுத்திருங்கள்' எங்கள் தலைவரின் திட்டப்படி நமக்கு விடிவு கிடைக்கும். எல்லோரும் ஊருக்குத் திரும்பலாம், அதுவரை எதையும் தாங்கிக்கொள்ளுங்கள், என்று மக்களுக்கு அவன் நம்பிக்கையூட்டினான்.

நெகிழ்ச்சிக்குரிய அன்பும் நேசிப்பும்தான் வெள்ளையின் அடையாளம். எல்லோரையும் தன் ஞாபகங்களில் ஏந்திச் செல்லும் பண்புள்ளவன். முற்றுகையிட்ட நாட்களில் அவன் யாழ்ப்பாணத்தில் இயக்கப்பணிகளில் ஈடுபட்டிருந்தபோதும் எவரையும் ஞாபகம் கொள்ளத் தவறவில்லை. இந்தப் பிரதான அம்சமே இன்றைய யாழ்ப்பாணத்தின் நெருக்கடிக்குள்ளும் வெள்ளையால் பணியாற்ற முடியுமாயிருந்தது. யாழ்ப்பாணத்துள்ளேயிருந்தவர்களுடனோ, வெளியே இருந்தவர்களுடனோ அவன் இயக்கத்தின் செயற்பாட்டுக்காகவும் போராட்டத்தின் வெற்றிக்காகவும் எப்போதும் தொடர்பு கொண்டு அவர்களையும் தன் பணியுடன் இணைத்துப் பங்காற்ற வைத்தான். ஈழத்தின் கலை, இலக்கியம் பற்றிப் பேசும் வெள்ளை, வெளிச்சத்தின் வளர்ச்சிக்காக அடிக்கடி பல விடயம் குறித்தும் விவாதிப்பான். எந்தச் சூழ்நிலையிலும் தன்னால் முடிந்த பங்களிப்பை வெளிச்சத்துக்குச் செய்யத் தவறியதில்லை. அத்தோடு கலை, பண்பாட்டுக் கழகத்தின் பணிகளில் அவன் அக்கறையுடன் பங்கேற்றுமிருக்கிறான்.

தன்னுடைய விடுதலைப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் சிங்களப் படையால் வெள்ளை சாவடைய நேரிட்டது. எல்லோருடைய ஞாபகங்களையும் ஏந்திச் சென்ற வெள்ளை இன்று நாம் எல்லோரிலும் ஞாபகமாகிவிட்டான்.

ஒரு போராளியின் இறுதிக்கனவு எப்போதும் அவனது இலட்சியம் பற்றியதாகவே இருக்கும். அதுவே நமக்கும்.

அவன் எழுதிய கவிதை பிரசுரத்துக்கென தயாராகிக் கொண்டிருக்கிறது.

**—கருணாகரன்**

(நன்றி: 'வெளிச்சம்')



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தண்டவாளங்களில் தடுமாறும் சமூகப் புகைவண்டிகள்

துவேஷம் என்னும் வெறுப்பு நோய் நீண்டகாலமாக மனித குலத்தை நீக்கமறப் பீடித்து நிற்கிறது. சாதிய வடிவாக சமூகத்திற்குள்ளும், நிறவாத வடிவெடுத்து வேலையிடங்கள், பாடசாலைகளெனவும் பரந்து பட்டுநிற்கும் இந்நோய் நம்மையும் தாண்டி, நமது எதிர்காலச் சந்ததிகளையும் அச்சமூட்டுவதோடல்லாமல், அடுத்த நூற்றாண்டையும் அசிங்கப் படுத்தக் கூடிய சங்கதியாகச் சதுராடுகிறது. இதை ஏற்றுக்கொள்ள இனி எவருடைய மூளையிலும் புதிதாக ஒரு கருவியைப் பொருத்த வேண்டிய அவசியமில்லை.

இந்தத் துவேஷமென்பது கறுப்பு, வெள்ளையென்ற இரு நிறங்களுள் மட்டும் வாழ்வதாகக் கூறிவிட முடியாது. இது ஒரே இன மக்களிடையே ஏற்றத் தாழ்வு தரும் சாதியமாக, மதப்பிரிவுகளாக, ஏழை பணக்காரராக, படித்தவன் படிக்காதவனாக, சாதிக்குள் சாதியாக, மதத்திற்குள் மதமாக அத்திலாந்திக் முதல் பசுபிக் வரை எங்கும், எல்லா மட்டங்களிலும் பெரு நோயாக வாழ்வு கொண்டுள்ளது.

இவ்விதம் மனிதரிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும், சாதிக் கட்டுமானங்களையும் அவ்வக்காலங்களில் பலர் முன்வந்து தாண்டியுள்ளனர். காதலுக்காக முடிதுறந்த 8–ம் எட்வேட் மன்னர் முதல், சாதாரண மனிதர்கள் வரை காதலுக்காக சாதி கடந்தோரின் கதைகளும் பாடல்களும் ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் போதியளவிற்குப் பதிவு பெற்றுள்ளன.

இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களை எல்லாம் தொகுத்துப் பார்த்தால் இவை துண்டு துண்டுளாக நின்று, தம்மளவில் இக்கொடுமைகளை எதிர்த்துப் போராடியிருப்பதைக் காண முடிகிறது. அதேவேளை இனத் துவேஷத்தையும், சாதித் துவேஷத்தையும் வெற்றிகொள்ளும் ஆற்றல் அழகிற்கும் இருப்பதாகத் தெரிகிறது. இக்கொடுமைகள் வெற்றிகொள்ளப்பட்ட இடங்களிலெல்லாம் ஓர் கட்புலனாகாத கோடுபோல அழகு மறைந்து நிற்கக் காண்கிறோம். மிக மிக அழகான வாழ்வு, கலையழகு, பொருளாதார அழகு, உடலழகு என்று அழகானது பல்வேறு வடிவங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இவ் அழகானது பிரமிப்பூட்டும் வகையில் உச்சமடையும் இடங்களில் சாதியமும், துவேஷமும் பல தடவைகள் மண்டி

சாதி கடக்கப்பட்டதற்கான காரணங்களை காதலுக்காக, அழகுக்காக, வசதிக்காக என்று எவ்வாறு அடுக்கிச் சென்றாலும் "சாதியை அழிப்பதற்காக சாதி கடக்கப்பட்டிருக்கின்றதா?" என்பது இன்றும் சிந்தனையைத் துருவும் கேள்வியாகவே நிற்கிறது.

யிட்டிருக்கக் காண்கிறோம். இனம், சாதி போன்றவற்றைக் கடந்து வெற்றிபெற்ற தனிமனித முயற்சிகள் ஒவ்வொன்றையும் அவ்வக்காலங்களில் ஏதோசில தவிர்க்க முடியாத தனிமனித தேவைகளே வழிநடத்திச் சென்றுள்ளன. ஆனால் அதை ஓர் சமுதாயத் தேவையெனப் புரிந்து, ஒட்டுமொத்தமான மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டிய தேவையை உலகம் தொடர்ந்தும் ஏற்க மறுக்கிறது. சாதி கடக்கப்பட்டதற்கான காரணங்களை காதலுக்காக, அழகுக்காக, வசதிக்காக என்று எவ்வாறு அடுக்கிச் சென்றாலும் "சாதியை அழிப்பதற்காக சாதி கடக்கப்பட்டிருக்கின்றதா?" என்பது இன்றும் சிந்தனையைத் துருவும் கேள்வியாகவே நிற்கிறது.

இதுவரை உலகில் நடாத்தப்பட்ட; நடாத்தப்பட்டுவரும் நிற, இன, சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் எல்லாம் இந்த மானிடக் கொடுமைகளை முற்றாக உடைப்பதில் வெற்றி கண்டுவிடவில்லை. மாறாக இதை அழிக்க மனிதன் கண்ட எல்லாவிதமான வைத்தியங்களுக்குமே அதை வெற்றி கொள்ள முடியாது போனதால் அவற்றை வாழ வைத்த பெருமையும் சூடிக்கொள்ள நேர்ந்தது துர்ப்பாக்கியமே.

உண்மையில் மலைச்சிகரத்தை நோக்கிப் போகும் தண்டவாளம் போன்றது இதுவரை மனிதன் வகுத்துக் கொண்ட வாழ்க்கை முறை. இறுகிப் போன இத்தகு இரும்புப் பாதையின் மீது, புகை வண்டிகளாக ஓடி, களைத்து நிற்கிறது சமூக வாழ்வு. ஆற்றுநீர் இல்லாவிட்டால் பயணிக்கமுடியாத படகுகளும், தண்டவாளம் இல்லாதுவிடத்து ஓடமுடியாத புகைவண்டிகளுமாக தடுமாறும் வாழ்வானது அறிவியல் வளர்ச்சிக்கு உகந்ததல்ல. மாறமுடியாதவைகள் ஈற்றில் அருங்காட்சியகம் போவதே வரலாற்றின் தலைமைப் பாடம். மானிடம் மறுபடியும் புத்தெழுச்சி அடைய வேண்டுமானால் இத்தகைய சீரற்ற எண்ணப் பாங்குகளில் மாற்றங்கள் செய்வது அவசியம். ஏனெனில், மாற்றம் ஒன்று மட்டும்தான் முடிவிலி நிலை கொண்டது. உண்மை என்பதன் மையப் பொருளும் அதுவே.

இன்று நம்மை வக்கிரப்படுத்தி வைக்கும் சாதிய, இனத் துவேஷங்கள் என்பவை நோயாளிகளையும், பரப்பிகளையும் மட்டுமல்ல; வைத்தியர்களையும் பற்றியிருக்கும் உலகப் பொது நோயாகும். எனவேதான் இதைப் பயங்கர நோயாகக் கண்டு மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் என்றும் எம்முன் பூதாகரமாக எழுந்து நிற்கிறது. எனினும் நலங்களை இழக்க மறுக்கும் நிலையில் உள்ளதால் இந்த விடயத்திலும் உலகம் தன் இதயத்தை இரும்புப்பாதையாய் இறுக்கி வைத்திருக்கிறது. எவ்வாறாயினும் இந்த நோய்க்குப் புதுமருந்து தேடாது அடுத்த நூற்றாண்டின் கதவுகளைத் தட்டுவது சரியா? நோயாளிகள், பரப்பிகள், வைத்தியர்கள் ஆகிய முத்திறத்தாரும் நெஞ்சங்களைத் தட்டி கேட்க வேண்டிய நாகரிகமான கேள்வி இது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "வெற்றி நிச்சயம்" இராணுவ நடவடிக்கை தோல்வி நிச்சயம் என்றே வரலாற்றில் பதியும்

அருட்திரு ஜெகத்கஸ்பார் - மணிலா

"ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கையில் 20 கிலோமீற்றர்கள் வருவதற்கே ஆயிரத்திற்கும் மேலான படையினர்உயிரிழந்துள்ளனர், மூவாயிரத்திற்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர்; ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுவிட்டன. மொத்தத்தில் 'வெற்றி நிச்சயம்' 'தோல்வி நிச்சயம்' என்றே வரலாற்றில் பதிவு பெறும். இவ்வாறு வெரித்தாஸ் வானொலியில் ஒலிபரப்பான "உண்மையின் எண்ணங்கள்" ஆய்வுரையில் வெரித்தாஸ் தமிழ்ச் சேவையின் பணிப்பாளர் அருட்திரு. ஜெகத்கஸ்பார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் "ஜெயசிக்குறு" படை நடவடிக்கை மேல்நாட்டு இராணுவ விற்பன்னர்களும் இணைந்த திட்டமிடுதலோடு பாரிய படைக்கல மற்றும் படையணிகள் குவிக்கப்பட்டு தொடங்கப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கை.

யாழ்ப்பாண படையினருக்கான பொருள்கள் வழங்கும் பாதை திறப்பு, புலிகளின் படைபலத்தை சிதைப்பது இந்த இரண்டும்தான் "ஜெயசிக்குறு"வின் வெளிப்படையான இலக்குகளாகச் சொல்லப்பட்டன. என்றாலும் சொல்லப்படாத சில இலக்குகளும் உண்டு.

யாழ்ப்பாணப் பின்னடைவு காரணமாக விடுதலலைப்புலிகளின் சக்தி மீது ஒரு பகுதி தமிழ் மக்களுக்கு ஐயப்பாடு எழுந்திருந்தது. வன்னியையும் பிடித்துவிட்டால் தமிழீழம் என்ற உணர்வுபூர்வமான உறுதிப்பாட்டை தமிழ்மக்களின் மனங்களில் சிதைத்துவிடலாம். அந்த உள்ளச் சிதைவு இயல்பாகவே விடுதலைப்புலிகள் மீதான பெரும்பான்மைத் தமிழ் மக்களின் நம்பிக்கையைக் குலைக்கும். இரண்டாவது வன்னியையும் பிடித்துவிட்டால் பிரச்சினையைத் தீர்க்க பலமுள்ளவனை இன்னும் பலப்படுத்து என்று சர்வதேச அளவில் இன்று நிலவுகின்ற வர்த்தக அரசியல் இராஜதந்திரப் போக்கை தமக்கு சாதகமாகத் திருப்பலாம். மூன்றாவது ஒரு மாயையான வெற்றி ஒன்றை சிங்கள மக்களிடையே உருவாக்கி அரசியல் ஆதாயம் தேடுவதோடு கவைக்குதவாத அரசியல் தீர்வுத்திட்டத்தை தமிழ்மக்கள் மீது திணிப்பது. யாழ்ப்பாண வெற்றி தந்த ஒரு போலியான மதர்ப்புதான் வன்னியைப் பிடிக்கின்ற பேராசையை சிங்களத் தலைமைக்கு கொடுத்திருக்கிறது.

விடுதலைப் புலிகளுடைய போராட்ட வரலாற்றில் தலைவர் பிரபாகரன் அவர்கள் எடுத்த மெச்சத்தகுந்த இராணுவ அரசியல் முடிவு, யாழ்ப்பாணத்தைத் தற்காலிகமாக விட்டுக்கொடுக்க முடிவு செய்ததேயாகும் என்பதும், இந்த நூற்றாண்டினுடைய மதிநுட்பம் நிறைந்த கெரில்லா இராணுவ முடிவாக அது கருதப்படும் என்பதும் எமது கணிப்பு. குடாநாட்டினுடைய புவியியல் சிறைக்குள்ளே போரை நடத்துகின்ற முட்டாள்தனத்திற்கு புலிகள் துணிந்திருப்பார்களேயானால் தங்களுடைய ஆட்பலம் மற்றும் ஆயுதபலத்தை இழந்து ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்களும் பலியாகி தனி ஈழம் கேட்டு ஆயுதம் ஏந்திப் போராடினால் இப்படித்தான் நடக்கும் என்ற பாடத்தினையும் சிறீலங்கா ஆளும்வர்க்கம் சொல்லிக்கொடுத்திருக்கும்.

ஈழத்தமிழர்களுடைய சமுதாய ஆளுமையை இன்னும் சில நூற்றாண்டுகளுக்கு உயிர் பெறமுடியாதபடி சிதைத்திருக்கும். இதைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்துதான் விடுதலைப் போராட்டத் தலைமை தற்காலிக பின்னடைவை விரும்பி ஏற்றிருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தைப் போலவே வன்னியும் எளிதாக விழுந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்தால் அதைப்போல் இராணுவ முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது. ஒரு பாரிய படைக்கல எடுப்போடு புளியங்குளம் வருகிறோம், கிளிநொச்சி வருகிறோம், யாழ்ப்பாணம் வருகிறோம் என ஒரு இராணுவ பாதயாத்திரையை நடத்துவதும் அதை வெற்றியெனக் கொண்டாடுவதும் இன்னும் கூடச் சாத்தியப்படலாம்.

ஆனால் வவுனியா – யாழ் தரை வழிப்பாதையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியுமென்பது "கள் குடித்த குரங்குகள் கனவு" போன்றது. இந்தியப்படையாலேயே அது இயலாத காரியமாகத்தான் இருந்தது.

அதுவும் அப்போது புலிகளின் இராணுவ பலம் இருந்ததைவிட இப்போது இருபது மடங்கு அதிகம் இருக்கிறதென்றே சொல்லலாம்.

வவுனியா – யாழ் தரைவழிப் பாதையில் பொருட்கள் மற்றும் தளபாட போக்குவரத்தை விடுதலைப் புலிகள் தாமாக முன்வந்து அனுமதிப்பதே நல்லது என்பதே எனது கருத்து. காரணம் – இவ்வாறு போக்குவரவு செய்யப்படும் பொருட்கள் மற்றும் தளபாடங்களின் தொண்ணூறு சதவீதம் புலிகளுக்குத்தான் வந்து சேரும். உலகத்திலே விடுதலைப் புலிகளுக்கு – வெளிப்படையான இராணுவ உதவி வழங்குகின்ற நாடாக சிறீலங்கா மாறும்.

இந்த சாலையைப் பிடித்துவிட்டால் புலிகளின் நடமாட்டத்தை காட்டுக்குள் சுருக்கி விடுதலைப் போராட்டத்தை குறைந்த பலத்திலான கெரில்லா தொந்தரவாக மாற்றிவிடலாம் என்பதே அரசாங்கத்தின் கனவு. இதுவும் என்னைப் பொறுத்தளவில் பகல் கனவே. காரணம் – கடந்த பத்து ஆண்டுகளில் புலிகள் அடைந்திருக்கின்ற பரிணாம வளர்ச்சியை சரியாகப் பார்க்கத் தவறியதுதான் சிறீலங்கா அரசினுடைய குறைபாடு.

தங்களது போக்குவரத்துக்கு தரைவழிப்பாதையொன்று புலிகளுக்கு அவசியமானதல்ல. காரணம் தமிழீழக் கடற்பரப்பை கடற்புலிகள் தான் ஆண்டுகொண்டிருக்கின்றார்கள். இது உண்மை இந்த நிலைமை பத்து ஆண்டுகளுக்கு முன் இல்லாத ஒரு களநிலை. எனவே, "ஜெயசிக்குறு" படையினருக்கு ஊறுகாயும் குளிர் மோரும் கொடுத்து புலிகள் அனுப்பி வைத்திருக்கலாம்.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நாதன்

**நாதன் - கஜன்**

எமது இனிய நண்பர்கள். உலகம் பூராவும் வேர் விடும் தமிழீழ எழுச்சியின் உள்ளார்த்தமான உந்துதலின் வீச்சாக நின்றோர். நேர்மையும் உருக்குறுதியும் கொண்ட புலிகள் அமைப்பின் சர்வதேசச் சுடர்கள்.

அந்த இழப்பு ஒரு ஆண்டால் எம்மை அவர்களிட மிருந்து அன்னியப்படுத்த விளைகின்றது. சாவுகள் அந்த ஆத்மாக்களை எங்கள் சூரியப் பரப்பில் இருந்து பறித்தெடுத்து சபித்துவிட்டது. ஆயினும், அம்மனிதர்கள் மேலான மானசீக நேசம் எம் புலப்பரப்பெங்கும் ஆழப் பதிந்து மூச்சாய் நிற்கின்றது.

* * *

*1985.* அந்த நிலக்கீழ் புகையிரதவண்டி நிலையத்தின் வாயிலில் வருவோர் போவோரையெல்லாம் எதிர்பார்த்து அந்த இரு கண்கள் காத்திருந்தன. இந்தியத் தூதரகம் முன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு ஒன்றுகூடலிற்கு வரும் பொதுமக்களை 'மெற்றோ' விலிருந்து தூதரக வாசலிற்கு வழிகாட்டும் பொறுப்பை அந்தப் பாலக இளைஞன் ஏற்றிருந்தான். ஆயினும் பாரிஸ் தமிழீழ மக்களுக்கு அந்த ஒன்றுகூடலிலும் பார்க்க ஆயிரம் பிற விடயங்கள் குறுக்கே நின்றன. ஒன்றாய் இரண்டாய் சிலர் வருவதும் அவர்கள் வருகையை வைத்த விழி வாங்காது எதிர்பார்த்து தன் வீட்டிற்கு வரும் உறவினனை வரவேற்பதுபோல் அழைத்துச் செல்வதும் அந்த இளைஞனின் பணியாக இருந்தது. அன்றுதான் நானும் அவனும் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாகிக்கொண்டோம். அன்றுதான் அவன்தான் நாதன் என பெயர் அறிந்து கொண்டேன்.



* * *

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாட்கள் அவை. புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் எண்ணிக்கையில் குறைவாய் ஆனால் போர்ப் பாதை பற்றி எண்ணிக்கை நிறைந்த கருத்துக்களைக் கொண்டிருந்த காலங்கள். விடுதலை இயக்கத்தின் சர்வதேசத் தேவைகளில் பிரதானமாய்த் திகழ்ந்த நிதி சேகரிப்பு என்பது அகதிகளாய் புலம்பெயர்ந்து தமக்கென்ற பொருளாதார வாழ்வு பற்றிய அடிச்சுவடே காணாத தமிழர் சமூகத்தில், கடினமான பணியாகத் திகழ்ந்தது. எமது பிரெஞ்சுப் பணியகம் சில 'மூத்த' உறுப்பினர்களின் அமைப்பாகத் திகழ்ந்தது. அங்கு நிதி சேகரிப்பு என்ற 'சிட்டுக்குருவி' செயற்பாட்டிற்கு இறக்கைகட்டித்திரியும் இளசுகள் தேவைப் பட்டனர். அந்தச் சிட்டுக்குருவியாய் நாதன் தன்னை உருவாக்கிக்கொண்டான். போர்த்தேவையின் — தலைவரின் தேவையின் — ஆழத்தை உணர்ந்து இயக்கத்திற்கு இறக்கைகள் கொடுத்தவன் நாதன். நடந்து திரிந்த இயக்கம் ஓடத் தொடங்கியது. இயக்கப் பிரசுரங்களை நூற்றுக்கணக்கில் எடுத்து வீடுகளில், பொது இடங்களில் விநியோகிப்பது முதல் பாரிசின் விண்முட்டும் கட்டடங்களில் உச்சி அறைகளைத் தட்டி 'அண்ணை நாம் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து....' என அறிமுகங்கள் செய்வது வரை 85—களில் இயக்கம் விரித்த சிறகுகளின் மூலமாய் எம் நண்பன் திகழ்ந்தான். அவன் அங்கு எங்களுக்கு வழிகாட்டியாய் விளங்கினான்.

* * *

*1986*—ல் பிரெஞ்சுப் பணியகம் ஒரு விபத்தைக் கண்டது. சதி ஒன்று விதியாகி எமது பொறுப்பாளர் எம்மைவிட்டுப் பிரித்து வைக்கப்பட்டார். எம்மோடு நின்ற பலரைக் காணவில்லை. இளசுகள் நாம்தான் நின்றோம். அது ஒரு துன்பகரமான காலகட்டம். அன்றுதான் நாம் பிரான்சில் எம் அமைப்பை நடாத்த வேண்டிய பெரும் பொறுப்பை கைகளில் எடுத்தோம். எமக்கு ஒத்தாசையாக ஒரு மூத்த உறுப்பினர் துணைவர இளைய துடிப்பு மிக்க ஒரு புலிகள் கிளை அமைப்பு 80—களின் இறுதியில் பிரான்சில் உருவாக்கப்பட்டது. நீதான் அதற்கு விசையாக நின்றாய். அதற்கு மூச்சுக் கொடுத்தாய்.

## சுவ

* * *

விடுதலைப் புலி உறுப்பினர்களாய் புலம்பெயர்ந்த மண்ணில் செயற்படுவது மனோரீதியான அழுத்தங்களையும் முரண்பாடுகளையும் கொண்ட பணியாகும். போர்ச் சூழலில் இருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் போரையும் அதன் வெற்றியையும் உணர்வுபூர்வமாக சிந்தித்துச் செயற்படுவது மனோரீதியான தயாரிப்புக்களைக் கொண்ட நடவடிக்கை. அந்த உணர்வுபூர்வமான உந்துதலிற்கு நாம் ஆழமான தேச விசுவாசமும், இயக்கம் மேல் பாசமும் கொண்டிருக்க வேண்டும். அந்தப் பாசம் எம்மை எம் வெறுமையான கணங்களில் உற்சாகமூட்டும் – திசைகாட்டும்.

உண்மைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உறவுகளின் எதிர்பார்ப்பு; சூழவுள்ள புலம்பெயர்ந்த சமூகத்தின் மத்தியில் வேர்விடும் முரண்பாடுகளின் தாக்கங்கள் மத்தியில் எமது நேர்மையையும் கண்ணியத்தையும் பாதுகாத்து சுதந்திர தாகம் என்ற ஆத்மார்த்த உணர்வை செழுமைப்படுத்த வேண்டிய கடமை எம்முன் – எம்முள் மலையாய் நின்றது.

நாம் எமக்குள் இதுபற்றிப் பேசிக்கொண்டோம். கருத்துக்களை பரிமாறிக்கொண்டோம். உன் வயதான தாயின் நினைப்பு வரும்போதெல்லாம் நீ படும் வேதனைகளை நாம் சிலர் மட்டும்தான் உணர்வோம். உன்னால் எதுவுமே செய்ய முடியாது. ஏனெனில், அதற்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில் வைக்கப்பட்டிருந்தாய். எட்டிப்பார்த்து ஆறுதல் சொல்ல முடியாது, ஏனெனில் சர்வதேச செயற்பாடுகளே எமக்குத் தரப்பட்ட பரப்பு. நிமிட நேர சோகங்களை மௌனமாக



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கஜன்

அனுபவித்துவிட்டு அடுத்த கடமைக்குப் புறப்படும் சூழ்நிலையே தரப்பட்டதாகும்.

* * *

உனது அளவிட முடியாத சக்திதான் என்னை ஆச்சரியப்படவைத்தது. நீ களைப்பது கிடையாது. அண்ணர் தரும் பணியினை முடிக்காமல் நீ தூங்கமாட்டாய். அப்பணி முடிந்தபின்னர் குழந்தைக்குரிய குதூகலச்சிரிப்புடன் நீ கும்மாளமிடுவாய். அன்று நீ பெரும் பணியொன்றை முடித்துவிட்டாய் என்பது பலருக்குத் தெரியாது. சாதாரணப் பலவீனங்கள் கொண்ட சிலர் உன் கும்மாளத்தை அல்லது திடீர் துடிதுடிப்பை புரியாது விமர்சித்த போதெல்லாம் குழந்தை மாதிரி நீ வேதனைப்பட்டாய். ஆயினும், இதே முரண்பாடு இறுதிவரை உன்னைத் துரத்தியது என அறிந்த போது எமக்குள் எழுவது கோபமா அல்லது வேதனையா என்பதை அறியோம்.

* * *

# கேள்

சாதாரண மனிதருக்குள் வாழும் உணர்வுகள் உனக்குள்ளும் வாழ்ந்தன. எப்போதோ மறைந்த மேஜர் கேடில்ஸ் கூறியது ஆழமாகப் பதிந்துள்ளது.

'நாம் போராடத் தலைப்பட்டது நாம் எம் மன உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்ததினால்தான். நாம் எம்முள் எழும் நியாயபூர்வமான உணர்வுகளை மதிப்பவர்கள். எமக்குள் எழும் நியாயபூர்வமான கோபங்களை வெளிக்காட்டுபவர்கள். அதேபோல் ஒவ்வொரு மனிதனுள்ளும் எழும் அனைத்து நியாயமான உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும்' என்பார் கேடில்ஸ்.

இது எமக்கு பிடித்த கூற்று. ஏனெனில், அனுபவபூர்வமாக இதை நாம் அறிவோம். நியாயமான கோபத்தை மறைப்பது கபடத்தனம். மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளாதது தோழமை அற்ற செயற்பாடு. அதைப்போலத்தான் நீ வாழ்ந்தாய். நீ இறுதி வரை உணர்வுகளின் குழந்தையாகவே இருந்தாய். திறந்த வாய் மூடாது நீ பள்ளிக்கூடக் காலங்களில் நேசித்த விடயங்களை பற்றிக் கூறுவாய். விடலைப்பருவத்து குறும்புகளை மீளமீள கொட்டி ருசிபார்ப்பாய். ஏனெனில் போராட்டத்துடன் இணைந்த வாழ்க்கை எம் பிரத்தியேக விருப்பு வெறுப்புகளுக்கு சில வரம்புகளை இட்டதால் பழையனவே எம்மால் இலகுவாக பதம்பார்க்கப்படுகின்றன.

* * *

அந்தச் சதிகாரச் சன்னங்கள் நாதனை எம்மிடமிருந்து பிரித்தாலும் அவன் முன்னெடுத்த பணியும் நாம் பின்தொடரும் வழியும் உணர்வால் ஒன்றாகையால் அவன் எம் கூடவே வாழ்கிறான்.

* * *

**கஜன்.** வித்தியாசமானவன். தன்னம்பிக்கை நிறையப் பெற்ற எம் இனிய நண்பன். 1980—களின் இறுதியில் விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியகத்தில் தன்னை இணைத்துக்கொண்ட ஒரு கவிஞன் — கலைஞன். அவன் எழுதிய 'கண்ணோடு ஒரு கனவு' என்ற கவிதை இசை வடிவம் எடுத்துப் பலரது நெஞ்சிலே விழிப்புக் 'கண்களைத்' திறந்து வைத்தது.

பல பரீட்சாத்த முயற்சிகளை துணிவுடன் மேற்கொண்ட அவன் புலம்பெயர்ந்த பரப்பெங்கும் போலித்தனமான இலக்கிய சமூகப்பார்வையுடன் வாழ்ந்த கலைஞர்களை தட்டியெழுப்பி ஒரு காத்திரமான தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்காக உழைத்தவன்.

* * *

1991-ம் ஆண்டு தமிழீழத்தின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான கிட்டமான் அவர்களுடன் லண்டனில் பணிபுரிய கஜன் தேர்ந்தெடுக்கப்பட்டான். ஒரு முக்கியமான கால கட்டத்தில் இயக்கத்தின் மிக முக்கிய தேவை ஒன்றிற்காக அதுவரை செயற்பட்டுவந்த பகுதி நேர உறுப்பினர் என்ற தளத்தை விட்டு விலகி முழுமையாகத் தன்னை தன் தேசத்தின் போர்ப்பணிக்கு இணைத்துக்கொண்டான். அங்கு நாம் அந்த உன்னத மனிதன் கிட்டண்ணாவின் கால்தடம் பற்றிச் செயற்பட்டோம். அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். கிட்டண்ணா எப்போது கோபப்படுவார் — எப்போது 'பம்பலடிப்பார்' என ரகசியமாக விவாதிப்பது முதல் அவரைக் கோபப்படுத்தியதற்கான காரணம் 'நீயா' 'நானா' என வாக்குவாதப்படுவது வரை நாம் கண்டது அனைத்தும் அனுபவங்களே. உண்மையில் உன்னால் பிற்காலத்தில் ஒரு தலைமைத்துவத்தைக் காட்ட முடிந்ததென்றால் அதற்கான பயிற்சியைத் தந்தது கிட்டண்ணாதான்.



* * *

காலையில் எமது வீட்டில் கிட்டண்ணாவுடன் அன்றைய பணிகள் பற்றிய திட்டமிடலை முடித்துவிட்டு சிலர் செயலகம் சென்றுவிட நாள் முழுவதும் அவருக்கு உதவியாக இருக்க வேண்டிய பணி உன்னுடையதாக இருந்தது. அந்த நேரத்தில் அது உனக்கு கடுமையானதாக இருந்த போதும் அது தந்த அனுபவம் அளவில்லாதது.

பிற்காலத்தில் நீ இயக்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் உன் முழுமூச்சைக் காட்டி நின்றாய். நிதி சேகரிப்பு முதல் பிரச்சாரப் பணிகள் வரை உன் விசை விடுதலைப் போருக்குத் திசை காட்டி நின்றது. கிட்டண்ணா இன்று உயிருடன் இருந்திருந்தால் உன் பணி கண்டு நிச்சயம் பெருமை கொண்டிருப்பார். ஆனால் அன்றுபோல் இன்றும் நீ கிட்டண்ணாவுக்கு உதவியாக அவரிடமே சென்றுவிட்டாய். அங்கே நீ நேசித்த தேசத்தின் வெற்றிக்கு யாகம் செய்; கவிதை பாடு; நாம் இதை, இதுதான் என அறியாது விடினும் எம் இதயம் அதனை வாங்கிக்கொள்ளும். உன் கனவுக்கு உயிர்கொடுக்க நாம் உழைப்போம். உடலால் உளத்தால் அதற்கு நாம் தயாராக உள்ளோம்.

– நடராசா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சேகுவேரா திரும்பி வந்துவிட்டார்

**1967–ம் ஆண்டு பொலீவியாவில் கொல்லப்பட்ட சேகுவேராவின் எலும்புக்கூடு அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் காவியநாயகன் 'சே' யின் நினைவுகள் மீண்டும் கிளறப்பட்டுள்ளன.**



ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபதுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அச்சுறுத்திக்கொண்டிருந்த தனிமனிதர்களில் சேகுவேரா முக்கியமானவர்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வாழும் ஏழை மக்களின் இதயத்து இளவரசனாகவும் — உலக விடுதலை வீரர்களின் ஆதர்ச புருஷனாகவும் சேகுவேரா விளங்கினார். இதேவேளை சர்வதேச முதலாளித்துவத்திற்கும் — இலத்தீன் அமெரிக்கச் சர்வாதிகாரிகளுக்கும் சேகுவேரா என்ற பெயர் சுழன்றடிக்கும் ஒரு புயலாகவே இருந்தது. ஆர்ஜென்டினாவில் உருவாகி, கியூபாவில் மையங்கொண்டிருந்த இந்தப் புரட்சிப் புயல், 1967–ம் ஆண்டு பொலீவிய நாட்டின் மலையடிவாரக் கிராமம் ஒன்றில் அடங்கிப் போனது.

உயிருடன் இருந்த சேகுவேராவுக்கு பயந்தது போல உயிரற்ற அவரின் உடலுக்கும் ஏகாதிபத்தியம் பயந்தது. அவரைக் கொன்று – அவரது உடலை எங்கேயோ புதைத்து – மறைத்துவிட்டது. 'பொலீவிய மக்களுக்கு எதிராக சேகுவேரா பல கொடுமைகளை இழைத்தார்' என்று விடாது பிரச்சாரம் செய்து – அவரது புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தவும் ஏகாதிபத்தியம் முயன்றது.

'சே'யின் உயிரற்ற உடல் கண்டுபிடிக்கப்பட்டால் சோம்பல் நிலையில் கிடக்கும் இலத்தீன் அமெரிக்கப் புரட்சி உயிர்பெற்றுவிடும் என்று சி.ஐ.ஏ. அஞ்சியது. அதனால், உடல் பற்றிய பொய்யான தகவல்களை பல்வேறு நபர்கள் ஊடாக கூறவைத்து – உடலைத்தேடும் முயற்சியை தோல்வியடையச் செய்ய சி.ஐ.ஏ. முயன்றது. "சே யின் உடல் எரிக்கப்பட்டுவிட்டது'' என்றே 'சே'யை கைது செய்த பொலீவிய இராணுவக் கேணல் இறுதிவரை கூறினார்.

சேகுவேராவின் இறுதிக்கணங்கள் எப்படிக் கழிந்தன? அவரின் உடலுக்கு என்ன நடந்தது? என்ற இரண்டு கேள்விக்குமான விடையைத் தெரிந்து கொள்ள விடுதலையை நேசிக்கும் உலக மக்கள் துடித்தனர். அவரின் இறுதிக்கணங்கள் பற்றிய சில தகவல்கள் பொலீவிய இராணுவத்திற்கூடாகவும் கிராம மக்களுக்கூடாகவும் உலகிற்கு முன்னரே கசிந்திருந்தன. ஆனால், உடல் பற்றிய தகவல் மட்டும் விடுவிக்கமுடியாத புதிராக இருந்தது. அந்தப் புதிர் முடிச்சை பொலீவியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர், அண்மையில், அவிழ்த்து 'சே'யின் நினைவுகளை கிளறிவிட்டிருந்தார்.

"கைவிடப்பட்ட நிலையில் – புதர் மண்டிக்கிடக்கும் ஒரு சிறிய முன்னாள் விமானத்தளத்தின் ஓடு பாதையின் ஓரத்தில் 'சே'யினது உடல் அவசரமாகப் புதைக்கப்பட்டது'' என்ற தகவலை அந்த இராணுவத் தளபதி வெளியிட்டிருந்தார். அதன்பின், அவரது உடலைத் தேடிக்கண்டுபிடிக்கும் பணி சூடுபிடித்தது. கியூபா – ஆர்ஜென்டினா – இத்தாலி நாட்டு நிபுணர்கள் ஒன்றுசேர்ந்து அந்த விமானத் தளப்பகுதியில் அகழ்வு வேலைகளை ஆரம்பித்தனர். பல்வேறு தடைகளுக்கு மத்தியில் – 18 மாதகால தேடுதல் முயற்சியின் பின் அந்தப் புரட்சிவீரனின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது. விஞ்ஞானப் பரிசோதனைகள் மூலம் உலகிற்கு அது உறுதிப்படுத்தப்பட்டது.

'சே' ஒரு சர்வதேசப் புரட்சியாளன். முதலாளித்துவத்தின் கொடூரப்பிடிக்குள் இருந்து உலக மாந்தரை மீட்க வேண்டும் என்பது அவரின் கனவு. முதல்கட்டமாக இலத்தீன் அமெரிக்க நாடுகளை விடுவிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். பிடல் கஸ்ரோவுடன் இணைந்து கியூபா புரட்சியை நடாத்தினார். கியூபா விடுதலையான பின் அடுத்த புரட்சிக்காக பொலீவிய நாட்டைத் தேர்ந்தெடுத்தார். இதே வேளை, அறுபதுகளில் தீவீரம்பெற்ற ஆபிரிக்கப் புரட்சி அலைக்கும் 'சே' ஊக்கம் கொடுத்தார். இன்று கொங்கோ என அழைக்கப்படும் சயர் நாட்டின் போராட்டத் தலைவன் லுமும்பாவை சி.ஐ.ஏ. – அன்று கொலை செய்திருந்தது. இதனால், கொங்கோ புரட்சி நிலைதடுமாறியது. அந்த நெருக்கடியான கட்டத்தில் – ஆபத்திற்கும் மத்தியில் – கொங்கோ நாட்டிற்கு இரகசிய விஜயம் மேற்கொண்ட 'சே', புரட்சித் தீயை அணையவிடாது பாதுகாக்க பல உதவிகளைச் செய்தார். அண்மையில் வெற்றிபெற்ற கொங்கோ புரட்சியின் நாயகன் கபீலா; 'சே'யிடம் உதவியும் – ஆலோசனைகளும் பெற்ற அன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

றைய கெரில்லாத்தளபதியாகும். பெரும்பாலான இலத்தின் அமெரிக்கப் புரட்சி இயக்கங்கள் 'சே'யை தமது மானசீகக் குருவாகக் கருதுகின்றன. மெக்சிக்கோ நாட்டின் சியாப்பஸ், பேரு நாட்டின் ருபக் அமாறோ, நிக்கரகுவாவின் சன்டினிஸ்டா இயக்கம் போன்றவை அதில் குறிப்பிடத்தக்கவையாகும்.

கெரில்லா யுத்தம் பற்றிய 'சே'யின் கருத்துக்கள் உலகப்பிரசித்தி பெற்றவை – உலகெங்குமுள்ள விடுதலை இயக்கங்கள் 'சே'யின் கெரில்லாப்போர் அனுபவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு தத்தமது போராட்டங்களை செழுமைப் படுத்தியிருக்கின்றன.

பொலீவியாவில் அவர் போராடிக் கொண்டிருக்கும்போது கெரில்லாப் போர் யுக்திகள் பற்றி – மக்களுடனான அணுகுமுறைகள் மற்றும் உறவுகள் பற்றியதுமான தனது அனுபவங்களை நாட்குறிப்பாக எழுதி – தன்னுடன் வைத்திருந்தார். 'சே' கொல்லப்பட்ட போது அவரது நாட்குறிப்புகளை ஒரு பொலீவிய இராணுவ வீரன் எடுத்து — தன்வசம் வைத்திருந்தான். சில வருடங்களின் பின், அந்த நாட்குறிப்புக்களை ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனத்திற்கு விற்றான். "பொலீவியன் டைரி'' என்ற பெயரில் 'சே'யின் அந்த அனுபவத் தொகுப்பு உலகமக்களின் கைகளில் கிடைத்தது.

'சே' இறந்தபின் அவரை ஒரு இரக்கமற்ற பயங்கரவாதியாகச் சித்தரிப்பதிலேயே ஏகாதிபத்திய ஆதரவுப் பத்திரிகைகள் முயன்றன. போராட்டம் என்ற பெயரில் கிராமமக்களை 'அவர்' துன்புறுத்தினார் என்று கற்பனைக் கதைகளுடன் விடுதலைக்கெதிரான



## சேகுவேரா பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள்

* 1928 ஜூன் 14–ம் திகதி ஆர்ஜென்டினாவிலுள்ள றொசாரியோ நகரில் சேகுவேரா பிறந்தார். அவரது இயற்பெயர் ஏர்னெஸ்ரோ சே குவேரா. ஆனால், சிறு வயதில் அவரை எல்லோரும் அன்பாக 'சே' என்று அழைத்தார்கள்; அன்பாக அழைக்கப்பட்ட 'சே' என்ற பெயர் பிற்காலத்தில் உலக சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டது.
* 1946 – 1953–ம் ஆண்டு காலகட்டத்தில் புவனர்ஸ் அயர்ஸ் தேசியப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ மாணவனாக கல்வி கற்ற சேகுவேரா, 1953–ம் ஆண்டு ஒரு சத்திர சிகிச்சை நிபுணனாகவும், தொழுநோய் சிகிச்சை நிபுணனாகவும் மருத்துவக் கல்லூரியில் இருந்து வெளியேறினார்.
* கௌதமாலாவின் ஜனாதிபதி அபென்சின் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக நடந்த கிளர்ச்சியில் சேகுவேரா பங்குகொண்டார். தோல்வியில் முடிந்த அந்தக் கிளர்ச்சிக்குப் பின் மெக்சிக்கோ திரும்பிய அவர், அங்குள்ள இருதய மருத்துவ மனை ஒன்றில் பணியாற்றினார். அங்குதான் தற்போதைய கியூபா அதிபரும், கம்யூனிஸ கெரில்லாத் தலைவருமான பிடல் கஸ்ரோவை முதன் முறையாக 'சே' சந்தித்தார். இந்தச் சந்திப்பே இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களுக்கு வித்தாக அமைந்தது.
* 1956–ம் ஆண்டு மெக்சிக்கோவின் டுக்ஸ்வான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பிடல் கஸ்ரோ தலைமையிலான 81 பேர் கொண்ட கெரில்லாக் குழுவில் ஒருவராக சேகுவராகவும் இடம்பெற்றார். அந்தப் புரட்சிக் குழுவின் தலைவர் பிடல் கஸ்ரோவுக்கு அடுத்த நிலையில் அவரது சகோதரர் ராவுல் கஸ்ரோவும் மூன்றாவது நிலையில் சேகுவேராவும் இருந்தனர்.
* கியூபாவில் இருந்து புரட்சிகர கெரில்லா யுத்தத்தை இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விரிவுபடுத்திய சேகுவேரா, 1966–ம் ஆண்டில் தமது அணியினருடன் பொலீவியாவின் தென்கிழக்குப் பகுதியூடாக அந்நாட்டினுள் நுழைந்து, பொலீவிய இராணுவத்திற்கு எதிராக துணிகர தாக்குதல்களை நடாத்திவந்தார்.
* 1967 ஒக்டோபர் 7–ம் திகதி உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயி ஒருவனால் காட்டிக்கொடுக்கப்பட்டு, சேகுவராவும் அவரது சகாக்கள் 17 பேரும் சுரங்கப் பகுதி ஒன்றினுள் வைத்து பொலீவிய படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு கடும் சமரின் பின் கைது செய்யப்பட்டனர்.
* சி.ஐ.ஏ.யின் நிர்ப்பந்தத்தின் பேரில் விடுக்கப்பட்ட உத்தரவின்படி சேகுவராவைக் கொல்வதற்கு சிப்பாய் ஒருவன் லொத்தர் மூலம் தெரிவு செய்யப்பட்டான்.
* 1967 ஒக்டோபர் 9–ம் திகதி லாகியூறா என்னும் இடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கைதியாக வைக்கப்பட்டிருந்த சேகுவேரா சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது சடலம் அங்கிருந்து அதிக தூரத்தில் இருந்த இராணுவத்தளம் ஒன்றுக்கு ஹெலி மூலம் கொண்டு செல்லப்பட்டது.
* கொல்லப்படுவதற்கு முன்னர் சேகுவேரா கடைசியாகக் கூறிய வார்த்தைகளை பொலீவிய இராணுவத்தின் எட்டாவது படைப்பிரிவின் உளவுத்துறை அதிகாரியான கேணல் ஆர்னல்டோ தமது உத்தியோகபூர்வ அறிக்கையில் வெளியிட்டார். அது பின்வருமாறு காணப்பட்டது.

  "நீ என்னைச் சுடப்போகிறாய் என்பது எனக்குத் தெரியும். இதிலிருந்து என்னால் தப்ப முடியாது. இந்தத் தோல்வி புரட்சியின் முடிவு அல்ல; அது தொடர்ந்து எங்கும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும் என்று பிடலிடம் சொல்லுங்கள். மறுமணம் செய்துகொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து பிள்ளைகளின் படிப்பைக் கவனிக்குமாறு அலெஸ்டாவிடம் (சேகுவேராவின் மனைவி) கூறுங்கள்"
* 'சே' கொல்லப்பட்ட கிராமமான லாகியூறா மக்கள், அவரை ஒரு புனிதராகப் போற்றுகின்றனர். வறட்சி நிலை தீவிரமடையும்போது 'சே'யின் படங்களைத் தூக்கியவாறு மழை வேண்டி நடனமாடுகின்றனர். யேசுநாதரைப் போல மயிரடர்ந்த முகத்தைக் கொண்ட இந்தப் புனிதர் ('சே') தமக்காக மழையை அனுப்புவார் என்று அக்கிராம மக்கள் இன்றும் நம்புகின்றனர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிலரது செவ்விகளுடனும் கருத்துப் பரப்பலில் அவை ஈடுபட்டன. 'சே'க்கு எதிரான இந்த ஏகாதிபத்திய தொடர் புச்சாதன யுத்தம் உலகமக்களிடம் எடுபடவில்லை. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வசிக்கும் பெரும்பாலான மக்களின் வீடுகளில் யேசுநாதரின் படத்திற்கு அடுத்ததாக 'சே'யின் படத்தையே தொங்கவிட்டுள்ளனர். மயிரடர்ந்த முகத்துடன் சாந்தசொரூபியாகத் தென்படும் 'சே'யின் முகச்சாயல் யேசுநாதரின் முகச்சாயலுடன் ஒத்திருக்கின்றது என்று பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க மக்கள் நம்புகின்றனர்.

பிரிட்டனில் இருந்து அமெரிக்கா வரை 'சே'யின் முகம் பதித்த 'ரீசேட்டுக்கள்' இலட்சக்கணக்கில் விற்பனையாகின்றன. இலத்தீன் அமெரிக்க மக்கள் மட்டுமல்ல ஐரோப்பிய – அமெரிக்க இளைஞர் – யுவதிகளும் 'சே'யின் முகம்பதித்த ஆடைகளை விருப்புடன் வாங்கி அணிகின்றனர். மக்களுக்காகப் போராடிய மக்களின் விடுதலைக்காக மரணித்த இந்த ஆற்றல்மிகு வீரனை 'உலகம்' காவியத்தலைவனாக ஏற்று – மதிக்கின்றது. கடந்த யூலை மாதம் 8–ம் திகதி 'சே'யினதும் அவருடன் கொல்லப்பட்ட சக தோழர்கள் நால்வரினதும் எலும்புக்கூடுகள் அடங்கிய பேழைகள் கியூபா வந்தடைந்தன. கியூபாவின் புரட்சித்தலைவரும் – 'சே'யின் நண்பனுமாகிய பிடல்கஸ்ரோ – புரட்சியின் நினைவுகளை மீட்டுப்பார்க்கக் கூடிய – அந்த உணர்வுச் சொத்துக்களை – உணர்ச்சி பொங்கப் பொறுப்பேற்றார். அந்த நிகழ்ச்சியில் 'சே'யின் மகள் உரையாற்றினார்.

"அவர்களுடைய எலும்புக்கூடுகள், இன்று எங்களிடம் வந்தடைந்துள்ளன. எனினும் அவர்கள் தோல்வியுற்றுத் திரும்பவில்லை, கதாநாயகர்களாகத் திரும்பியுள்ளனர். உள்ளார்ந்த இளமையுடன் திரும்பியுள்ளனர். வீரர்களாகத் திரும்பியுள்ளனர்'' என்று வீரவணக்கம் செலுத்தினார்.

கியூபாவின் சாந்தாகினாறா என்ற இடத்தில் ஒரு அரும்பொருட்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, 'சே'யின் உடலிலிருந்து ஏகாதிபத்திய வெறியர்கள் துண்டித்த இரண்டு கைப்பாகங்களுடன் 'சே'யின் எஞ்சிய எலும்புக்கூடும் ஒன்றிணைந்துள்ளது. இலத்தீன் அமெரிக்க மக்களின் உணர்ச்சிமிகு விடுதலைச் சின்னமாக எதிர்காலச் சந்ததிக்கு – 'சே'யின் எலும்புப் பேழை விளங்கும். ★

# நவபேரினவாதி சந்திரிகா

பேரினவாதத்தின் இந்த ஆதிக்கக் கொள்கைக்கும் அதன் அரசியல் நிலைப்பாட்டிற்கும் தமிழினம் பிரதான சவாலாக விளங்குகிறது. இந்த இன முரண்பாட்டை, சிங்கள அரசியல்வாதிகள், தமது பதவி வேட்டைக்கான பலிபீடமாக பயன்படுத்துகின்றனர். பேச்சாலும், செயலாலும் சிங்களமக்களுக்கு இனவெறியூட்டி அரசியல் இலாபம் தேடிவருகின்றனர். இந்தப் பேரினவாதப் போதையாலும் – தமிழினப் பகைமையாலும் சிங்களவரின் அரசியல்மனம் ஆக்கப்பட்டுக் கிடக்கிறது. இந்த நிலையில், தமிழ் மக்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் போர் முரசு கொட்டும்போது, சிங்கள மக்கள் அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சிங்கள–பௌத்த மேலாதிக்கத்தின் எதிரியான தமிழ் இனத்தை வெற்றிகொள்ளும் எண்ணத்துடன், போரை சிங்கள இனம் ஏற்றுக் கொண்டாலும், போரின் துயரவிளைவுகள் தங்கள் முற்றங்களிலேயே கண்ணீரைச் சிந்தச் செய்து சிங்கள சமூகத்தையே உலுப்பத்தொடங்கிய போது சமாதானத்தின் தேவையையும், சிங்களவர் உணர்ந்தனர்.

இவ்விதம் போரின் தாக்கத்தை தாங்கிக்கொள்ள முடியாது – சிங்கள தேசம் – சமாதானம் காணவிளைந்த அரசியற்போக்கு, இரண்டாம் ஈழப்போரின் முக்கிய விளைபொருளாகும். அதற்கு முன்னர், அங்கொன்றும் இங்கொன்றுமாகவே, சிங்கள ஊர்கள், போர்ச்சாவைச் சந்தித்துக்கொண்டிருந்தது. ஆனால், இரண்டாம் ஈழப் போர் காலத்தில் (1990 – 94) சிங்கள தேசம் முதற்தடவையாக – போர்ச்சாவுகளால் அதிர்ந்தது. இத்தகைய நிலையில் சமாதான கோசம் அவர்கட்கு சங்கீதமாகியது.

ஒருபுறம் போர் மனதுடனும் – மறுபுறம் சமாதான மனதுடனும் இருந்த சிங்களவர் மத்தியில் சமாதானத்தை தட்டிக்கொடுத்து – ஊக்குவித்து ஆட்சி பீடம் ஏறிய சந்திரிகா அம்மையார், பின்னர், போர்மனதை உசுப்பிவிட்டு – உற்சாகப்படுத்தியபடி ஆட்சியை தொடர்ந்துகொண்டிருக்கின்றார். யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு சிங்கள மக்களின் போர் மனதிற்கு நல்ல தீனி



போன்றமைந்தது. இப்போது, சிங்களப் படைகள் வன்னிப் பகுதிக்குள்ளும் புகுந்து புலிகளை ஒட்டுமொத்தமாக அழித்து – தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க முயற்சி செய்கின்றன என்று சிங்களமக்களுக்கு ஆசையூட்டப்படுகின்றது. ஒருவருடத்திற்குள் போர் முடிந்துவிடும், பின்னர், போருக்குச் செலவழித்த பணம் சிங்கள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பயன்படும் என்றும் உறுதிகூறி சோகங்களையும் – வாழ்க்கைச்சுமைகளையும் தற்காலிகமாகத் தாங்கும்படி சந்திரிகா அரசாங்கம் கேட்கிறது.

வழமையான பேரினவாதத் தலைவர்களைப் போன்று தமிழர்களுக்கு எதிரான இனவெறிக்கருத்துகளை, சந்திரிகா அம்மையார் வெளிப்படையாகப் பேசுவது மிகக்குறைவு. போர், புலிகளுக்கு எதிரானதேயல்லாமல் தமிழர்களுக்கு எதிரானதல்ல என்று விளக்கம் கொடுத்து – வியாக்கியானம் செய்தபடி தமிழ் இனத்தின் மீது போர் அரக்கனை, அம்மையார் ஏவிவிட்டுள்ளார். போரின் விளைவுகளால் தமிழர் துன்பப்படும் போது 'புலிகள் தான் இதற்குக் காரணம்' என்றும், 'அரசாங்கம் சமாதானத்தையே விரும்புகிறது' என்றும் கதையளக்கிறார். தனது பேரினவாதக் கொள்கைகளை மிகவும் நாசூக்காக செயற்படுத்துகிறார். பேச்சளவில் இனசமத்துவத்தை தூக்கிப்பிடிக்க முயற்சிக்கிறார். செயலளவில் பேரினவாத உணர்வுடனேயே நடந்து கொள்கின்றார். உண்மையில், சந்திரிகா அம்மையார் ஒரு நவபேரினவாதி.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# பஞ்சம் பசி பட்டினி

– வே. பாலகுமாரன்

உலகில் இப்போது மீண்டும் உணவு நெருக்கடி, பற்றாக்குறை, பஞ்சம் பட்டினி பற்றிய அபாய அறிவிப்புக்களும் அதிர்ச்சியூட்டும் புள்ளி விபரங்களும், தொடர்ந்து வெளிவந்த வண்ணமே உள்ளன. குறிப்பாக கடந்த வருடம் நவம்பரில் உரோம் நகரில் உணவு விவசாய நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, பல உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட உலக உணவு மாநாட்டின் பின் (WORLD FOOD SUMMIT 96) இது குறித்து பெரும் வாதப் பிரதிவாதங்கள் மேலோங்கியுள்ளன.

உலகின் குடித்தொகை இப்போதுள்ள ஐநூற்று எழுபது கோடியிலிருந்து 2030–ஆம் ஆண்டளவில் எண்ணூற்று எழுபது கோடியாகிவிடும். இச் சனத்தொகைக்கு உணவு கிடைக்க அடுத்த முப்பது வருடத்திற்குள் 75 விழுக்காட்டளவு உணவு உற்பத்தி அதிகரிக்கபடவேண்டும். 2015–ம் ஆண்டளவில் 800 மில்லியன் (80 கோடி) மக்கள் பட்டினிப் பட்டாள வரிசையில் இடம்பிடிப்பர். இவர்களின் அரைவாசிப் பேருக்காவது உணவு கிடைக்க வழிசெய்ய வேண்டும் என்பதே இலக்கு. உலகின் குடித்தொகையில் சரி அரைவாசிப் பங்கினர்க்கு மேல் வதியும், உலக உழவர்களில் 3/4 பங்கினர் காணப்படும் ஆசியாவிலேயே 20 கோடி சிறுவர் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்; நாளாந்தம் நாற்பதினாயிரம் பாலர் பட்டினி, போசாக்கற்ற உணவு இவை தொடர்பான நோய்களால் மரணிக்கின்றனர்; இந்நிலைமைகள் மாற்றப்படவேண்டும்; இவ்வாறாகப் பக்கம் பக்கமாக நிரப்பக்கூடிய புள்ளி விபரங்கள் அள்ளி வீசப்படுகின்றன.

இதேவேளை சிறீலங்காவிலும் உணவு நெருக்கடி குறித்து அச்சம் கிளப்பப்பட்டுள்ளது. சிங்களத்தில் உள்ளூர் உணவு உற்பத்தி வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் அடிப்படை உணவு வகைகள் இறக்குமதி செய்யப்படுவதாகவும், உள்ளூர் சந்தையில் வறிய மக்களுக்கு மிகத் தரம் குறைந்த இறக்குமதி செய்யப்பட்ட அரிசியே கிட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களிடையே தற்கொலை எனும் நிலை, உளநோயாகப் பரவி வருவதாகவும் (உலகிலே தற்கொலை செய்வோரில் முதலாமிடம் சிங்களத்திற்கே) வேறு அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. வாழ்க்கைத்தர வீழ்ச்சியால் வறிய மக்களின் மரக்கறி வகைகளை உள்ளெடுக்கும் கொள்ளளவே கவலைப்படத்தக்க வகையில் வீழ்ச்சி அடைவதாகவும்; முட்டை, பால், இறைச்சி, கருவாடு போன்றவை எட்டாப் பொருட்களாக மாறி வருவதாகவும் புள்ளிவிபரங்கள் சாட்சியம் கூறுகின்றன. எனவேதான் போர் முனைகளை புதிது புதிதாக திறப்பதில் புகழ் பெற்றுவிட்ட சந்திரிகா அம்மையாரால் உணவு உற்பத்திக்கான போர்முறையொன்று அண்மையில் பெரும் ஆரவாரத்தோடு அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

இப்போது எமது தமிழ் மக்களின் நிலையைப் பாருங்கள். 1990–ம் ஆண்டிலிருந்தே செயற்கையான உணவு நெருக்கடி, மருத்துவ வசதியின்மை போன்ற நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்படும் எம் மக்களுக்கு உலக உணவு நெருக்கடி என்பது அதிர்ச்சியூட்டும் தகவல் அல்ல. ஏனென்றால், கடலிலும் தரையிலும் தமது தேவையை விட பன்மடங்கு உற்பத்தி செய்தவர்கள் எம் மக்களல்லவா? எனினும் தமிழீழ மக்கள் மனங்கொள்ள வேண்டிய இரு முக்கிய செய்திகள் இந்த வாதப் பிரதிவாதங்களுக்கூடாக வெளி வருகின்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



உலக உணவு மாநாட்டிலே ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரகடனம் என்ன சொல்கின்றது? "பட்டினியில் இருந்து விடுபடவும் தமக்குப் போதிய உணவினைப் பெறுவதற்கு ஒவ்வொருவருக்கும் உள்ள அடிப்படை உரிமைக்கு அமைவாக நாட்டுத் தலைவர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் பாதுகாப்பான ஊட்டச்சத்துள்ள உணவினைப் பெற உரிமை உடையவர்கள் என்பதை மீண்டும் இத்தால் உறுதிப்படுத்தி பிரகடனப் படுத்துகின்றோம்.'' உணவினைப் பெறுவதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு என்பதே (THE RIGHT TO FOOD) இதன் கரு. பிரகடனத்தில் கூறப்படும் அடிப்படை உரிமை என்பது 1948–ம் ஆண்டு டிசம்பர் 10–ம் திகதி ஐ.நாவில் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பிரகடனத்துக்குள் 25–வது அத்தியாயத்தில் முதல் பிரிவாகும். (25[1])

இவ்வாறாக இந்த உரிமைகள், பிரகடனங்கள் எல்லாம் கேட்பதற்கும், எழுதுவதற்கும் சிறப்பாகத்தான் உள்ளன. ஆனால், உண்மை நிலை என்ன? இங்கேதான் அனல் கிளப்பும் வாதப் பிரதிவாதங்கள் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறுகின்றன. 1948–ம் ஆண்டுப் பிரகடனத்தின் பின் இன்று எத்தனை ஆண்டுகள் கடந்துவிட்டன? இப் பிரகடனத்தில் கூறப்பட்டபடி எல்லோருக்கும் வாழ்க்கைத் தரம் கிடைத்துள்ளதா? 1974–ம் ஆண்டு முதலாவது உலக உணவு மகாநாட்டின் போது, அடுத்த 20 வருடங்களுக்குள் பட்டினி என்ற நிலை இல்லாது போக வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 22 வருடங்களின் பின்னரும் இப்போது மீண்டும் பஞ்சம், பட்டினி பற்றியே பேசப்படுகின்றது. உலக உணவு மாகாநாட்டில் தனது காரசாரமான கண்டனப் பேச்சால் மகாநாட்டில் கலந்து கொண்டோரை பெரிதும் அதிர்வடையச் செய்த பிடல், மாநாட்டின் இலக்கை "அவமானகரமானது, வெட்கக்கேடானது'' என வருணித்தார். இதே வேளை தமக்கு தேவையானவற்றைத் தாமே உற்பத்தி செய்யக்கூடிய தமிழீழ மக்களின் வேளாண்மை, கடற்றொழில் செயற்பாடுகளை முடக்கிவிட்டு ஐ.நா.வாலும், ஏனையோராலும் வழங்கப்படும் உதவிகளை, உணவுத்தொகுதிகளைத் தான் ஏதோ பெருந்தன்மை காரணமாக நிவாரணமாக தமிழ் மக்கட்கு வழங்குவதாகத் தோற்றங்காட்டி உணவிற்கான மனித அடிப்படை உரிமையையே காலில் போட்டு மிதிக்கும் சிறீலங்காவின் செயல் பற்றி மாநாட்டில் எவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இவை ஒருபுறமிருக்க உலக உணவு மாநாட்டின் குடித்தொகைப் பெருக்கமே உணவுப் பற்றாக்குறைக்குக் காரணம் என்ற கருத்தும், இதனைப் போக்க இரண்டாவது பசுமைப் புரட்சியாலேயே முடியும் என்கிற தீர்வும், முன்னெப்போதும் இல்லாத அளவு எதிர்ப்பலைகளை உலகெங்குமே கிளப்பியுள்ளன. உணவுப் பற்றாக்குறைக்கு குடிப்பெருக்கம் என்பது காரணமல்ல. தற்போது குடிப்பெருக்கத்தை விட 16 மடங்கு கூடுதலான உணவு உற்பத்தி செய்யப்படுகின்றது. உலகிலே உள்ள ஒவ்வொருவர்க்கும் ஆகக் குறைந்தளவான 2700 கலோரி பெறுமான உணவை பெற இது மிதமிஞ்சியது. எனினும் உணவு விநியோக முறை ஒரு சில மேலாண்மை அமைப்புக்கள், நாடுகள் வசமே இருப்பதால் உணவும் சர்வதேச வணிகத்தின் பிரதான வணிகப் பண்டமாக கடந்த 30 வருடத்தில் மாறிவிட்டதால் உணவு வறியவர்களுக்குக் கிட்டுவதில்லை என்பதே உண்மை என்பது எதிர்ப்பாளரின் நிலைப்பாடாகும். சர்வதேசச் சந்தையில் உணவு விலையை ஏற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அமெரிக்கா போன்றவை செயற்கையான முறைகளைக் கையாள்கின்றன. உணவுப் பண்டங்களை கடலில் கொட்டியும், வேறு வழிகளில் அழித்தும், புதிய நிலங்களை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தாமல் தடுத்தும், இருக்கும் நிலங்களைப் பயன்படுத்துவதை குறைப்பதற்கு உழவர்களுக்கு மானியம் வழங்கியும், 'சித்து விளையாட்டுக்கள்' செய்கின்றன. இந்த நாடுகளும், நிறுவனங்களும் 3–ம் உலக நாடுகளில் உழவர் பெருமக்கட்கு வழங்கப்படும் மானியங்களை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்கின்றன. இப்படித்தான் இந்தக் கதை நீள்கின்றது. சில காலம் முன்னர் நைஜீரியாவின் பயாப்ரா பகுதியிலே பல்லாயிரம் மக்கள் பசி, பட்டினியால் இறந்த போது அந்த மக்களுக்கு உணவு வழங்கக் கூடிய அதேயளவு உணவுத்தொகுதி அமெரிக்காவில் கடலில் வீசப்பட்டது. 3–ம் உலக நாடுகளில் பாலுக்கு பாலகர் அழுதிடும் வேளை பாற்பொருட்களின் விலை குறையக்கூடாது என்பதற்காக அமெரிக்காவால் பால் கடலில் கொட்டப்படுகின்றது. எனவே உலக உணவு மாநாட்டில் உரையாற்றிய உணவு விவசாய நிறுவனத்தின் நெறியாளர் நாயகமான ஆபிரிக்கரான JACGUES DIUF "வளர்ச்சியடைந்த நாடுகளிலே நாய், பூனைகட்கு கிடைக்கும் சத்துள்ள தரமான உணவு இங்கே மனிதனுக்கு கிடைப்பதில்லை.... மேட்டுக்குடிப் பெண்டிர் அதிகம் உண்டதால் பருத்துப்போன உடலை மெலியவைக்க செலவழிக்கும் பணத்தை பட்டினியால் வாடுவோர்க்கு பயன்படுத்த முடியும்'' என்றார்.

இவை ஒருபுறமிருக்க இரண்டாவது பசுமைப் புரட்சி பற்றிய கருத்தும் பரவலாகக் கண்டிக்கப்படுகின்றது. முதலாவது பசுமைப் புரட்சி காரணமாக இயற்கை வளங்கள் நாசமாகி சூழல் மாசுபட்டது போதாதா? கலப்பினங்களும், செயற்கை உரமும் வேதியல் களை, கிருமி கொல்லிகளும் இயற்கையன்னையை என்ன பாடுபடுத்தின? இவ்வாறான கருத்தெல்லாம் உலக வங்கியினதும், சர்வதேச வணிக நிறுவனங்களினதும் கூட்டுச் சதியென குமுறுகின்றனர் எதிர்ப்பாளர். இயற்கையோடு இணைந்த வேளாண்முறைக்கு உலகம் திரும்புகையில் எங்கே தமது கொழுத்த இலாபம் வீழ்ந்து விடுமோ என்கிற அச்சத்தில் இந்த வேதியல் பொருள் உற்பத்தியாளர், இன்னொரு பசுமைப் புரட்சி என்கிற பெயரில் சூழலை நாசம் செய்து இன்னொரு கொள்ளைக்குத் திட்டமிடுகின்றனர் என சூழல் காப்பாளர் உலகெங்கும் குரல் ஒலிக்கின்றனர். இப்போது உலகிலே மேற்குலகு உட்பட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இயற்கை வேளாண் முறைக்கு (Organic-Farming-back to nature) திரும்பும் ஆர்வம் அதிகரிக்கின்றது.

உலகிலே வேளாண் உற்பத்தி பொருள் ஏற்றுமதியில் மூன்றாமிடத்தையும், ஐரோப்பாவிலே, செயற்கை உரம், களைக்கொல்லி, கிருமிநாசினி என்பவற்றைப் பயன்படுத்துவதிலே முதலிடத்தையும் வகித்த நெதர்லாந்திலே, 35 விழுக்காட்டளவு உழவர் திரும்பவும் இயற்கை முறைக்கு திரும்ப ஆர்வம் காட்டத் தொடங்குகின்றனர். அவுஸ்திரேலியாவில் பயிர் செய்யப்படும் நிலப்பரப்பளவில் 10 விழுக்காடு இவ்வேளாண் முறைக்கு உட்பட்டதாகின்றது. அரசாங்கமே ஊக்கப்படுத்துவதால் விரைவில் இவ்விழுக்காடு 40 ஆகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. டென்மார்க்கின் கால்நடை உற்பத்தியின் 15 விழுக்காடு இயற்கை முறையின் கீழே உற்பத்தியாகின்றது. தக்க முறையில் மண்ணைப் பதப்படுத்தல், சேதனப் பொருட்களை மண் ஊட்டம் பெறத்தக்க வகையில் மீள் பயன்படுத்தல். (Nutrient Recyeling of Organic Matter) சுழற்சி முறையில் பயிர் செய்கை, இயற்கை முறையில் களை, கிருமிகளைக் கட்டுப்படுத்தல், செயற்கை முறையில் உரம், களை, கிருமிகொல்லிகளை முற்றாகப் பயன்படுத்தாதிருத்தல் என்பனவே மேலை நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் இயற்கை வேளாண் முறைகளாகும். இயற்கை வளங்கட்கு சேதமோ அழுத்தமோ கொடுக்காது பிரபஞ்ச வெளியின் போக்கினையும் அனுசரித்து செயற்படும் இம்முறைக்கு Biodynamic Ecological என சிறப்புப் பெயரிட்டு மேலை உலகம் சிறப்பிக்கின்றது.

இங்கே தான் கீழைத்தேய மக்களின், ஏன் எமது தமிழீழ மக்களின் முன்னைய வேளாண் முறைகளின் அதிசிறப்பிட இயல்புகள் வெளிவருகின்றன. நிலைத்து நிற்கும் மேம்பாடு (Sustainable Development) என இப்போது உலகெங்கும் பொருண்மிய மொழியால் அழைக்கப்படும் எளிய இயல்பான முறை கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் இருந்தும் இப்போதைய வேளாண் முறைகள், இயற்கை வளங்கள் மேல் தாங்கொணாத அழுத்தத்தை தொடுப்பதும் இப்போது உணரப்படும் விடயங்களாகின்றன. இவை ஏற்கனவே எம் மக்களால் உணரப்பட்டவை தான் என்பதே எமக்கான செய்தி மட்டுமல்ல நாமும் இயற்கை அன்னையிடம் மீண்டும் புகலிடம் தேடுவதே பொருத்தமும் அல்லவா?.

# அகதிக் குழந்தைகளும் சூரியனும்

சூரியனைக் காட்டுவதாக
பிள்ளைகளுக்கு
சொல்லிக் கொண்டேயிருக்கின்றேன்
'எப்படியிருக்குமப்பா'?
அவர்கள் என்னை
அதட்டலாகவும் கேட்கத் தொடங்கி
விட்டார்கள்

கீறிக் காண்பித்தார்கள்
அவர்களே
ஒரு நாள் வர்ணமும் தீட்டி
சூரியனை கொணர்ந்தார்கள்

சின்னவன் —தான்
சிந்தை மிக நோக
தேடும் கவலை மிகச் சூழ
குந்தியிருப்பதாய் கோலம்
போட்டான்!

சேற்றுக் குளத்திலே கிடந்து
கும்மிருட்டுக் கலைய
மலரும் பொற்தாமரை போலும்
மகிழ்வினை எப்படிப் பிள்ளைகளுக்கு
பூத்துக் காட்டுவது?
வானுக்கும்
பூமிக்கும் நடுவே
வலிய கரும் கோடாய்
நிற்கும்
பனையின் உச்சியில்
செந்தணலாய் சிரிக்கும்
சூரியனைப் பிரிந்த கதையை
பிள்ளைகளுக்கு
எந்த முகத்தோடு சொல்லுவேன்?

அட கடவுளே!
குதூகலமான வாழ்வின்
சிறு குழந்தையாய் திரிதல்
எப்படித்தான் குலைந்து போயிற்றே!

அகதிகளாய் திரிகவென
எங்களை
யார் சபித்திருக்கக் கூடும்?

செந்தணலாய் சிவந்த
சூரியனை ஒரு நாளேனும்
என் பிள்ளைகளும் நானும்
கரும் கோடென நிமிர்ந்து
காணாதிருத்தல் கூடுமோ?

- சுபாஸ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மாணவர் ஆக்கங்கள்



## ஜெயசிக்குறுவும் மாணவர்களும்

நாம் மட்டும் எமது கல்விக்குத் தடையாக உள்ள போராட்ட நடவடிக்கையில் பங்கு கொண்டு, எங்களது வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காது, எங்களது எதிர்கால சந்ததியினது கல்வியைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதற்காக நாங்கள் எங்களது வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டும் என்ற தியாக சிந்தனையுடன் களத்திற்கு விரைவதற்கு இன்றைய மாணவ சமுதாயம் திடம் கொண்டால் நம் நாளைய சமுதாயமும் எம்மைப் போல துன்ப துயரங்களுக்கு முகம் கொடுக்காது நிம்மதியாக, சுதந்திரமாகக் கல்வியைத் தொடர வாய்ப்பாகும் என்பதை இன்றைய இறுதிக் கட்டப் போர் நடவடிக்கையுடன் மாணவர்கள் அனைவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய காலமாக உள்ளது. "பலமே வெற்றிக்கு அறிகுறி'' என்பது போல நம் நாட்டில் பலவீனமாக உள்ள படைப்பலத்தைப் பலப்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம். எதிர்கால சமுதாயம் சுதந்திரமாக நிலையான கல்வியைத் தொடர்வது நிச்சயம். அதன் மூலம் நாடு சுபிட்சமாகத் திகழ்வதும் நிச்சயம்.

ஆகவே இன்றைய நிலையை அதாவது ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை நன்றாக உணர்ந்தவர்கள் நான் பெரிது, நீ பெரிது என்றிராது நம் நாடு பெரிது என்பதை உணர்ந்து போராட்டத்தில் இணைந்து கொள்வது வரவேற்கக்கூடியதொன்றாக உள்ளது.

சு. கோகிலா
ஜோன் கல்வி நிலையம்
புதுக்குடியிருப்பு

***

## இளைஞர்களின் எதிர்காலம்

இன்றைய உலகிலே மக்கள் சுறுசுறுப்பாக இயங்கவேண்டியது அவசியமானது. ஏனெனில், இன்றைய உலகம் நாகரீக அவசர உலகம்; நின்று நிதானித்துக் கடமை செய்யக் காலம் போதாது. தன் நிலையில் இன்றைய உலகின் எதிர்கால வளர்ச்சி அறிவும் ஆற்றலும் மிக்க இளைஞர் சமுதாயத்தை மிகவும் சாரும். உடல் வளமும் உளவளமும்மிகத் துடிப்புடன் செயலாற்றக்கூடிய இப்பருவத்தினர் செய்யவேண்டிய கருமங்களோ அளப்பரியன. இன்றைய இளைஞர் சமுதாயமே எதிர்கால உலகின் ஆணிவேர்கள் என்றால் மிகையன்று. கடமைகளும் பணிவுகளும் இவ்வாறு காத்திருக்க இன்றைய இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இன்றைய இளைஞர்களே நாளைய நாட்டின் தலைவர்கள். இதை "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி, இந்த நாடே இருக்குது தம்பி, சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி''. என்கிறது ஒரு பாடல். நாளைய நாட்டைத் தலைமையேற்று வழிநடத்தக்கூடிய இளைஞர் சமுதாயம் எவ்வாறு இருக்கவேண்டும்.

இளைஞர் சமுதாயம் பொறுப்புணர்வு மிக்கவர்களாக இருக்க வேண்டும். ஒரு கருமத்தை ஆற்றக்கூடிய திடமும் உறுதியுமே நல்ல பொறுப்புணர்வு ஆகும். அன்றி பிரச்சினைகளை எதிர்நோக்க முகம் கொடுத்து அவற்றை வெல்லவெண்ணாது நழுவித் தப்பி ஓடிவிடும் மனப்பான்மை நல்ல பொறுப்புணர்வு ஆகாது. பொறுப்புணர்வுமிக்கவர்களாகத் திகழ்ந்தால் எதிர்காலம் சிறந்ததாகவே அமையும்.

விழிப்புணர்வு மிக்கவர்களாகவும் இளைஞர்கள் விளங்குதல் வேண்டும். ஏனெனில், ஒரு பணியை ஒருவன் தொடங்கும் போது அங்கு பல எதிர்ப்புகள் தோன்றும் அல்லது ஆதரவு தோன்றும். இவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து கணிப்பதற்கு விழிப்புணர்வு மிக மிக அவசியம்.

- துஷ்யந்தி ஐயாத்துரை

***

## எம் முற்றத்துப் புதிய பூக்கள்

விழி ஏந்தும் நீர்த்துளிகள்
கன்னத்தில் சோகச் சுவடுகள் எழுதின
உங்கள் நினைவுகளால் எம் இதயம்
மௌனப் போராட்டம் நடத்தின.
உமை இழந்த செய்தி கேட்டு– எம்
தேசத்தாய் பெரும் குரலில்
அழுதாள்.
உங்கள் குருதி படிந்த தன்
மேனிதனில்
இதழ் குவித்து முத்தமிட்டாள்.
போர்க்களத்தில் புயலென எழுந்து எதிரி
திக்கெட்டும் சிதற களமாடி– உங்கள்
மார்பினிலே குண்டேந்தி மாவீரரென
தேவலோகத் தேவர்களும் போற்றி நிற்க
எம் விழி முன்னே மௌனம் கொண்டு
இருவிழி மூடி ஆழ்துயில் கொண்டீர்
உமைப்பிரிந்த மறுகணமே– தென்றல்
செயலிழந்து நின்றது– துயர்
தாங்காத பூஞ்செடியும்– மலர்
உதிர்த்தி தலை சாய்த்து அழுதது
பெருந் தலைவன் மனதினிலே– உங்கள்
திருமுகங்கள் சுடர் தூவிப் பிரகாசித்தன
மறுபடியும் எழுந்திடுவீர்!
ஈழத் தாயவள் விலங்கைத்
தகர்த்தெறிந்து
அவள் விழி சொல்லும் கண்ணீர்
வரிகளை அகற்றிடுவீர்.
எமை அகன்ற திருமுகங்களை– காலை
எம் வீட்டுமுற்றத்தின் பூ மரத்தின்
புது மலர்களில் தினம் கண்டு
மகிழ்கின்றோம்– நீங்கள்
மரணத்தை வென்றவர் என்று
தேவலோகத்தார் சொன்னதைக் கேட்டு
இன்புற்றோம்.

- பலாலியூர் விஷ்ணுதாசன்
இரணைப்பாலை மகாவித்தியாலயம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இன அழிப்புக்கான ஒத்துழைப்பு

அமெரிக்க அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் சேர்த்துக் கொண்டமையானது விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு நடவடிக்கை என்பதைவிட தமிழர்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்துக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான நடவடிக்கை என்று கூறுதல் சரியானதும் பொருத்தப்பாடானதுமாகும்.



சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்று கூறி மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் தமிழ் மக்களுக்கு எதிரானவை என்பதே யதார்த்தமாக உள்ளது. எடுத்துக்காட்டாக பொருளாதாரத்தடை, மருந்துத்தடை, அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடை என அரசு மேற்கொண்டுள்ள தடைகள் யாவும் தமிழ் மக்களையே பெரும் பாதிப்புக்குள்ளாக்குபவையாக உள்ளன. விடுதலைப் புலிகளுக்கு பொருள்கள் செல்வதைத் தடுப்பவையாகவே இவ்வாறான நடவடிகைகள் எடுக்கப்பட்டுள்ளன என அரசாங்கத் தரப்பில் விளக்கம் கூறப்பட்டாலும் அது ஏற்புடையதொரு விளக்கமாக இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான போர் உச்ச நிலையை அடைந்துள்ள போதிலும் அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் புலிகள் தமது காயமடைந்த போராளிகளைக் கொண்டு செல்வதில்லை என்பதில் இருந்தே அவர்கள் அரச மருத்துவ வசதிகளை நம்பி செயல்படவில்லை என்பதை எவரும் புரிந்து கொள்ளமுடியும்.

அதாவது, விடுதலைப் புலிகள் தமது தேவைகளை ஏதோ ஒரு விதத்தில் பெற்றுக்கொள்கின்றனர் என்பதே உண்மையாகும். இதைத்தவிர சிறீலங்கா அரசின் மருந்துப் பொருட்கள் புலிகளுடைய தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதல்ல என்பதும் உண்மையாகும். இந்த வகையில் அரசாங்கத் தடைகள் தமிழ் மக்களையே துன்பப்படுத்துகின்றது என்பதே உண்மையாகும். இதனைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எனக் கூறுவது முற்றிலும் தவறானது ஆகும். இதைத்தவிர இராணுவ நடவடிக்கைகள் புலிகளுக்கெதிரானதொன்றே என்று அரசாங்கம் கூறிக் கொண்டாலும் அதனால் பெரும் பாதிப்புக்கும் இழப்புக்கும் உள்ளாகுபவர்கள் தமிழ் மக்களாகவே உள்ளனர். காலத்துக்குக்காலம் சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட பாரிய தாக்குதல் நடவடிக்கைகள் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை அகதிகளாக்கி சில ஆயிரக்கணக்கானோரைப் பலியெடுத்தும் உள்ளது. பல்லாயிரம் குடும்பங்களின் பொருளாதாரச் சமூக வாழ்வை நிர்மூலம் செய்துள்ளது. இந்த வகையில் இராணுவ நடவடிக்கை புலிகளுக்கு எதிரானது எனக் கூறுவது எந்த வகையில் பொருத்தப்பாடானதாகும்?

இதைத்தவிர புலிகள் இயக்கத்தின் தோற்றமானது தமிழ் மக்களின் வன்முறைப் பலாத்காரத்தின் வெளிப்பாடல்ல. தார்மீகப் போராட்டத்தில் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடேயாகும். அதாவது, விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமானது தார்மீகப் போராட்டத்தில் தோல்வி கண்ட தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான போராட்டமாகும். இந்த அளவில் இப்போராட்டத்திற்கு எதிரான சிறீலங்கா அரசின் நடவடிக்கைக்கு உதவுதல் என்பது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைக்கு உதவுதல் என்றே கணிக்கப்படும். இந்த வகையில் அமெரிக்க அரசின் நடவடிக்கையானது தமிழ் மக்களுக்கெதிரான பக்கச்சார்பான நடவடிக்கையாகும். உலகின் பலபாகங்களில் பரந்துள்ள தமிழ் அமைப்புக்கள் இதனைக் கண்டனம் செய்ததில் இருந்து அமெரிக்கா புரிந்துகொண்டிருக்க வேண்டும். இதனை அமெரிக்கா புறந்தள்ளுமேயானால் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளை சிங்களப் பேரினவாத அரசுகள் மறுதலிப்பதை அமெரிக்கா ஏற்றுக்கொள்வதாக இருக்கும்.



ஆனால் அமெரிக்க அரசு தமிழ் மக்களின் போராட்டத்துக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையானது தனிமையானதொன்றாக இருக்கமாட்டாது. ஏனெனில், இதேபோன்று வியட்நாமிலும், பாலஸ்தீனத்திலும், தென்னாபிரிக்காவிலும் அமெரிக்கா நடந்து கொண்டுள்ளது. ஆனால் இறுதியில் வெற்றிகாணமுடியாமல் அமெரிக்கா தனது முடிவை மாற்றக்கொள்ள வேண்டி வந்தது. மறுவளமாகக் கூறுவதானால் அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதே ஒழிய போராடிய அமைப்புக்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. போராட்டத்தைக் கைவிடவுமில்லை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# செத்தவர் செருப்புக்காக காத்திருப்பவர்கள்

"உண்மையில் நிகழ்காலம் அல்லது எதிர்காலம் என்று ஒன்றில்லை. ஏனெனில் இறந்தகால நிகழ்ச்சிகளே திரும்பத்திரும்ப நடைபெறுகின்றன''

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே 'தமிழ்ச்சாதி' என்கிற தலைப்பில் "விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயக்கருதியிருக்கிறாயடா?'' என பாரதி பாடிய பாடல், இந்த நூற்றாண்டின் முடிவிலே, இன்றைக்கு, 'நாமும் தமிழர்' எனச் சொல்வோர் சிலருக்கு மிகவும் பொருத்தமுடையதாகின்றது. தமிழீழ அன்னையே, இவர்கள் அரங்கேற்றும் அரசியல் அபத்த நாடகத்தை பார்த்து அயர்ந்துதான் போய்விட்டாள். தந்தை செல்வாவிற்கு நூற்றாண்டு விழா என்கிற சாட்டிலாவது தலையை நீட்டலாமா எனப் பார்க்கும் இவர்கள், தந்தையின் வாய்க்கூடாக வெளிவந்த, அவரது, இறுதியானதும் அறுதியானதுமான வாக்குமூலத்தை முற்றாக மறந்துவிட்டவர் போல் நடிக்கின்றனர். 1975–ஆம் ஆண்டில் காங்கேசன்துறை இடைத் தேர்தலில், 1947–ஆம் ஆண்டின் பின்னான தனது அதிக பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற தந்தை என்ன கூறியிருந்தார்.



தந்தை செல்வா

"அன்னியரால் வலுக்கட்டாயமாக இணைக்கும் வரை வரலாற்றின் முழுக் காலப்பகுதியிலும் தமிழரும் சிங்களவரும் தனித்தனியான தன்னாட்சியுள்ள மக்களாகவே வாழ்ந்தனர். அத்தோடு இங்கே நினைவுகொள்ள வேண்டியது என்னவென்றால், தமக்கும் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேதான் தமிழர் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்றனர். கடந்த 25 வருடங்களாக ஐக்கிய இலங்கைக்குள் சிங்களவர்களுக்குச் சமமான அரசியல் உரிமைகளைப் பெற நாம் எடுக்காத முயற்சிகள் இல்லை. ஆனால், சுதந்திரம் என்கிற வாய்ப்புத் தந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, மாறி மாறி வந்த சகல சிங்கள அரசாங்கங்களும் எமது அடிப்படை உரிமைகளை மறுத்து, எம்மை அடிமை நிலைக்கு தள்ளிய மனவருத்தத்திற்குரிய செயலே இதுவரை நடந்தது. தமிழருக்கும் சிங்களவருக்கும் பொதுவான தன்னாட்சியுரிமை என்கிற ஆட்சியுரிமையைப் பயன்படுத்தியே, இப்படியாக தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசுகளால் செய்ய முடிந்தது. நான் மக்களுக்கும் நாட்டிற்கும் இத்தால் பிரகடனப்படுத்துவது என்னவென்றால் – இத் தேர்தலின் முடிவை, தமிழ் மக்களிடம் ஏற்கனவே பாரப்படுத்தப் பட்டிருந்த தன்னாட்சி உரிமையை பயன்படுத்தி, அவர்கள் விடுதலை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்பதற்கான மக்கள் ஆணையாக நான் கருதுகிறேன். தமிழர் ஐக்கிய முன்னணியின் சார்பில் இந்த ஆணையை முன்னெடுத்துச் செல்வேன் என இத்தால் நான் உறுதி கூறுகிறேன்.''

எவ்வளவு தெளிவான – தந்தையின் மாசற்ற உள்ளத்தில் இருந்து வெளிவந்த உயிர்ப்புக் குரலிது. 1976–ஆம் ஆண்டு நவம்பர் 16–இல் நாடாளுமன்றில் தந்தை பின்வருமாறு மெல்லிய குரலில் உறுதிப்படக் கூறினார். "இணைப்பாட்சி (சமஷ்டி) அரசியலமைப்பிற்கான கோரிக்கையை நாம் கைவிட்டுவிட்டோம். எமது இயக்கம் அகிம்சை முறையிலிருக்கும். சிங்கள மக்கள் என்றோ ஒருநாள் எமது கோரிக்கையை வழங்குவார்கள். நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வேறான தனிநாடொன்றை அப்போது எம்மால் அமைக்கக்கூடியதாக இருக்கும்''. எவ்வளவு நம்பிக்கையான, தீர்க்கதரிசமான குரல். இந்தக் குரலை தமிழர் எவராலும் மறக்கமுடியுமா? ஆனால், மறந்துவிட்டார்களே. அண்மையில் அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் கொழும்பிற்கு வந்திருந்தபோது, அவரைச் சந்தித்த புளுகத்தில், தந்தையின் வழி நிற்பதாக கூறுவோர் என்ன கூறினர்.

"நாங்கள் சந்திரிகாவின் அரசியல்



டி. எஸ். சேனநாயக்கா

பொதியை ஆதரிக்கின்றோம், நாம் அகிம்சைவாதிகள்'' என தமது அரசியல் வணிகக்குறி அடையாளத்தை வெளிப்படுத்தினர். இவர்களைப் பற்றி மட்டுமல்ல, ஆயுதங்களைக் கைவிட்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் குதித்து அதில் நீச்சலடிப்போர் பற்றியும் அண்ணல் காந்தி அன்றே கூறிவிட்டார். "கோழைத்தனத்தை மறைக்க அகிம்சைவாதியாக இருப்பதை விட வன்முறையாளனாக இருப்பதே எவ்வளவோ மேல்''.

தமிழீழ அன்னை அயர்ந்து போனதற்கு பட்டியலிடக்கூடிய பல்லாயிரம் காரணங்கள் உண்டு. இவையாவற்றினையும் தொகுத்துப் பட்டறிவு என்னும் பல அத்தியாயங்கள் கொண்ட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நூலாக, அன்னை, எப்போதோ வெளியிட்டுவிட்டாள். அதனடிப்படையிலேயே இறுதிப் போராட்ட வடிவமாக, ஆயுதப் போராட்ட வடிவம் உருப்பெற்றது உலகறிந்த உண்மை. இப்போது மீண்டும் அதனையே தமிழீழ மக்கள் நினைவுகூர வேண்டிய நிலையேற்பட்டுவிட்டது. இந்நூலின் முதல் அத்தியாயம் தமிழர் மீதான அடக்குமுறைச் சட்டவடிவங்கள் பற்றியது. 1948 குடியுரிமை பறிப்புச் சட்டம்; 1956–ஜூன் தனிச்சிங்களச் சட்டம்; 1979 பயங்கரவாதத் தடைச்சட்டம் ஈறாக இன்றைய அவசரகாலநிலைச் சட்டம் வரை இதனுள் அடக்கம். இரண்டாம் அத்தியாயத்திலே சிங்களவர் எழுதி எழுதிக் கிழித்த ஒப்பந்தங்கள் பற்றியது: 1920–களில் மேல்மாகணத்தில் தமிழர்க்கு பிரதிநிதித்துவம் தருவதாகக் கூறி ஏமாற்றிய மகேந்திரா உடன்பாட்டோடு இவ் ஏமாற்றுப்படலம் ஆரம்பமாகின்றது. மூன்றாம் அத்தியாயமோ குருதிக்கறை நிறைந்தது. தமிழர் மீதான இன அழிப்பு வன்முறை பற்றிய விபரங்கள் நிறைந்தது. 1956 – ஜூனில் 150 தமிழரை பலியெடுத்ததில் தொடங்கிய இன அழிப்பு வன்முறைகள், தொடர்ந்து 1983 கரும் ஜூலை வரையும், காலத்திற்குக் காலம் பூவும் பிஞ்சுமாக, காயும் கனியுமாக தமிழர் உயிரை கொத்துக் கொத்தாக பறித்த படுகொலைகளும் என தமிழர் குருதியால் எழுதப்பட்ட அத்தியாயமிது. அடுத்த அத்தியாயமோ இந்தியத் தலையீட்டின் விளைவுகள் பற்றியது; அவற்றின் தோல்வி பற்றியது; சிங்களத் தலைமை எவ்விதம் இம்முயற்சிகளைச் சீரழித்தது என்பது பற்றியது; நரசிம்மராவ், பார்த்தசாரதி போன்றோர் 1983—ஜூலை வன்முறையை அடுத்து தூதுவர்களாக வந்து தயாரித்த இணைப்பு 'சி' தீர்வுத்திட்டத்தினை ஜே.ஆர். நிராகரித்த விதம்; 1985 – ஜூலை மாதத்து திம்புப் பேச்சுவார்த்தையைக் குழப்ப, வவுனியாவில், படைகளைக் கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட தமிழரைக் கொன்று குவித்த மோசம்; 1986 – நவம்பர் பெங்களூர் பேச்சுவார்த்தையின் போது தென்தமிழீழத்தை மூன்று துண்டாக்கும் நாசகாரத்திட்டத்தை முன்வைத்துப் பேச்சுக்களை வெற்றியடையாமல் பார்த்துக் கொண்ட முறை; டிசம்பர் 19–ம் திகதி திட்டத்தினை, முஸ்லிம்கள் எதிர்ப்பதாக சாட்டுக் கூறி, அதை முறியடித்த தன்மை; 1987 இலங்கை—இந்திய உடன்பாட்டினை கூட இருந்தே குழிபறித்து, கேலிக்கூத்தாக்கிய ஜே.ஆரின் குள்ளநரித்தந்திரம் என, கண்முன்னே நடைபெற்ற இவ் ஏமாற்று வித்தைகளை நன்கறிந்த பின்னும், சந்திரிகாவின் அரசியல் பொதியை, அமைதிக்கான போரை ஆதரிக்கும் நயவஞ்சகத்தை என்னவென்று அழைப்பது?



"தமது சொந்த நலன்களுக்காக தமது நாடு உயிர்துறக்க வேண்டுமென விரும்புபவர்கள்'' என அறிஞர்கள் வகைப்படுத்தும் இழித்தகைமை உடையவர்கள் இவர்கள்.

ஈழத் தமிழன்னையின் வரலாற்றுப் பட்டறிவு நூலின் இறுதி அத்தியாயமோ, தமிழ் மக்கள் அனைவருக்கும், இன்று உக்கிரமாக நடைபெறும் இறுதிப்போரின் உண்மையான முகத்தை, அதன் வரலாற்று வழிவந்த காரணத்தைத் தெழிவுபடுத்துகின்றது. சிங்களம் தனது முழுப்பலத்தையும், வளத்தையும் விரல் நுனியில் திரட்டி, தனது நாட்டின் பொருண்மிய எதிர்காலத்தையே பணயம் வைத்து இப்போரை ஏன் நடத்துகின்றது? நிலம் – நிலம் – நிலம்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதே வரலாற்றுத் தாயின் வரைவிலக்கணம். 1930–களிலே டி.எஸ்.சேனநாயக்காவின் மூளையிலே இப்போர் தொடங்கிவிட்டது. தமிழர்களைக் கீழ்மைப்படுத்தி, அவர்களது பரம்பரை வாழிடங்களை சிதைத்தல், துண்டாடல் என்கிற பேரினவாதத்தின் பெரும் திட்டத்திற்குள், முதலாம் கட்டமாக தென்தமிழீழம் சிங்கள மயமாக்கப்பட்டு, தொடர்ச்சியான தென்தமிழீழத் தாயகப்பகுதியே துண்டாடப்பட்டது. இது எவ்விதம் நடைபெற்றது?

ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி என்கிற பெயரில் பட்டிப்பளை – கல்லோயாவாக, நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்பு என்கிற பெயரில், பதவில் குளம் பதவியாவாக ஆகி, அல்லை கந்தளாய் குளங்கள் சிங்களவர் வயல்களுக்கு தமிழர் நீரைப் பாய்ச்ச, 1960–ம் ஆண்டு, திடீரென, சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்றது. 1970–களில் 1500 சதுர மைல் பரப்பளவில் அம்பாறை, சேருவாவில என சிங்களத் தொகுதிகள் முளைத்தன. இவ்வாறாக புவியியல் ரீதியாக தொடர்ச்சியாகவிருந்த தென்தமிழீழ தாயகம் அம்பாறை எனும் சிங்கத்தின் வாயால் துண்டாடப்பட்டது. இது வெற்றிரமாக நிறைவேற்றப்பட்ட முதலாம் கட்டம்.

இரண்டாம் கட்டமோ இன்றும் ஆபத்தானது. தமிழீழத் தாயகத்தையே இருகூறாக்குவது; பாலத்தீனிய மண்ணின் கேந்திரப் பகுதியில் அமைந்த யூதக்குடியேற்றங்கள் போல, மணலாற்றின் இதயத்தில் 3000–ற்கும் மேற்பட்ட சிங்களக்குடும்பங்கள் தொடக்கத்தில் எவ்விதம் குடியேற்றப்பட்டன? 1984–ம் ஆண்டு டிசம்பர் 24–ம் நாள் தமிழர் வாழ்வில் கரிநாள். நாயாற்றிற்கு மேற்கே, தெற்கே பல பத்துத் தொன்மைத் தமிழ்க் கிராமங்கள் சிங்கள சேர்பியரால் இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்ட நாள். இதன் விளைவு, 1986–ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் வெலிஓயாவில் சிங்கள வாக்காளர் என்னும் புதுப்பட்டியல் இணைக்கப்பட்டது. 1988–ம் ஆண்டு ஏப்ரல் 15–ம் திகதி அடுத்த அடி – அன்று வெளியிடப்பட்ட சிங்களத்தின் பிரகடனமொன்றில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தின் பெரும்பகுதி 'விசேட பாதுகாப்பு வலயமாக' குதறி எடுக்கப்பட்டது. இதன் எல்லைகளை நோக்குவோர், இன்று நடக்கும் போரின் சூட்சுமத்தை உடனே புரிந்து கொள்வர். வடக்கு எல்லை, புளியங்குளம் – முல்லைத்தீவு பிரதான சாலையின் நெடுங்கேணி சந்தியாம். கிழக்கில், தண்ணீரூற்று – குமுழமுனைச்சாலை, நாயாற்று கடனீரேரியில் சந்திக்கும் பகுதியாம். தெற்கின் எல்லையானது, கெப்பொற்றிக்கொல்லாவை – புல்மோட்டை வீதியால் நடுவாகச் சென்று பதவியா குளத்தின் வலது கரை கால்வாயில் போய்முடிகிறதாம். எப்படிப் போகின்றது கதை? குத்துமதிப்பாக பார்த்தாலும், திருமலை மாவட்டத்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தில் முன்னர் தமிழர் விரட்டடப்பட்ட தென்னமரவாடி, அமரிவயல், புல்மோட்டை பகுதியைச் சேர்த்துப் பார்த்தாலும் 50–க்கு மேற்பட்ட தமிழர் வாழ்விடங்கள் மண்ணோடு மண்ணாகப் போகும் நிலை.

இனி மூன்றாம் கட்டம், சமகாலகட்டம் ஜயசிக்குறு காட்டும் கோலம்; இந்த இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டு பத்து நாட்களுக்குள், அம்மையாரின் அரசு, மணலாற்றுப்பகுதி தற்காலிகமாக அனுராதபுரத்துடன் இணைக்கப்படுவதாக அறிவித்தது. அதுவும் பதவியா பிரதேசச் செயலர் பிரிவோடுதானாம் இணைப்பு. சேனநாயக்கா தொடங்கியதை சந்திரிகா பண்டாரநாயக்கா முடித்து வைக்கின்றார். கடல் காணாத அனுராதபுர மாவட்டத்திற்கு கடல் எல்லையாகின்றது. அடிக்குமேல் அடி விழுந்து ஆமை வேகத்தில் இராணுவம் நகர்ந்தாலும், தமிழர் தாயகத்தின் இதயப் பகுதி எப்படியோ சிதைக்கப்படுகின்றது என்பதில் விசமத்தனமான மகிழ்ச்சி கொள்கிறது சிங்களம். வெலிஓயாவிலுள்ள 6–வது பிரிகேட்டு நெடுங்கேணியுடன் இணைக்கப்படுமாம். ஓமந்தைக்கு வடக்கே, புளியங்குளத்திற்கு கிழக்கே, நெடுங்கேணி, கென்ற் பாம் ஊடாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் வரை புதிய முன்னணி பாதுகாப்பு எல்லை போடப்படுமாம் என சிங்களம் தன்னை உரித்துக் காட்டுகின்றது.

"ஒடுக்குமுறைக்கு எதிராக மௌனமாக இருப்பவர்கள் அனைத்து அம்சங்களிலும் இறந்துவிடுகின்றனர்'' என்பது, விடுதலைக் குரல் எழுப்பியதால் தூக்கிலிடப்பட்ட நைஜீரியக் கவிஞன் டோயிங் காவின் கூற்று. ஆனால், அகிம்சாவாதிகளும் ஆயுதங்களை ஆற்றில் வீசியோரும், இங்கே ஒடுக்குமுறைக்கு துணையுமல்லவா போகிறார்கள். இவர்கள் "செத்துப் போனவர் செருப்புக்காகக் காத்திருப்பவர்கள்''. ஆனால் காலம் காத்திருக்குமா? இப்போது வன்னியில் வானம் மட்டும் சிவப்பதில்லை; தமிழீழ அன்னையின் புதல்வர்கள் சிந்தும் குருதியால் மண்ணும் சிவக்கின்றது; "காலமும் மனித ஆற்றலும்'' இணைந்த வரலாற்றின் உந்து சக்தியாக விளங்கும் புலிகளைக் கண்டு சிலிர்ப்படைகின்றது.

**— வே. பாலகுமார்**

## போராளியின் காதலி

செய்தித்தாள்
வானொலி
அவதியில் திரியும் விமானங்கள்
காற்றை வருத்தும் போரின் ஊளை
இவை போதாதா?
உன் இருப்பின் அந்தரிப்பை உணர்வதற்கு.

மெலிந்து கண்ணோரங்களில் கருமைபடிந்து
ஆனால் புலனைந்தும் மிக விழிப்புற்று
மண்ணிலொரு பிடியெனினும்
அள்ளவரும் கைதறிக்க காத்திருக்கிறாய்
ஒரு பொறியென நீ.

திறந்த பதுங்குகுழியில்
சற்றேனும் விழிமூட கிடைத்த சிறுபொழுதில்
களைத்த விழிகளைக் குவித்தபடி
உன் எண்ணங்கள் யாரை வட்டமிடும்!
என்னைத்தானே?
(சுயநலம் தான்
ஆனாலும் அப்படி ஏங்கும் மனசுக்கு
கடிவாளமில்லையே என்னிடம்)
அல்லது உன் அம்மாவையா?
இல்லை ஒற்றைத் தங்கையையா
எல்லோரையும் ஒதுக்கிவிட்டு
எதிரியின் அடுத்த நகர்வையா?

கௌரி நோன்பு
சஷ்டி நோன்பு
சதுர்த்தி நோன்பு
வெள்ளி நோன்பு என
நீளும் நாளெல்லாம் நோன்பிருந்து
நீ வருந்தா வரம் வேண்டி
நான் வருந்தித் தொழுகின்றேன்.
மனசுக்குள்-
உன் பதுங்குகுழியின் சுவரில்
வைரவர் சூலம் வரைகிறேன்.
வேறு என்னதான் செய்வது நான்
ஒரே தவிப்பாக இருக்கிறது எனக்கு.

மெலிந்து போவதாயும்
கண்ணோரங்களில் கருமைபடிவதாயும்
அடிக்கடி
புலனறுந்து சூனியத்தை வெறிப்பதாயும்
பெற்ற வயிற்றுக் கொதிப்பைக்
கொட்டுகிறாள் அம்மா.
பெற்ற வயிறு மட்டுமா கொதிக்கும்?

போராளியின் தாயென்ற பெருமிதம்
விகசிக்கும் முகத்தினளாய்
காட்சிகளில் துலங்குகிறாள் உன் அம்மா.
பொருளறியாப் பொறாமையில் கசங்குது மனசு.
போராளியின் காதலி என்ற பூரிப்பு
ஒளிர்கிறதா என் முகத்தில்?
மற்றவர்களுக்கு எப்படியோ!
கண்ணாடி சொல்கிறது
பூரிப்பில் மிளிருதென் முகமென்று.

நேற்று
ஒரு பெண் போராளிக்கு
அஞ்சலிக் கவிதை எழுதினேன்.
உனது நிலைக்கு
அடுத்தடுத்த நிலையொன்றில் தான்
அவளும் வீரச்சாவடைந்திருக்க வேண்டும்.
அவளின் உடல் கிடைக்கவில்லை.
எழுதத் தொடங்கியது முதல்
அபத்தமான சிந்தனைகளில் சிக்கி
அலைக்கழிந்தது மனம்.
அழவேண்டும் போல் இருந்தது எனக்கு.
அந்தக் கவிதை மிகநன்றாக இருந்ததாக
பலரும் சொன்னார்கள்.
எனக்குப் பிடிக்கவில்லை.

**– உமாஜிப்ரான் –**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறை சந்திரிகா அரசின் போர் உபாயம்

அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக சக்தியை உடைப்பதிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர்.

– தமிழீழத் தேசியத் தலைவர்

பாலியல் வல்லுறவு – மனித நாகரிகம் எவ்வளவோ முன்னோக்கி நகர்ந்தும் இன்றும் மறையாமல் இருக்கும் காட்டுமிராண்டித்தனம். பொதுவாக, சட்டம் — ஒழுங்கு நன்றாக அல்லது இயலுமான அளவிற்கு பாதுகாக்கப்படும் நாடுகளில் இக்காட்டுமிராண்டித் தனங்கள் புரிபவர்களைச் சட்டம் தண்டிக்கும். ஆனால் ஆக்கிரமிக்கப்பட்ட பூமியில் ஆக்கிரமிப்பாளர்கள் எது செய்யினும் தண்டனை இல்லை.

போர் நடைபெறும் நாடுகளில் இப் பாலியல் வல்லுறவுகள் ஆக்கிரமிப்பாளர்களால் மக்களுக்கெதிரான ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகிறது. இக் குற்றங்கள், பொதுவாகப் போர் பூமியில் நடைபெறுபவைதான் என மிகச் சாதாரணமாக சர்வதேச விமர்சகர்கள் கூறிவிடுகின்றனர். இதனால் பாதிக்கப்படுபவர்கள் எவ்வாறான நீண்டகால உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர் என்பதை சிந்திக்கத் தவறுகின்றனர். இவ் விமர்சகர்கள் பெரும்பாலும் போர்ச் சூழல் காணப்படும் பிரதேசத்திற்கு அப்பால் உள்ளவர்களாகவும் பாதிக்கப்படும் மக்கள் கூட்டத்தைச் சார்ந்தவர்களாகவுமே இருப்பர்.

இப் பாலியல் வல்லுறவுக் கொடூரங்கள், சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழப் பிரதேசங்களில் தற்போது தினம் தினம் பரவலாக நடாத்தப்படுகின்றன. குறிப்பாக, யாழ் குடாநாட்டிலும், மட்டக்களப்பிலும் (சிங்களப் படையின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகள்), அம்பாறைப் பகுதியிலும் அதிகரித்தவண்ணம் உள்ளன. பல ஆண்டுகளாக யாழ் மண்ணில் கால்பதிக்க முடியாத நிலையில் இருந்த சிங்களப் படைகளுக்கு, 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை மூலம் யாழ் குடாநாட்டிற்குள் காலடி வைத்தவுடன், தவம் இருந்து பெற்ற பிள்ளை போன்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும் விடுதலைப் புலி வீரர்களின் தொடர்ச்சியான — அதிர்ச்சியூட்டும் தாக்குதல்களால் மக்களை இலகுவாக அடிமை கொள்ளலாம் என்ற தமது ஆதிக்கக் கனவு, கனவாகவே இருக்கப் போகிறது என்ற கலக்கம் சிங்களப் படைத்தலைமையில் இருந்து சாதாரண சிப்பாய் வரைக்கும் இருந்தது. ஏனெனில், யாழ். குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு இராணுவத்தினனும் தன்னை ஓர் 'ராஜா'வாகவே எண்ணத் தலைப்படுகிறான். வீதியில் செல்லும் மக்களை



தன் எண்ணப்படி எதுவும் செய்யலாம் — பாடசாலைப் பெண் களை தனது பாலியல் இச்சைக்கு ஆளாக்கலாம் — கொலை கூடச் செய்யலாம் — கள்ளச் சாராயம், ஆபாசப் படங்கள், போதை மருந்துகள் விற்றல் போன்றவற்றை ஊக்குவித்து அதிலிருந்து பணம் திரட்டல், இவ்வாறான செயல்களை இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர்களே செய்யும்போது சாதாரண இராணுவத்தினன் எப்படி இருப்பான் என்பதை எண்ணிப் பார்த்தாலே புரியும்.

கடந்தாண்டு கிருஷாந்தி எனும் கல்லூரி மாணவியின் பாலியல் வல்லுறவுச் சம்பவம் சர்வதேச அளவில் வெளிப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னரும் சிங்களப் படைகள் யாழ் குடாநாட்டில், தென் தமிழீழத்தில் பல பாலியல் வல்லுறவுக் கொலைகளை நடாத்தியிருக்கின்றன. அவற்றில் சில வெளிவந்தன. பல இராணுவப் பயமுறுத்தல்களால் மறைக்கப்பட்டன. வெளிக்கொணரப்பட்டவையும் சர்வதேச செய்தியாளர்களின் கண்களில் பட்டும் காணாதவர்களைப் போல் இருந்துவிட்டனர். கிருஷாந்தியும், அவரின் நிலை பற்றி விசாரிக்கச் சென்ற அவரின் தாயும், சகோதரனும், உறவினர் ஒருவரும் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட செய்தியின் பின்னரே பலரின் கண்கள் திறந்தன. சர்வதேச மனித உரிமைச் சங்கங்கள் வெளிப்படையாக சிறீலங்கா அரசைக் கண்டித்தன. சிறீலங்காத் தலைநகர் கொழும்பிலும் பெண்கள் நல அமைப்புக்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தின. சிறீலங்கா அரசிற்கு இது எதிர்பாராத ஓர் அதிர்ச்சிதான். சர்வதேச சமூகத்திற்கு வித்தைகாட்ட மீண்டும் தன்னை தயார்படுத்திக் கொண்டு, வழக்கம்போல விசாரணைக் குழு அமைத்தது. சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை இனங்கண்டு தண்டித்ததாகவும் கூறியது. இருப்பினும் வெளிப்படையான நீதி விசாரணை எதுவும் நடைபெறவில்லை. ஆக, உண்மையிலேயே விசாரணை நடந்ததா என்பதை கண்டவர்கள் (அர



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சைத்தவிர) யாருமே இல்லை. இவ்வாறான விசாரணைகள் நடத்தினால் இராணுவத்தினர் உளவியல் ரீதியாக உற்சாகம் குன்றிவிடுவர் என சிங்கள இராணுவத் தளபதிகள் அரசிற்கு எடுத்துக்கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையே மறுக்கும் ஓர் அரசிடம் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது மடைமைத்தனம். அதுவும், தான் ஓர் பெண்ணாக இருந்தும், அவரால் வழிநடத்தப்படும் படைகளால் பெண்கள் மீது நடாத்தப்படும் இக் கொடூரங்களை, நாட்டின் தலைவர் எனக் கூறிக்கொள்ளும் சந்திரிகாவால் ஏன் நிறுத்த முடியாது? எப்படி முடியும்? தனது ஆட்சியில் தமிழர்களின் போராட்டத்தை முறியடிக்க வேண்டும், அவர்களை அடிமை கொண்டு ஆள வேண்டும் என்ற பேரினவாத ஆதிக்கவெறி அவரில் குடிகொண்டுள்ளபோது, சந்திரிகா எவ்வாறு இதைத் தடுப்பார் — மாறாக, ஊக்குவிக்கவே செய்வார்!

கிருஷாந்தி கொலையில் பின்னரும் பாலியல் வல்லுறவுகள் தொடரத்தான் செய்தன – தொடர்ந்து கொண்டும் உள்ளன. கோண்டாவிலில் இளம்பெண் — அச்சுவேலியில் பாடசாலைச் சிறுமி – மண்டூரில் திருமணமான பெண்மணி — மயிலாம்பாவெளியில் வேலைக்குச் சென்ற தாயும் மகளும் — தியாவட்டுவான் வாழைச்சேனையில் தாயும் மகளும் கணவன், பிள்ளைகள் முன்னிலையில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டமை இவ்வாறு பல அப்பாவிப் பெண்கள். இவர்கள் 'தமிழர்' என்ற ஒரே காரணத்திற்காகவே இக் கொடூரங்களுக்கு ஆளாகின்றனர். இவற்றோடு மட்டக்களப்பு 102—ம் கொலனியில் நடைபெற்ற சம்பவம் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமை. சிங்கள காவற்துறையைச் சேர்ந்த 10 பேர், 4 பிள்ளைகளின் தாயான திருமதி கோணேஸ்வரி முருகுப்பிள்ளை என்பவரை அவரின் கணவன் – பிள்ளைகள் முன்னிலையில் கூட்டான பாலியல் வல்லுறவுக்குள்ளாகியுள்ளனர். பின்னர், சம்பவத்தை மறைப்பதற்காக அத் தாயின் பிறப்பு உறுப்பில் கைக்குண்டை வெடிக்க வைத்து அவரைக் கொன்று உடலைச் சிதைத்துள்ளனர். இவ்வாறான அட்டூழியங்களைப் புலியும் காவற்துறையைக் கொண்ட சிறீலங்கா தன்னைக் கூறிக்கொள்வது "சமதர்ம ஜனநாயக மக்கள் குடியரசு".

முன்னாள் யூகோஸ்லாவியாவில் போர் தொடங்கியபோது, பொஸ்னியா நாட்டில் பலமான நிலையில் இருந்த பொஸ்னியச் சேர்பியர்கள், பொஸ்னிய முஸ்லிம் மக்களை பலவிதமான கொடுமைக்குள்ளாக்கினர். பல இலட்சம் மக்கள் சேர்பிய இராணுவத்தால் பட்டினிக்கு உள்ளாக்கப்பட்டும், சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டும் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பொஸ்னிய சேர்பிய அரசியல் தலைவரும், இராணுவ தலைமைத் தளபதியும் இதற்கு முக்கிய காரணகர்த்தாக்கள். இவர்கள் இருவரும் தற்போது சர்வதேச போர்க் குற்றவாளிகள்.

**தனது ஆட்சியில் தமிழர்களின் போராட்டத்தை முறியடிக்க வேண்டும், அவர்களை அடிமை கொண்டு ஆள வேண்டும் என்ற பேரினவாத ஆதிக்கவெறி அவரில் குடிகொண்டுள்ளபோது, சந்திரிகா எவ்வாறு இதைத் தடுப்பார் - மாறாக, ஊக்குவிக்கவே செய்வார்!**

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, சேர்பிய இராணுவத்தினால் பெருமளவிலான பொஸ்னிய முஸ்லிம் பெண்கள் (திருமணமானவர்கள், யுவதிகள், பாடசாலை மாணவிகள்) பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டனர். இதன் நோக்கம் – தம்மால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட இப் பெண்கள், கருத்தரித்துப் பிள்ளைகள் பிறந்தால், பொஸ்னிய முஸ்லிம் – சேர்பியர் என்ற கலப்பினத்தை உருவாக்கி கணிசமானளவு பொஸ்னிய முஸ்லிம்களின் தேசியத் தனித்துவத்தை அழிக்கலாம் என்ற குரூர எண்ணத்திலேயை இது செய்யப்பட்டு. இவ்வாறான ஓர் கலப்பின உருவாக்கல் சிந்தனையை மறைந்த பேரினவாதி ஜெயவர்த்தனாவும் தனது ஆட்சியின்போது கூறியிருக்கின்றார். தமிழர் இனப்படுகொலையில் பல படிகள் மேலே போயுள்ள சந்திரிகாவின் ஆட்சியிலும் இப்படிப் பல எண்ணங்கள் — கற்பனைகள் செய்திகளாக வெளிவருகின்றன. அதாவது, முதற்கட்டமாக யாழ் குடாநாட்டில் உள்ள பத்தாயிரம் இராணுவத்தினர் தமிழ்ப் பெண்களை திருமணம் செய்துகொள்வதால் இனப்பிரச்சினையை சுலபமாக தீர்த்து விடலாம் என்பதே அச் செய்தி.

இவ்விடயத்தில்தான் நம் மக்கள் ஒருவிடயத்தை நன்கு தெளிவுறப் புரிந்து கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்டவை போன்ற கெட்ட காரியங்களைப் புரிய சிங்கள இனவாதப் பூதம் சிலவேளை முனையலாம். சிலவேளைகளில் இவற்றை விட பூதாகாரமான முயற்சியிலும் ஈடுபடலாம். ஆகவே, இத்தகைய பாலியல் வல்லுறவுகள் தொடர்ந்தும் நடைபெறாமல் தடுப்பதற்குரிய பெரும் பங்கு தமிழ் மக்கள் கையிலேயே உள்ளது. இதில் தாயகத்தில் உள்ள தமிழர்கள் புலம்பெயர்வாழ் தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் பெரும் கடமைப்பாடு உண்டு. தியாகி திலீபன் கூறியது போல, மக்கள் எழுச்சியை எச்சக்தியாலும் அழித்துவிட முடியாது. ஒட்டுமொத்தமான மக்கள் குரல் அந்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் ஒலிக்கும்.

தமிழீழத்தில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போது, ஆரம்பத்தில் அச்சம் கொண்ட மக்கள், படிப்படியாக வீதிக்கு வந்து இந்திய இராணுவத்தினருக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் நடாத்தவில்லையா? பலவிடங்களில் கெட்ட எண்ணத்துடன் பெண்களை 'விசாரணை' எனும் பெயரில் கைது செய்து இராணுவ வண்டியில் ஏற்றியவேளையில், மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து அக் கைதுகளை தடுத்திருக்கின்றார்கள். எமக்கு முகம் தெரியாதவர்களாக இருப்பினும், நமது சொந்தங்கள் என்ற உணர்வுடன் ஒருமித்து ஆக்கிரமிப்பாளனை நோக்கிக் குரலை உயர்த்த வேண்டும். புலம்பெயர்வாழ் தமிழர்கள் சிலருக்குத் தமிழீழத்தில் தற்போது கிட்டிய உறவுகள் என்று எவரும் இல்லாமல் இருக்கலாம். அதனால் இவற்றைப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்ற மனப்பான்மை ஒருபோதும் ஏற்படக்கூடாது. ஜேர்மனிய நாசிப்படை, யூதர்களை முதலில் ஜேர்மனியில் அழிக்கத் தொடங்கியபோது, ஐரோப்பாவின் பல நாடுகளிலும் வாழ்ந்த யூதர்கள் இவற்றைப் பற்றி பெரிதாக கவலைப்பட்டதாக வரலாறு இல்லை. பின்னர் இக் கொலைவெறி தாங்கள் வாழ்ந்த நாட்டுக்கும் பரவத்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தொடங்கியபோதே விழிக்கத் தொடங்கினர். இருப்பினும், அது சிறிது கால தாமதமான விழிப்புணர்ச்சியாகவே இருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்துள் வாழும் மக்கள், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால், ஆக்கிரமிப்பாளனை அம் மண்ணிலிருந்து அகற்ற வேண்டும். அதற்கு மக்கள் தொடர்ந்து விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும். பல வெகுசனப் போராட்டங்களை நடத்த வேண்டும். மக்கள் சினம் கொண்டு தமது பொறுமையை இழந்தால், அந்நாளிலிருந்து ஆக்கிரமிப்பாளனின் நிம்மதி குலையும் – நிலை தடுமாறும். இந்த வகையில் புலம் பெயர் வாழ் தமிழ் மக்களும் தம் நாடுகளில் உள்ள செய்தித் தொடர்புச்சாதன வசதிகளை பயன்படுத்தி, தமிழீழத்தில் இடம்பெறும் கொடுமைகள் செய்திகளாக வரும் வேளையில், அவற்றை தம் நாட்டில் உள்ள அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைச் சங்கங்களுக்குத் தொடர்ந்தும் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக , புலம் பெயர் வாழ் தமிழ்ப் பெண்கள் இந் நடவடிக்கைகளில் தம்மை அதிகம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஒரு பெண்ணின் மன உணர்வை இன்னோர் பெண்ணாலேயே அதிகம் உணர்ந்து கொள்ள முடியும். உடனடியாக அதற்குப் பலன் கிடைக்காவிடினும் அதனால் எமது பிரச்சினைகளை பலர் அறிந்து கொள்வதுடன், எமது போராட்டம் நியாயமானது என்பதைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும்.

எமது இனத்திற்கு நடக்கும் கொடுமைகளை நாம் வெளிப்படுத்தாமல் வேறு எவர் எமக்கு வந்து செய்து தரப் போகின்றார்கள். மற்றும் மனித உரிமையை நிலைநாட்ட உழைப்பவர்களை எவரும் தடுக்கவும் மாட்டார்கள் – தடுக்கவும் முடியாது. சிங்களப் படை இன்னோர் அப்பாவித் தமிழ்ப் பெண்ணை– மக்களை தனது கொடுமைகளுக்கு ஆளாக்குவதற்கு முன்னர் நாம் சிந்தித்துச் செயல்படுவோம். எமது முயற்சிக்கு நிச்சயம் பலன் கிடைக்கும்.

சிறீலங்காவின் அரசியல்வாதிகளும், சிங்களப்படைத்தரப்பு அதிகாரிகளும் என்றோ ஒரு நாள் சர்வதேச போர்க் குற்றவாளிகளாக வலம் வரத்தான் போகின்றார்கள்.

- மோகன்

# அழியும் கால மனிதர்கள்

என்னைப் போலவும் மற்றவர்களைப் போலவுமே  
அவர்களும் நினைத்திருப்பார்கள்.  
களப்பாற்றின்  
குட்டித்தீவுகளுக்குள்  
ஆயிரம் ஆயிரம் அரச துப்பாக்கிகளின்  
நிழல் சமாதானத்தைத் தருவதாய்!  
அரைகுறையாய் முடி சூடிய துறந்த  
எல்லா இளைஞர்களைப் போலவும்  
அவர்களிடமும்  
வானத்தின் எல்லையை  
எட்டிவிட்டதான  
மமதை குடிகொண்டிருந்தது.  
இருப்பின் சுயத்தை விளங்காதிருக்கும்  
ஏற்பாட்டின் பிரமிப்பில் அவர்களும்  
கிறங்கிப் போயிருந்தார்கள்.  
அலங்காரச் சைக்கிளும்  
ஆபாசப் படங்களும், ஏன்  
மற்றெல்லாப் பேரானந்தப் பொருட்களும்  
அவர்களுக்குத் தாராளமாய்  
அள்ளி வழங்கப்படுகிறது.  
முட்டையடிப் பெருநாளான அன்றும்  
அவர்கள் அப்படித்தான்;  
மீண்டுமொரு முறை  
வானத்தை எட்டித் தொட்டுவிட  
கைகளில் முட்டைகளுடன்  
வீதிக்கு இறங்கினார்கள்.  
கோபம் குடிகொண்டிருந்த  
சமாதானத் துப்பாக்கியொன்று  
அவர்களைச் சுட்டுக் கொன்றபோது  
என்னால் சமாதானத்தின் இருப்பை  
உணர முடிகிறது  
ஆனாலும்  
இங்கே இன்னும் பலர்  
வானத்தைத் தொடும்  
ஏக்கத்தில் கிறங்கிப்போய்க் கிடக்கிறார்கள்.



- ஆழ்வார்பிள்ளை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தலைக்காத்து



வானம் இருண்டிருந்தது.

பேரிரைச்சலுடன் காற்றும், மழையும் அடித்தது.

"புள்ளை.... புள்ளை... புள்ளை விமலா..."

அருகில் நித்திரை கொண்ட விமலாவை எழுப்பினாள் அன்னம்.

"ம்... ம்... என்னம்மா...? இந்தச் சாமத்திலை..."

"கொய்யா கடற்கரைக்குப் போறார் போலிருக்குப் புள்ளை..." என்றாள் அன்னம்.

"இன்று... நேற்றா... நடக்குது...? பேசாமல் படுங்கோ... ம்... மா. ஐயான்ரை குணம் தெரியும் தானே? அறுகுவெளி... கோவிலாக்கண்டி.... கச்சாய்... கச்சாயிலிருந்து கடல் கடக்காமைத் திரும்பவும் வீட்டுக்கு வந்தோம். ஏன்...? அவற்றை நிம்மதிக்காக. "கடற்தண்ணிகால் கைபடாமல் நித்திரை வராதே".

தாயைச் சாந்தப்படுத்தினாள் விமலா.

அன்னத்துக்கு நித்திரை வரவில்லை.

கழுத்தை நீட்டி 30 வருட காலத்தில் ஒரு நாளாவது தலையிடியெண்டு படுத்தறியார்..., ஓடி.. ஓடி... இரண்டு மூன்று தொழில் செய்வார். எப்பவும் இந்தக் கடலும், கரையும்தான். ஊரவைக்கு ஒண்டெண்டா முன்னுக்கு நிப்பார். பந்தல் போடுறதிலை இருந்து கூரைப்பாய் தைக்கிறவரை தெரியாத தொழில் இல்லை.

சனிக்கிழமை முழுக்கு நாள்...

"இஞ்சாரப்பா... இஞ்சாரப்பா... நானொருக்கா தவாற்கட்டைச் சந்திக்குப் போய், யாவாரியிட்டை மீன் காசும், ஆட்டிறைச்சியும் வாங்கிவாறன்".

உச்சி வெய்யில்...

உடம்பெல்லாம் நல்லெண்ணை மினுமினுக்க விரலால் வேர்வையை வழித்தெறிஞ்சுபோட்டு, சுடுமண்ணிலை... சைக்கிளைச் சுத்தி நிக்கிற பேரப்பிள்ளையளுக்கு தீன்பண்டங்ளையும் பங்கிட்டபின்,

"இந்தாப்பா... நீளக்காம்பு வெத்திலையும் நாறப்பாக்குப் போயிலையும்... உனக்கு". "பாழ்படுவார் எண்டைக்குக் கால் வைச்சாங்கள்..., வைச்சநாளிலிருந்து என்ரை ராசா இப்பிடி ஒடுங்கிப்போனாரே...." முருகேசரைப்பற்றிய நினைவுகள் நெஞ்சு முட்ட புரண்டு, புரண்டு படுத்தாள் அன்னம்.

சுருட்டுப் புகையை ஊதித்தள்ளியபடி வானத்தை அண்ணாந்து பார்த்தார் முருகேசர். வெள்ளாப்பு வைக்க நேரங்கிடக்கு... இருள் வைச்சுப்பறியுது... நேர் கச்சான்... மெல்லிய தூறல்தான். இந்தக் கச்சானுக்குத்த ான் இப்பிடி இரையுது. கடல் பெருக்காயிருக்கு... மின்னி... முழங்கிச் சோழகம் வந்தாத்தான் வெளிக்கும்... என மனதுக்குள் அனுமானித்தவர், 'ஓ... தமிழுக்குச் சித்திரை இருவத்தெட்டெல்லே... தலைக்காத்து... அது தன்ரை காலத்துக்கு தன்ரை குணத்தைக் காட்டும் தானே'.

தலைக்காத்து....

"என்ன முருகேசண்ணை... இந்தக் கச்சானுக்கும் கடலுக்கும் வலை கயிறாத்தான் இருக்கும்". குரல் வந்த திக்கில் திரும்பிய முருகேசர், "சின்னத்தம்பி... நீ இன்னும் வலை இழுக்கப் போகேல்லையே...? வெள்ளாப்பு வைக்கப் போகுது..." அவசரப்படுத்தினார் முருகேசர்.

"சும்மா போங்கோ முருகேசண்ணை..., நேத்து வாடைக்கச்சானுக்கும் மழைக்கும் ஒருத்தரும் கடல்லை இறங்கேல்லை..., சும்மா இருந்த என்னை 'கரையாத்துச் சரிவிலை வலையைப்படு ஓராமீன் மாட்டும்'. எண்டியள். நானும் அனுபவசாலி எண்டு நம்பிப்படுத்தன்.

இப்ப... என்ரை முதலே போயிடும் போல் இருக்கே". பொரிந்து தள்ளினான் சின்னத்தம்பி. வாயில் இருந்த சுருட்டை எடுத்துக்கொண்டு குறுக்கே இரண்டு விரலை வைத்துப் பொழிச்சென்று வெத்திலையைத் துப்பிய முருகேசர், துப்பிய விரலால் மீசையைத் துடைத்துவிட்டு "தம்பி... காத்துக் கடல் மாறேக்கை மீனுகளும் இடம் மாறுவினம். இந்தப் பேய்க் கச்சானுக்கும், கடலெறிக்கும் மீன்கள் ஒதுக்குத் தேடி புட்டித் தண்ணிக்கு வருவினம். அந்த நேரத்திலை நாங்க தொழிலை வைச்சுக்கொண்டு வீட்டிலை இருக்கப்படாது மோனை. ஒரு வருசத்து உழைப்பை ஒரு நாளிலை உழைச்சிடலாம். கடல் வத்தும் அது தாற செல்வம் வத்தாது. என்ரை கணிப்பின் படி மோனை இந்த ஓரா மீன் பண்ணைத் தூண்டிற்காரனுக்கும், பட்டிக்காரனுக்கும் படும். வேளையோடை வந்தா நல்ல காசுக்கு வித்திடலாம். மீன் ஏத்த உதவிக்கு ஆளைக் கூட்டிப்... போ.." சின்னத்தம்பியின் அவுட் மோட்டார் இரைச்சல் காத்துக்கு மேலால் கேட்டது முருகேசருக்கு.

சின்னப்பொடியள்.. மனதுக்குள் சிரித்தபடி.., வயிறு குளப்படிசெய்ய... சாரத்தை மடித்துக் கட்டியபடி..., கடலில் ஆடும் சிறு தோணியில் ஏறியமர்ந்தார் முருகேசர்.

"அட தமிழுப்பண்டி கொட்டியாக்கு சிக்னல் கொடுக்கிறது..." திடுக்கிட்டார் முருகேசர். கன்னம் கச்சானில் விறைத்திருக்க முதுகில் சூடாக அடி விழுந்தது. "எங்கேடா கொடி" அதட்டினான் ஆமி. கடலையும் கரையையும் பிரித்திருந்த முட்கம்பிச் சுருளிலிருந்து கையை எடுத்த முருகேசர், கடலையும் கை விரலில் சின்னத்தம்பி செய்து போட்ட மோதிரத்தையும் பார்த்தபடி வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார். ...ம்... தலைக்காத்து. முருகேசர் பெருமூச்சு கச்சான் காற்றுடன் கலந்து கிழக்கே சென்றது.

"கொய்யா எப்படித்தான் சொன்னாலும் கேளார். வீட்டிலை கக்கூஸ் இருக்கு. தொட்டிலை தண்ணியிருக்கு.. சரி கடற்கரைக்குப் போகேக்கை இண்டைக்கு என்ன நிறக்கொடி பிடிச்சுக்கொண்டு போக வேண்டுமெண்டறிஞ்சு அந்த நிறக்கொடி கொண்டுபோகத் தெரியாது. இண்டைக்கும் விழுவாரிட்டை அடி வாங்கி வந்திட்டார்".

அன்னம் திட்டித்திட்டி முதுகு தேய்ப்பது முருகேசர் காதில் எதிரொலித்தது.

**- ந. சந்திரகுமார் (சுவிஸ்)**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தென் தமிழீழம்

# தீயாகிச் சுடுகின்ற தீகவாவி

"பழமையான இடங்களான தென் தமிழீழத்துத் தமிழ் ஊர்கள் பலவற்றில் சிங்களக் குடியமர்த்தலைச் செய்வதோடு, பாணமை (உகந்தை), திருக்கோவில், தீகவாவி, கதிரவெளி, சேருவில் திருமங்கலாய், திருக்கோணமலைநகர், கந்தளாய், பெரியகுளம், திரியாய் ஆகிய இடங்களைப் பௌத்த புனித நகர் என்று உலகிற்கு இயம்ப பதவிக்கு வரும் சிறீலங்கா அரசுகள் சென்ற ஐம்பது ஆண்டுகளாக மிகு பிரயத்தனங்களையும் மனிதக் கொலைகளையும் மேற்கொள்கின்றன."

தீபவாவி, தீர்க்கவாபி, தீகவாபி (DIGAVAPI) என்று குறிக்கப்படும் இவ்விடம் 2500 ஆண்டுகால வரலாற்றை அடக்கியுள்ளது. மட்டக்களப்பின் தென்பால் நாற்பது மைல் தூரத்திலுள்ள அக்கரைப்பற்றுக்கு மேற்கில் ஏறக்குறைய பதினைந்து மைல் கல் தாண்டி கல்லோயாப்பள்ளத்தாக்கில் அமைந்துள்ள மிகப் பழமையான நகராக விளங்கிய "மகாநந்தக்குளமே" தீகவாவி ஆகும்.

கிறிஸ்த்துவுக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் மகாவலி கங்கைக் கரையினை அடுத்த மாகம் என்ற நகரிலிருந்து உறுகுணையை ஆண்ட கவநதீசனின் மகன் சதாதீசன் தீகவாபியை மைய நகராகக் கொண்டு உறுகுணையின் கிழக்கு வடக்கு பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய செய்தியை மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. புத்தபெருமான் இலங்கைக்கு வந்தபோது தீகவாபிக்கும் வந்தார் என்று மகாவம்சம் கூறுவதிலிருந்து இவ்விடத்தின் தன்மையை உணரலாம்.

அம்பாறைப் பகுதியில் உள்ள கொண்டைவெட்டுவான் குளக்கரையில் (1960—1964) கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றினூடாக, தீகவாவிப் பிரதேசத்தின் வயல்வளமும், அதன் நீர்ப்பாசனத் திட்டமும் உணரப்பட்டது. கைமுனுவின் காலத்தில் கச்சகா தீந்தலில் இருந்து தீகவாபி வரையுள்ள பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களே மிகுதியாக வாழ்ந்துவந்தனர் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

கி.பி. 6–ம் நூற்றாண்டிலே 2–ம் மகிந்தனால் அநுராதபுர ஆட்சியினுள், தீகவாவி வந்த இரண்டு நூற்றாண்டு காலத்தில் அநுராதபுரத்தின் சிறப்புச் சற்றுக் குறைந்து; தீகவாபியின் முக்கியம் ஓங்கியது.

கி.பி. 10 – 11ம் நூற்றாண்டுகளில், சோழர் படையெடுப்பு காலத்தில் தமிழர்கள் நீண்ட காலம் வாழ்ந்த வாழிடமாக தீகவாவி அடிக்கடி சிங்கள மன்னர்களின் தாக்குதலுக்குள்ளானது. 11–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாம் விஜயபாகு, 12–ம் நூற்றாண்டில் மகாபராக்கிரமபாகு ஆகியோரின் தாக்குதல்கள் இதற்கு உதாரணங்களாகும்.

கி.பி. 1605–1635க்கும் இடைப்பட்ட காலத்தில் கண்டியில் இருந்து நாலாயிரத்துக்கும் மேலான இஸ்லாமியர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். இவர்களின் வழிவந்தோர் தீகவாபிப் பிரதேசத்திலும் வயற்காணிகளை ஏற்படுத்தி வாழ்ந்து வந்தனர்.

1622–ல் போர்த்துக்கேயர் மட்டக்களப்பைக் கைப்பற்றினார்கள். பின் 1639–ல் போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் கையகப்படுத்தினர். 1815–ல் பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றிய பின்னர் 02.03.1815–ல் செய்த பிரகடனம் ஒன்றினூடாக பிரிட்டிசார் மட்டக்களப்பு மாவட்டத்தைத் தமது ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்தனர். 01.10.1833–ம் ஆண்டு விடுத்த பிரகடனம் மூலம் இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்த போது மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந்த வேளையில்; திருகோணமலை அதன் தலைநகரமாக இருந்தது.

அப்போதைய கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணத்திலுள்ள தம்பன்கடுவ பகுதியையும், பதுளை மாவட்டத்தின் விந்தனைப் பகுதியையும் உள்ளடக்கி மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டம் என்றே விளங்கியது. காலக்கிரமத்தில் 1837–ல் விந்தனை மத்திய மாகாணத்துடனும் தம்பன்கடுவ வடமத்திய மாகாணத்துடனும் இணைக்கப்பட்டன.

1870–ல் மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தின் தலைநகராக்கப்பட்ட போது திரு. ஆர். டபிள்யூ, மொறிசு அவர்கள் மட்டக்களப்பின் முதலாவது அரசாங்க அதிபராக பதவி ஏற்றார். 10.04.1961–ல் அம்பாறை தனி மாவட்டமாக மாற்றமுற்று 1963–ல் அம்பாறை மாவட்டத்திற்கான அரசாங்க அதிபர் பணிமனை உகணையில் நிறுவப்பட்ட போது; தீகவாவியைப் பௌத்த புனித நகரமாக்கும் திட்டமும் வேகமாக வரையப்படலாயிற்று.

- திருமலை யோகேந்திரம்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வன்னிப் பிரதேசத்தின் கலைச் சொத்து

## முல்லை மோடியில் அமைந்த கோவலன் கூத்து

ஈழத்தின் மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணப் பிரதேசங்களைப் போலவே முல்லைத்தீவுப் பிரதேசத்திலும் பல நாட்டுக்கூத்துக்கள் ஆடப்பட்டு வந்துள்ளன. குசலவன், கர்ணன்போர், நொண்டிநாடகம், ஆட்டுவணிகன், காத்தவராயன், கோவலன் கூத்து என்பன இவற்றுட் சிலவாகும். இவற்றுள் மக்கள் மத்தியில் இன்றுவரை செல்வாக்குடன் நிலவும் கூத்துக்கள் காத்தான் கூத்து, கோவலன் கூத்து என்ற இரண்டுமே. இவை இரண்டும் கிராமியத் தெய்வ வழிபாட்டுடன் இணைந்திருப்பது தொடர்ந்து நிலைபெறுவதற்கான காரணமாகும்.

கண்ணகி அம்மன் வழிபாடும், முத்துமாரியம்மன் வழிபாடும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்தி பெற்றுத் திகழ்கின்றன. நாவலரின் எதிர்ப்பால் யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்ணகை அம்மன் வழிபாடு தளர்ச்சியடைந்ததும், முள்ளியவளை வற்றாப்பளைக் கண்ணகை அம்மன்பால் வடமாகாண மக்கள் அனைவருமே ஈர்க்கப்பட்டனர் எனக் கொள்ளலாம். கிழக்கு மாகாணம் முழுவதும் ஊர்கள் தோறும் கண்ணகை அம்மன் கோயில்கள் உண்டு. எனினும் கோவலன் கூத்து முல்லைத்தீவுப் பிரதேசத்தைப் போல அங்கு முக்கியத்துவம் பெறவில்லை.

சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் கோவலன் – கண்ணகி வரலாற்றைக் கூறுவது யாவரும் அறிந்ததே. ஆனால், யாழ்ப்பாணத்தில் வழங்கும் கோவலனார் கதை, மட்டக்களப்பில் உள்ள கண்ணகி வழக்குரை, முல்லைத்தீவில் உள்ள ‘சிலம்பு கூறல்’ என்னும் பொதுமக்களின் காப்பியங்களில் கூறப்படும் கோவலன் – கண்ணகி கதை, சிலப்பதிகாரக் கதையை விட விரிவானதாகவும் வேறுபாடுடையதாகவும் திகழ்கின்றது. சிலப்பதிகாரம் மானுடப் பெண் ஒருத்தி தன் கற்பின் திண்மையால் கடவுள் நிலையை அடைவதைச் சித்தரிக்கின்றது. சிலம்பு கூறல், கோவலனார் கதை, கண்ணகி வழக்குரை என்பன உமாதேவியாரே பாண்டியன் மகளாக மாங்கனியில் அவதரித்ததாகக் கூறுகின்றது. கண்ணகை அம்மன் வழிபாடு மக்கள் மத்தியில் நிலைபெற்றுவிட்ட பின்னர். சைவ மரபில் இவ் வழிபாட்டுக்கு அமைதி காணவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கலாம். மானிடப் பெண்ணை தெய்வமாக வழிபடுவதற்குச் சைவ மரபு இடம் தராது. எனவே, கண்ணகை உமாதேவியாரின் அம்சமாகவே ஈழத்துக் காவியங்களில் சித்தரிக்கப்படுகிறார். மூன்று ஈழத்துக் காவியங்களும் ஒரு மூலக் காவியத்திலேயிருந்து தோற்றம் பெற்றதற்கு அகச் சான்றுகள் உண்டு. இவற்றில் கூறப்படும் கண்ணகி கதையே கோவலன் கூத்தில் இடம்பெறுவதைக் காணலாம்.

### கண்ணகியின் தெய்வத்தன்மை

கூத்து முழுவதிலுமே ஆங்காங்கு கண்ணகியின் தெய்வத்தன்மை வலியுறுத்தப்படுகின்றது. சிலம்பு கூறலிலும், கூத்திலும் கண்ணகி என்ற பெயர் கண்ணகை, கண்ணகையார் என இடம் பெறுகிறது. கூத்தின் ஆரம்பத்தில் விநாயகர் காப்பின் பின்னர் கண்ணகை அம்மன் காப்பு இடம்பெறுகிறது. இக் காப்பில் கண்ணகை அம்மன் பிறப்பும், அற்புதங்களும் கோயில் கொண்ட இடங்களும் பற்றிய குறிப்புக்கள் உண்டு.

*“சீர் கொண்ட மதுரைமா நகரிலே*
*மாறனுடை காங்கையால்*
*செம்பெற் குடத்தினில்*
*மாங்கனியதாகியே திருவுருவ*
*மாகியே*
*செழியனுடன் வாதாடிச்*
*சிலம்பினால் தீப்பரப்பி,”*

என்னும் பாடற் பகுதியில் மாங்கனியிலிருந்து கண்ணகை அம்மன் உதித்த செய்தியும், பாண்டியனுடன் வழக்குரைத்து மதுரையை எரித்த செய்தியும் இடம்பெறுகின்றன. கோவலன் கண்ணகையைத் திருமணம் செய்ததும் அவள் அருகில் கோவலன் சென்றபோது, கண்ணகியின் உடலிலிருந்து கனல் வீசியதையும், அப்பொழுதே கண்ணகியின் தெய்வத்தன்மையை தான் உணர்ந்து கொண்டதாகவும் கோவலன் குறிப்பிடுகிறான்.

*கண்ணகையே மணமுடித்த*
*மணவறையில்*
*அன்றுமொரு கனல் உண்டாக்கி*
*பெண்ணங்கு நீயுமொரு*
*தெய்வமெனக்*
*கண்டேன் அந்தப் பெருமையாலே*

எனக் கூத்துப் பாடல் கூறுவதைக் காணலாம்.

மாதவி தனக்குச் சேரவேண்டிய பொன்னைக் கோவலன் கொடுக்கத் தவறியதால் காவிரி ஆற்றிலும், கிணற்றிலும் தள்ளியபோது, அவன் கண்ணகையை நினைக்க அவளருளால் கோவலன் உயிர் தப்புகிறான். இந்தக் கூத்தில் தீவினை சூழ்பவனாகவும், கொடியவனாகவும் சித்தரிக்கப்படும் பொற்கொல்லன் களரியில் தோன்றும்போது கண்ணகை அம்மனுக்கு தோத்திரம் செய்கிறான்.

*“அன்னமே தாயே போற்றி*
*ஆதி கண்ணகையே போற்றி”*

என்பது பொற்கொல்லனின் தோத்திரப் பாடலடியாகும்.

கருடன் எடுத்துச்சென்ற சிலம்பையும், கோவலனிடம் கைப்பற்றிய சிலம்பையும் கண்ணகை அம்மன் தெய்வ சக்தியால் வரவழைக்கும் நிகழ்ச்சியும் கூத்தில் இடம்பெறுகிறது.

### கோவலன்

கோவலன் என்னும் பாத்திரம் சிலப்பதிகாரத்தில் உள்ளதை விட வித்தியாசமான முறையில் படைக்கப்பட்டுள்ளது. மாதவியின் நடனத்தைக் கண்டு களிக்கும்போது அவன் மனதிலே சிறு சலனம் ஏற்பட்டபோதும் மாதவியுடன் கூடி வாழவேண்டும் என்ற எண்ணம் அவனிடம் இருக்கவில்லை. மாதவி நடனமாடும் போது கம்பத்தின்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மீது நின்று ஒரு மாலையை எறியப் போவதாகக் கூறி மாலையை எறிகின்றாள். அது யார் கழுத்தில் விழுந்தாலும் அவரையே கணவனாக ஏற்கப் போவதாகவும் கூறி மாலையை எறிகின்றாள். அது கோவலன் கழுத்திலே விழுந்ததும் அதை வெறுப்புடன் கழற்றி வீசுகின்றான். மாதவி மூன்று முறை எறிந்த போதும் அது கோவலன் கழுத்திலேயே விழுகின்றது. அப்போது கோவலன் சினந்து,

> "மீண்டும் மீண்டும் நீ எறிந்தாய்
> மாலை கொண்டு போ - எனக்கு
> விண்ணவர்சேர் கண்ணகைதான்
> பெண்ணே கண்டுகொள்"

என்று கூறுகின்றான். பின்னர் மாதவியின் தாயான சித்திரலேகையின் ஆலோசனையின்படி வெற்றிலையில் வசிய மருந்திட்டுக் கோவலனுக்குக் கொடுக்கப்பட்டது. அதனால் மயங்கியே கோவலன் மாதவியின் பின் செல்கிறான்.

கோவலன் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டு கொலைக்களம் அழைத்துச் செல்லப்படுகின்றான். அங்கு அவன் வரலாற்றைக் கேட்ட மளுவர் உண்மையை உணர்ந்து அவனைத் தப்பிச் செல்லுமாறு கூறுகின்றனர். அப்பொழுது கோவலன் பாண்டியன் ஆணையை மீறித் தப்பிச்செல்லத் தான் விரும்பவில்லை என்றும் மளுவால் பிளக்குமாறும் கூறுகின்றான்.

> "கள்வனென்றே பேருமுற்றேன்,
> வறுமையுற்றேன்
> கைப்பொருளும் இழந்து யிரும்
> கலங்கப் பெற்றேன்
> உள்ளபடி ஒளித்தோடு தலிலும்
> பார்க்க
> உயிர்விடுவேன் உடல்
> பிளந்திங்கு வைப்பீரே"

கூத்தின்படி கோவலன் நற்பண்புகள் நிறைந்தவனாகவே காணப்படுகிறான்.

## மாதவி

கோவலன் கூத்து ஆசிரியர் மாதவியின் குணவியல்புகளைத் தலைகீழாக மாற்றியுள்ளார். சிலப்பதிகார மாதவி உன்னதமான பண்புடையாள். கோவலனை எந்த வகையிலும் துன்புறுத்திப் பணம் பறித்ததற்கு ஆதாரம் இல்லை. கணிகையர் குலத்தில் பிறந்தபோதும் கோவலன் ஒருவனையே தனது நாயகனாகக் கொண்டாள். நாடகத்தில் வரும் மாதவியோ ஈவிரக்கமற்ற கொடியவளாக சித்தரிக்கப்படுகின்றாள். கோவலனுக்குப் பலவித இன்னல்களைச் செய்கின்றாள். அவனைக் கட்டிச் சவுக்கால் அடிக்கின்றாள். கடும் வெய்யிலில் நிறுத்தி நெற்றியில் கல் வைக்கின்றாள். காவிரியாற்றில் தள்ளி விடுகின்றாள். கிணற்றுள் வீழ்த்திக் கோவலன் மீது கல்லைத் தூக்கிப் போடுகிறாள். கோவலனின் செல்வம் அனைத்தையும் கவர்ந்ததுடன் ஆடை ஆபரணங்கள் அனைத்தையும் பிடுங்கி எடுக்கிறாள். கண்ணகை பாத்திரத்தை உயர்த்திக்காட்டுவதற்கும், கூத்தினுற்குச் சுவையூட்டுவதற்கும், இரசிகர்களைக் கவர்வதற்கும் கூத்தின் ஆசிரியர் இத்தகைய மாற்றங்களைச் செய்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

## வட்டக்களரி

ஏனைய நாட்டுக் கூத்துக்களைப் போலவே கோவலன் கூத்தும் வட்டக் களரியில் ஆடப்படும். முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தின் முன்றலிலும் வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு முன்பும் இக் கூத்து ஆண்டுதோறும் ஆடப்படுகின்றது. நடிகர்கள் விரதமிருந்து பயபக்தியுடன் இக் கூத்தினை நிகழ்த்துவர். கண்ணகை அம்மன் கண்ணுக்கு ஒளிதருபவள், வெப்பு நோய்களிலிருந்து மக்களைக் காப்பவள் என்பதால் இக் கூத்தினை ஒரு சமுதாயக் கடமையாக முள்ளியவளை மக்கள் ஆண்டுதோறும் அரங்கேற்றி வருகின்றனர். உயர்ந்த மேடையமைப்பு எதுவும் இல்லை; நிலத்தில் சுற்றிவர பன்னிரண்டு மரத்தூண்களை நட்டு மேலே, வெள்ளை கட்டியிருப்பர். ஒருபுறத்தில் மட்டும் வாசல் விட்டுச் சுற்றிவர கயிறுகள் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு தூணுக்கும் அருகில் ஒவ்வொரு வாழைக்குற்றி நடப்பட்டிருக்கும். இதன்மேல் மண்சட்டி வைத்து அதனுள் தேங்காய் எண்ணெய் ஊற்றித் துணிப் பந்துகளை வைத்து எரிப்பர். இந்தப் பந்த வெளிச்சத்திலேயே கூத்து நடைபெறும். நாடக பாத்திரத்திற்கு முன்பு தீவெட்டி பிடிக்கும் வழக்கம் இல்லை.

பாத்திரங்கள் முதன் முறையாகக் களரிக்குள் புகுமுன் வாசலில் பிடிக்கப்படும் திரையின் முன்பு நின்று ஆடிய பின்னரே உள் நுழைவர். பாத்திரங்களுக்கு ஏற்ற விதத்தில் வெவ்வேறு வகையான தாளங்களை மத்தளத்தில் இசைப்பர். ஆட்டத்திற்குரிய தாளங்களைச் சொற்கோப்பினால் தொடுத்து அமைத்தலைத் தாளக்கட்டு என்பர். தாளக்கட்டின் முதற்பகுதியை நடிகரின் வரவுத்தொடக்கத்தில் அண்ணாவியார் படிப்பர். தாசிகள் ஆட்டத் தரு பின்வருமாறு அமையும்.

> தாதா திந்தக்க தகதா திந்தக்க
> தக்கச் சோம் தந்தரிகிட (தாதா)
> தந்திந்தத்தா திந்தத் தகிர்ததோம்
> தகதந்தத்தா திந்தத் தகிர்ததோம்

நடிகர்கள் களரியில் சுற்றிவர ஆடுவர். ஒரு பாடலின் இரண்டு அடிகளைப் பாடி ஆட இரண்டாவது அடியை மட்டும் பிற்பாட்டுக்காரர் பாடுவர். கூத்துப் பெரும்பாலும் பாட்டினாலேயே அமைவது. சிறுபான்மை வசனமும் இடம்பெறும். வசனங்களும் நீட்டி இசைத்தே கூறப்படும். பாட்டைப் பலமுறை படித்தாலும் வசனங்கள் மூலமும் கதையை மக்கள் மனதில் பதியச் செய்வர். ஒலிபெருக்கியின் உதவியின்றியே பாட்டு நெடுந்தூரம் கேட்கக் கூடியதாகவே பாடப்படும்.

பார்வையாளர் களரியைச் சுற்றிவர இருந்தே நாடகத்தைப் பார்ப்பர். இதனால் பார்வையாளர் அனைவருக்கும் ஆட்டம் நடிப்பு என்பவை தெரிய வேண்டும் என்பதற்காகவே பாத்திரங்கள் சுற்றிவரஆடும் வழக்கம் ஏற்பட்டது என எண்ணத் தோன்றுகின்றது. மத்தள இசையே நாடகத்தை நடத்திச் செல்லும். அண்ணாவியார் அல்லது இன்னொருவர் மத்தளத்தினை இசைப்பர். பாத்திரங்கள் களரியில் வருவதற்கும் போவதற்கும் மத்தள இசையே வழிகாட்டியாக அமைகின்றது. எனவே மத்தளம் வெறும் பக்கவாத்தியமாக மட்டுமின்றி நாடகத்தை நடத்திச் செல்லும் இசைக்கருவியாக அமைகின்றது. களரியின் ஒரு புறத்தில் அண்ணாவியார், பக்கப்பாட்டுக்காரர், ஏடுபார்ப்போர் நிற்பர். இவர்கள் சபையோர் என அழைக்கப்படுவர். நாடக நிகழ்ச்சிக்குத் தொடர்பை ஏற்படுத்த இடையிடையே சபை விருத்தங்கள் பாடப்படும். கோவலன் கொலையுண்ட பின் கண்ணகி தேடிவந்த நிகழ்ச்சி பின் வரும் சபை விருத்தங்களால் கூறப்படுகின்றது.

> வண்டுறையும் சீரகத்தார்
> மாறனுமே கோவலரை
> மாறுபாடாய்
> தண்டனை செய் தவருடலம்
> மளுவாற் பிளந்திட்ட சாட்சியாலே
> துண்டமுறும் தோள்கழுத்துக்
> கைகால் மார்பிலிடம் தோற்றம்
> தன்னை
> கண்டனள் கண்ணகை மனதில்
> கெம்பிமிகக் கொதித்துக்
> கதறுவாளே



www.tamileelamarchive.com

பல்வேறு இசைவிகற்பங்களைக் கொண்ட பாடல்களுடன் விருத்தங்களையும் கொச்சகங்களையும் பாத்திரங்கள் பயன்படுத்துவர். கோவலர் சிந்து பின்வருமாறு அமையும்.

தரு:

தான தனன தன தான தான
தனன
தானான தன்னன்ன தானான
தன்னன்ன

சிந்து:

தோற்றுவிட்டேனே நிதியெல்லாம்
தோற்றுவிட்டேனே
தோற்றேனே முன்னோர்கள்
தேடியே வைத்திட்ட
சொர்ணங்கள் இன்னதென்
றெண்ணுங்கடங்காமல்
வார்த்தையால் மாதவி சோத்துப்
பொருளெல்லாம்
மாலாசை பூட்டிக்கண் ணாலே
மருட்டியே
வாங்கிக் கொண்டாளே
இனியென்ன தாங்கிக்
கொண்டேனே.

ஈழத்துத் தமிழருக்குரிய புராதன இசைவடிவங்கள் நாட்டுக் கூத்துக்களிலும் நாட்டார் இசையிலும் புதைந்து கிடக்கின்றன. இவற்றை இனங்கண்டு ஸ்திரப்படுத்தி தமிழ் ஈழத்திற்கெனத் தனித்தன்மை வாய்ந்த இசை மரபினைத் தோற்றுவிக்க வேண்டியது இசை நிபுணர்களின் முக்கியமான பணியாகும். கண்ணகை கொச்சகம் பின்வருமாறு அமையும்.

"சொல்லார் இடைச்சியம்மை
சூளும் வினை கேளுமிப்போ
நல்லார் சிலம்பு விற்க நாயகனார்
போயடைந்தே
எல்லோரும் காணமாறன்
இருபிளவாய் பிளந்தார் நான்
பொல்லாக் கனவுகண்டேன்
போறனடி மாமியரே"

ஆட்டங்களில் தீவினையாளனான பொற்கொல்லர் ஆட்டமே நுணுக்கமானதும் விறுவிறுப்புமானது.

தாதா கிட ஜொம் - தகதரிகிட
தாதா கிட ஜொம் - தகதரிகிட
தாதா கிட ஜொம் - தகதரிகிட

தக்கச்சோம் திம்ம தாகிர்த
தக்கச்சோம் திம்ம தாகிர்த

தாம் தாம் தக்க தக்கச்சோம்
தத்திரிகிட
தக்கச்சோம் தத்திரிகிட
தக்கச்சோம் தக்கச்சோம்
தக்கச்சோம்
தரிகிட தந்தத் தாதிங்கிண

ஒரு கையிலே தற்பையும் குழலும் ஒரு கையிலே செப்புந்தராசும் தலையாள் பாண்டியராசன் வாசல் பொற்கொல்லனும் சபை தோன்றினான்.

மாறனுக்கிவன் மறலியானவன்
வணிகருக் கொரு
பிணியதானவன்
கூறும் மதுரை சுடவே கொள்ளி
போலவே தோன்றினான்.
தாகுதாகுதா தாகிட சுந்தரி
(இரண்டு முறை)
தாகிடசுந்தரி தரிகிடசுந்தரி
(இரண்டு முறை)
தக்கச் சோம் தீம்த தகிர்த

பொற்கொல்லன் ஆட்டம் சபையைக் கவரும் விறுவிறுப்பான ஆட்டமாகும். பொற்கொல்லன் பலமுறை நிலத்திலிருந்து இரண்டடி மேலே தொங்கி ஆடுவதுண்டு.

முக்கிய பாத்திரங்கள் கரப்புடுப்பினையே அணிவர். இதனை வில்லுடுப்பு என்றும் அழைப்பர். முழு உடுப்பு ஐந்து தட்டினைக் கொண்டதாகவும் இருக்கும். பிரம்பு வளையங்களை மூடி துணியாலும் அலங்காரச் சரிகைகளாலும் இவ்வுடுப்பை ஆக்குவர். அடியில் பெரிய வளையமும் மேலே போகப் போக சிறிய வளையங்களும் பொருத்திக் கரப்புடுப்பு அமைக்கப்படும். சோழன், மந்திரி, முற்கோவலன், பாண்டியன் முதலிய பாத்திரங்கள், கரப்புடுப்புத் தரிப்பர். முருக்க மரத்தைக் கோதி கிரீடங்கள் அமைப்பர். இக் கிரீடம் அழகான வேலைப்பாடுடையதாக இருக்கும். கிரீடத்தின் உச்சியில் குடை பொருத்தப்படுவதில்லை. புஜங்களின் சிறகினையொத்த தடித்த கைப்பட்டி அணியப்படும். கையில் உருண்டையான காப்புக்களை அணிவர். அலங்காரமான நெஞ்சுப்பட்டியும் அணிவர். அரசர் வாளையும், மந்திரி கட்டாரியையும் வைத்திருப்பர். ஆட்டங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறானவை. நடிகருக்குரிய ஆட்டச் சிறப்பினை காட்டுவன தாளக் கட்டுகளுக்கேற்ப அவர்கள் ஆடும் ஆட்டங்களே.

பிற்கோவலர், பொற்கொல்லன், சட்டம்பியார், பிள்ளைகள் போன்றோர் கரப்புடுப்பு அணிவதில்லை. கூத்தின் முற்பக்கத்தில் கோவலன் அரசருக்குரிய கரப்புடுப்பினையே அணிவர். பிற்பகுதியில் அவரின் ஏழ்மையைக் காட்டச் சாதாரண உடுப்பே அணிவர்.

## நகைச்சுவை

நவரசங்களும் பொருந்த அமைக்கப்பட்டிருக்கும் இக்கூத்தில் அவலச் சுவையே விஞ்சி நிற்கிறது. சபையோருக்குச் சிரிப்பூட்டும் காட்சிகள் சில கூத்தில் உண்டு. சிறு பாத்திரங்கள் மூலமே நகைச்சுவை வெளிப்படுத்தப் படுகின்றது.

## பாடல்களின் யாப்பமைதி

ஆட்டமும் பாட்டமும் ஒருங்கிணைந்து மெய்ப்பாடுகளை மிகுவிப்பதற்குப் பொருத்தமான பல்வேறு யாப்பு வகைகளை கூத்தாசிரியர் கையாண்டுள்ளார். இவை ஆசிரியரின் யாப்பறிவினையும் இசையுணர்வினையும் நன்கு வெளிப்படுத்துகின்றன. ஏடுபெயர்த்து எழுதுவதால் ஏற்பட்ட பிழைகளால் பாடல்கள் சிலவற்றில் ஓசை முறிவு இடம்பெற்றிருப்பது தவிர்க்க முடியாததே. கல்வி அறிவு குறைந்த அடிநிலை மக்களே இக்கூத்தினைப் பேணி வந்தமையால் இத்தகைய தவறுகள் இடம் பெற்றுள்ளன.

தோடயம் என்ற வடமொழிப் பாட்டு வகையைச் சேர்ந்த யாப்பின் மூலம் கூத்துக் கதை சுருக்கமாக இடம் பெறுகின்றது. கொச்சகம் என்னும் பாவகை இக்கூத்தில் அடிக்கடி வருகின்றது.

காய்முன் நிரைவரும் அளவடியாலோ மாச்சீர்களும் விளாச்சீர்களும் வரும் அறுசீர் கழிநெடியாலோ அமைந்து கொச்சகம் வரும் எனக் கூறப்படுகிறது. கோவலன் கூத்தில் வரும் கொச்சகம் இந்த இலக்கண அமைதியை மீறுவதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். ஏறத்தாழ விருத்தத்தின் சாயலை கொச்சகத்தில் காணலாம். கண்ணகை கொச்சகம், கோவலன் கொச்சகம் எனப் பல விடயங்களில் இப்பாவினம் இடம் பெறுவதைக் காணலாம். விருத்தம் என்னும் யாப்பு வகையே கூத்தில் மிகுதியாகக் கையாளப்பட்டது. நாடக பாத்திரங்கள் விருத்தம் மூலம் கருத்தை வெளிப்படுத்துவது அடிக்கடி நிகழும் கதையோட்டத்தின் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் விருத்தம் என்னும் பாவினம் பயன்படுத்தப்படுகின்றது.

கூத்துப்பாட்டுக்களைப் பாடும் முறையை அமைத்துக்காட்டும் ஒரு வகைச் சொற்கோப்பே தரு எனப்படும். தரு என்ற யாப்பு மாராட்டிய இசைப் பாட்டு வகையை ஒட்டியது என ஆய்வாளர் கருதுகின்றனர்.

உதாரணம்:



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தரு:

தானதந்தை தானானே தந்தை
தானினத் தந்தை
தானதத்தை தானானே தந்தை

என்னும் தருவில்

கள்ளர்வந்து கொள்ளை
கொண்டாரோ
தட்டாகுலத்துக் குள்ளப்புத்தி
தள்ளப் போகாதோ”

என்னும் பாட்டு அமைந்திருப்பதைக் காணலாம்.

தேவாரம் என்னும் யாப்பு வகையொன்றும் கூத்தில் இடம்பெறுகின்றது. விசயமனோகரன் நாடகத்தில் இறைவணக்கப் பாடலாக இடம் பெறும் இசைப்பாட்டு தேவாரம் என அழைக்கப்படுகின்றது. மூவிராசா நாடகத்தில் திருவாசகம் என்னும் யாப்பு பயன்படுத்தப்படுகின்றது. கோவலன் தனது எண்ணம் நிறைவேற வேண்டும் என அம்பிகை பங்காளனைத் துதிக்கும் பாடல் ஒன்று தேவாரம் என அழைக்கப்படுகின்றது.

கலிப்பாக்களும் கூத்தில் இடம் பெறுகின்றன. கலிப்பாவின் இனமான கலித்துறை நெடிலடி நான்காய் அமைவதாகும். சித்திரலேகை கலித்துறை பின்வருமாறு அமைகிறது.

யப் பிடியெடி மாமகளே யோர்
கலவைப்பொடி
பையத் தொடர்ந்தவன் நாடியி.
லேகை படத்தடவி
செய்யும் இழமந்த நேரத்தி
லேவெற்றி லையில்தடவி
செய்யும் வசம்விட்டுச் சீக்கிரம்
போகமுந்தன் திருமனைக்கே

கதை நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்து அகவற்பா இடம்பெறுவதைக் காணலாம். மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலனும் கண்ணகையும் இடைச்சியர்சேரியை அடைகின்றனர். இடைச்சியர் வினாவியபோது கண்ணகை தன் வரலாற்றை அகவல் மூலம் எடுத்துச் சொல்லுகிறாள். கண்ணகை அகவல் எனக் குறிப்பிடப்படும் இப்பகுதி கலிவெண்பாவாக அமைகிறது. ஏடு பெயர்த்து எழுதியோன் தவறாகலாம். இது கோவலனைக் கொல்ல யானையை ஏவியபோது கோவலன் தன் வரலாற்றினை அகவல் பாவிலேயே கூறுகின்றான்.

இசைக்கும் ஆட்டத்திற்கும் உகந்த யாப்பினமான சிந்து இடம்பெறுவதற்கு பின்வரும் உதாரணத்தைக் கூறலாம்.

விற்கவந்தேன் வாங்க
வாருங்கோ சிலம்பு தன்னை
விலைமதித்தேன் கொள்ள
வாருங்கோ (விற்)
பொற்புனைந்த நன்முகத்தான்
நட்புமிகு மாதவிக்கு
பொன்கொடுக்க வேணுமிதை
நல்விலையதாக விற்று (விற்)

கோவலர் சிந்து, பொற்கொல்லன் சிந்து, மழுவர் சிந்து, கட்டியக்காரன் சிந்து, கண்ணகை சிந்து என இந்த யாப்பு பலவிடங்களில் வருகிறது.

கோவலன் கூத்தில் இடம்பெறும் கண்ணகை ஒப்பாரி இப்பிரதேச மக்கள் மத்தியில் நிகழும் ஒப்பாரியையொத்த ஓசையொழுங்கில் உள்ளது. உதாரணம்:

வாசமலர்ப் பஞ்சணைமேல்
மேவிமறை கண்துயிலும்
மன்னவரே ஓவியமே
என்னுடைய நாயகமே
உமக்கு மரநிழலோ பஞ்சுமெத்தை.

மாதவி பரத மிதியுடன் கூடிய வெண்பா என்னும் தலைப்பில் ஒரு பாட்டு கூத்தில் உண்டு. இதில் வெண்பாவிற்குரிய இலக்கணங்கள் கடைப்பிடிக்கப்படவில்லை. முதல் மூன்றடியிலும் வெண்பாவிற்குரிய சீர்களும் தளையும் அமைந்திருக்க நாலாவது அடி தளை தட்டுவதனையும் மூச்சீராய் முடிவதற்குப் பதிலாக நாற்சீராய் முடிவதையும் காணலாம்.

## முல்லை மோடி

மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்களை ஆய்வு செய்தோர் அவற்றிற்குரிய இயல்புகளை வகுத்துக் கூறுகின்றனர். கதைப் போக்கு, இசை, பிற்பாட்டுப் பாடும் முறை, ஆடல், உடை முதலிய வற்றில் வடமோடிக்கும் தென்மோடிக்கும் வேறுபாடு உண்டு. வடநாட்டுப் புராதன இதிகாசக் கதைகளைக் கொண்டவை வடமோடி நாடகங்கள். இவை போர் செய்து வெற்றிபெறுவதனைக் கூறுவன. இவற்றில் வீரம், கோபம், அழுகை முதலிய சுவைகள் விரவி வரும். தென்மோடி கூத்துக்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டுக் கதைகளைக் கூறுவனவாய் காதற்சுவை பயந்து காதல் கைகூடுவதோடு முடிவடைகின்றன. இவற்றில் நகை, வியப்புப் போன்ற சுவைகளே அதிகமாக இடம்பெறும். தென்மோடியில் பழைய முறைப்படியே இசை அமைந்திருக்கும்.

தென்மோடி ஆட்டங்கள் வடமோடி ஆட்டங்களை விட நுணுக்கமானவை. இதனால் வரவைக் குறிக்கும் பாட்டை அண்ணாவியார் அல்லது பக்கப்பாட்டுக்காரர் பாடுவர். வடமோடி நடிகர் வரவுப் பாட்டைத் தாமே பாடுவர். வசனங்கள் தென்மோடியில் இழுத்துப் பேசப்படும். வடமோடியில் ஒரு பாட்டை நடிகர் படிக்கப் பக்கப்பாட்டுக்காரர் அதனை முழுதாகப் படிப்பர். தென்மோடியில் கடைசிப் பகுதியை மட்டும் பிற்பாட்டுக்காரர் படித்துவிட்டு; பாட்டு முழுவதற்குமுரிய தருவைப் பாடுவர்.

தென் மோடியார் உடைகள், வடமோடியார் உடைகளைவிட பாரங் குறைந்தவை. வடமோடியார் மரத்தினால் செய்த பாரமான கெருடத்தை (கிரீடம்) அணிவர். தென்மோடியார் பூமுடியை அணிவர். வடமோடியார் முடியின் உச்சியில் ஒரு சிறுகுடை பொருத்தப்பட்டிருக்கும். வடமோடியில் வில்லும் அம்பும் தண்டாயுதமும் கட்டாரியும் ஆயுதங்களாக அமையும். தென்மோடியார் வாள் ஒன்றையே தரித்திருப்பர். வடமோடியார். கரப்பு உடுப்பினை அணிய தென்மோடியார் சாதாரண உடைகளையே அணிவர்.

தென்மோடி, வடமோடிக்குரிய பண்புகளுடன் கோவலன் கூத்தின் அமைப்பைப் பொருத்திப் பார்க்கும் போது இக் கூத்து வடமோடி தென் மோடி என்னும் பாகுபாட்டில் அடங்காத தனித்தன்மை வாய்ந்த தனிமோடியாகத் திகழ்வதைக் காணலாம். கூத்தின் கதை தமிழ்நாட்டைச் சேர்ந்தது. மிகவும் நுணுக்கமான ஆட்டங்களை உடையது. போர் செய்து வெற்றி பெறுவதையோ காதல் செய்து கைகூடுவது போலவோ கதை அமையவில்லை. வடமோடியார் அணியும் கரப்பு உடுப்பினையே இக் கூத்தினர் அணிகின்றனர். வாளும் கட்டாரியையும் ஆயுதங்களாகக் கொள்வர். பாட்டின் பிற்பகுதியையே பக்கப் பாட்டுக்காரர் படிப்பார். வசனங்களை இழுத்துப் பேசுவர். இவற்றை அவதானிக்கும்போது வடமோடிக்கும் தென்மோடிக்கும் உரிய பண்புகள் இணைந்திருப்பதுடன் முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கேயுரிய தனிப் பண்புகளும் இக் கூத்தில் விரவி வருவதையும் காணலாம். இக் கூத்தில் இடம் பெறும் இசைவிகற்பங்கள் மட்டக்களப்பு, மன்னார் நாட்டுக்கூத்துக்களில் பயிலப்படும் இசையைவிட வித்தியாசமான தனித்தன்மை வாய்ந்தவை. ஆட்ட முறையிலும் தனித்தன்மை உண்டு. எனவே கோவலன் கூத்து முல்லை மோடிக் கூத்து என அழைக்கப்படுகின்றது. ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இரவு, நிலவு, சிறு கருமேகத் திட்டுக்குள் சிக்கி பூமியை மறந்து வானிற்கு மட்டும் ஒளி தந்தது. இருள்மேக விளிம்பில் படம் போல் படர்ந்தது மலை.

அவனைத் துரத்திக் கொண்டு யாரோ அல்லது எதுவோ, ஓடினான். எதிரில் ஏற்றம். கடினமாக இருந்தது. தடுக்கி விழுந்தான்; பின்பு எழுந்தோடினான்.

காற்று சுழன்றடிக்கும் கடும் காற்று; அவலமான ஓலம்போல் இரைச்சல் உச்சத்தில் நின்ற உயர் மரங்கள் பேய்களாக அகோர ஆட்டம் போட்டன.

'தப்பிவிடவேண்டும்' அவன் தவித்தான். கால்கள் இறுகிப்பிடித்தன. அந்நேரம்தான், உச்சிப் பாறையொன்று பூதாகரமாக அசைந்து பேரிரைச்சலுடன் உருண்டு... திரும்புவதற்குள் அவன் மீது...

அசையமுடியவில்லை. மூச்சு முட்டியது. சாகலாம். இறப்பு நல்லது வாழ்வின் இறுதிக் கணங்களில் அவன்.



# வரும் காலம் எமதன்றோ?

ஏதோ அதிர்வு; விழித்தான் தேகம் பதறியது. வியர்த்து நனைந்திருந்தான். விழித்தது நல்லது; கனவு பொல்லாதது.

"தம்பி, எழும்படா 'செல்' அடிக்கிறாங்கள். 'பங்கருக்குள்ள' போவம்'' அம்மா பரபரத்தாள்.

எழுந்து கருநிழல்களாக ஓடி பதுங்கு குழிக்குள் அவர்கள் அனைவரும். அவன் குழி வாசலில் இருந்தான். தூரத்தில் வெடியோசை கேட்டது.

"குத்திப் போட்டான்''

குழிக்குள் பாய்ந்து காதுகளைப் பொத்தினான். அதிர்வு அருகில், எங்கேயோ அவலக்குரல் ஒன்றும் எழவில்லை. நல்லகாலம்; அல்லது குரல் எழுப்ப முடியாமல் செத்துப்போனார்களோ! தெரியவில்லை.

இனி உறக்கமில்லை. உறங்கித்தான் என்ன பலன்? நிஜத்தின் தொடர்ச்சி தானே கனவாக வருகிறது.

திரும்பிப் பார்த்தான், சின்னக்கா தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். கையில் அவளது மகன் உறக்கத்திலிருந்தான். சட்டென்று இதயம் வலித்தது.

குழந்தை பிறந்தது தொட்டு இந்த ஆறுமாத காலமாக அக்கா இப்படித்தான், அரைத்தூக்கம் காற்தூக்கத்தோடு அவளது நாட்கள் கழிகின்றன. பகலும் இரவும் குழந்தைக்கு அருகில்தான் அவளிருப்பு. வானூர்திகளின் இரைச்சலுக்கு அல்லது அவள் சந்தேகப்படும் அது போன்ற வேறு இரைச்சல்களுக்கும் குழந்தையையும் தூக்கிக் கொண்டு அலாதிப்பட்டு அவலமாக பதுங்கு குழிக்கு ஓடுவாள். இரவில் தூரத்தில் எறிகணை எழும் சிறுவோசையும் அவளை அதிரப்பண்ணும். திகைத்தெழுந்து அலமலப்பாள். சின்னக்காவை

**வசந்தன்**

பொறுத்தவரை வாழ்வின் அவலம் மிகக் கொடியது.

"சத்தத்தைக் காணேல்லை. இனி யாவது போய்ப்படுப்பம்'' அம்மாவின் ஊகம் அல்லது அனுபவம் ஆய்வின் முடிவு. அடிப்பதும் ஓடுவதும் ஒழிப்பதும் சாவதும் வாழ்வின் சாகசமாகி விட்டது.

மகனை வளத்திவிட்டு அக்கா அருகிலிருந்தாள். பார்க்க ஏதோவொரு காந்தல் நெஞ்சை நோகடித்தது.

"அக்கா நீ கொஞ்சநேரம் படு, தம்பியை பார்த்துக்கொண்டு நானிருக்கிறன்'' அவன் குழந்தைக்கருகிலிருந்து கொண்டு சொன்னான். பரிதாபமாக அவனது கண்களுக்கு உள்ளாக ஊடுருவிப் பார்த்தாளவள். இயலாமை அல்லது ஏதோவொரு திருப்தி, சுருண்டு படுத்தாள்.

இந்தச் சின்ன வயதில் அவள் நன்றாகக் காயப்பட்டுவிட்டாள். ஒரு வருட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மிருக்கும், கடைசியாக அவளது கணவன் கடலுக்குப் போன அன்று மாதாவுக்கு முன்னுக்கு மண்டியிட்டுவிட்டு வந்து படுக்கையில், வாழ்வு இப்படி இருண்டு போய்விடும் என்று அவள் நம்பவில்லை. இன்று காலையும் மாதாவுக்குமுன் கண்ணீர் வடித்தாள். தன்னவன் வந்துவிட வேண்டுமென்று.

அவன் சகோதரியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் இடையிடையே திடுக்கிட்டாள். பின்பு உறங்கினாள். ஏதோ முனகினாள்.

'யாரோ துரத்துகிறார்கள். தப்பிக் கொள்ள ஓடுகிறாள். முடியவில்லை. இறுதியில் அதே பெரிய பாறை அவள் மீது விழுந்து சாகடிக்க நெரிக்கிறது... மரணத்தின் வாசலில்...

அவளது உறக்கமும் இப்படித்தானே இருக்கும்? நினைவின் தொடர்ச்சிதானே நிழலும். சே, இதென்ன வாழ்க்கை, ஒவ்வொரு மனிதர் மீதும் ஒவ்வொரு பாறை சாகும்படியாக அழுத்தும் போது எப்படி வாழ்வது?

★

படலையைத் திறந்து வீதியில் இறங்கினான். சைக்கிள் இயல்பாய் ஒத்துழைத்தது. காற்று சாதுவாக நெஞ்சில் அடித்து சிலிர்த்தது. நிமிர்ந்தவன் வீதியில் ஏதோ பரபரப்பை உணர்ந்தான்.

'அகதிகள் வருகினமாம்'

பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்து சைக்கிளை நிறுத்தினான். நிறைய சனம், ஒவ்வொரு இடத்திலும் குடும்பம் குடும்பமாக, சில பெட்டிகள் மட்டும் முதுசமாகக் கொண்ட இருப்பிழந்தவர்கள் இருந்தனர்.

இதயத்தை ஏதோவொன்று பிசைந்தது. மனிதர்கள், சாவுபடிந்து போன முகங்களோடு மனிதர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பெரிதோ சிறிதோ ஒரு வீடு, கிணறு, முற்றமென நான்கு பக்க வேலியால் காக்கப்பட்டதொரு இராச்சியம் இருந்திருக்கும். இன்று முடி இழந்து... இராச்சியமிழந்து... அகதியென்ற சொல்லுக்கு பின்னுக்குத் தான் எவ்வளவெவ்வளவு துயரார்ந்த கதைகள்...

இரண்டு லொறிகள் வந்து நின்றன. கலைந்த கேசம், வாடிய முகங்கள். புழுதியில் தோய்ந்த மக்கள் வந்திறங்கினர். சிலர் இறங்கவும், பொருட்களை இறக்கவும் உதவினான்.

ஓரோரமாகச் சின்னதுகள் இரண்டு அழுதபடி நின்றனர். ஒருவனின் சட்டையை மற்றவன் இறுகப்பிடித்திருந்தான். கண்கள் பரிதாப ஆவலோடு அலைபாய்ந்தன. கண்ணீர் வழிந்து அப்பியிருந்த அழுக்கை அழித்த அடையாளம் முகத்தில் தெரிந்தது. புதிதாகவும் கோடிட்டது விழிநீர்.

கிட்ட நெருங்கி உற்றுப்பார்த்தான். குனிந்து அவர்களில் ஒருவனின் கன்னத்தை ஆதரவாகப் பிடித்தபடி கேட்டான்.

"ஏன் ராசன் அழுகிறீங்கள்''

"அம்மா... அம்மா''... விம்மல் பெருத்தது. நெஞ்சு ஏறி இறங்கியது. "தம்பி, அதுகள் தாய் தேப்பனை தவற விட்டிட்டுதுகள், ரெண்டு நாளா கரையில நிண்டு அழுததுகள். ஆரோ, லொறியில் ஏத்தி விட்டிருக்கினம்''.

'யேசுவே இதென்ன கொடுமை. தேப்பன் தாயோடு தங்கட பாதுகாப்பு, எதிர்காலம் எல்லாவற்றையும் தொலைச்சுப்போட்டு இதுகள்...'

பெருமூச்சுடன் எழுந்து, சுற்றிப் பார்த்தான். ஒவ்வொரு முகமாகக் கண்கள் நின்று மாறியது. வாடிப்போய், நாளை என்னவென்ற கேள்விக்குறி தேங்கி பேயறைந்த முகங்களோடு மனிதர்கள்; இரவு பார்த்த சின்னக்காவின் முகம்போல...

இந்த முகமிழந்த மனிதர்கள் ஒவ்வொருவர் மீதும் சுமையாகப் பெரும் பாறை அழுத்தும் போது எப்படி வாழ்வது? வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நெரிபட்டபடி என்னவென்று வாழ்வது?' எண்ணங்கள் நெஞ்சை அழுத்தி வதைத்தன. அங்கேயே நின்றால் தாங்கமுடியாமல் அழுதுவிட

# நின்மதி மூச்சு!

**கை. சரவணன்**

சிட்டுக்குருவி
சிறையில்...
முன் அனுமதி
பெறாமல்
அடுத்த ஊர்
போனதாம்.

★

பசுமாடு
இரவுவேளை
சுட்டுக்கொல்லப்
பட்டது...
வீதியில்
உலாவியதாம்

★

நாயொன்று
நையப்புடையுண்டது...
தமது திடீர்
வருகையை
பறை சாற்றியதாம்.

★

சேவலின் கழுத்து
நெரிக்கப்பட்டது...
கூவலில்
அமைதிகுலைகின்றதாம்

★

சருகு முயலுக்கு
சூடு விழுந்தது...
மறைந்திருந்து
வேவு பார்த்ததாம்

★

ஆரம்பமானது
விசாரணைகள்...
தீர்ப்புகள் மட்டும்
கூறப்படவில்லை.

★

தீர்க்கப்படாத
விசாரணை
அறிக்கைகள்...
கறையான்களும்
எலிகளும்
நீதிமன்று வளாகத்தில்
மகிழ்ச்சியாரவாரம்
செய்தன.

★

வாழ்க்கை
நன்றாக நடக்கிறது...
இடையிடை
யாழ். கடிதங்களும்
வருகின்றன.

★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

லாம். பள்ளிக்கூடத்திற்கு வெளியில் வந்து சைக்கிளை மிதித்தான்.

தெரு நீட்டுக்கும் மனிதர்கள், ஏதோவொன்றை தேடியபடி ஏதோவொரு எதிர்பார்ப்புடன் அங்கும் இங்கும் அலைந்தார்கள். அவர்களுக்குத் தேவை உடனடியானதொரு பாதுகாப்பு; தாங்கிக் கொள்ளவொரு கொழுகொம்பு. அதில் எத்தனை பேர் வெற்றியடைகிறார்களோ தோல்வியடைகிறார்களோ தெரியவில்லை. ஆனால், எந்தவொரு மனிதனும் தேடலில் துவண்டு போவதில்லைதானே.

வைத்தியசாலைக்கு முன் நின்ற வேப்பமரத்தின் கீழ் முதியவர் ஒருவர், அழுக்கு உரப்பை ஒன்றுக்குள் கொண்டு வந்த முதுசத்தில் தலைவைத்துப் படுத்திருந்தார். எப்படிப்பார்த்தாலும் எண்பது வயது தாண்டியிருக்க வேண்டும். இரண்டு மூன்று வாரம் மழிக்காத தாடி, என்புகள் மட்டும் துருத்திக் கொண்டு கன்னங்கள், குழிகளுக்குள் பதுங்கிப்போன கண்கள், ஒட்டிய வயிறு, அருகில் கைத்தடி; மூன்றாவது கால்.

ஒரு கணம் தடுமாறினான். 'கிழவன் உயிருடன் இருக்குதோ இல்லையோ' சந்தேகம் பொறி தட்டியது. மனிதம் இறங்கச் சொல்லியது. ஓரமாக சைக்கிளை நிறுத்தியவன் அருகில் வந்தமர்ந்தான்.

"ஐயா"

சிறு சலனம், முதியவர் மெதுவாக தலையசைத்தார். குழிகளில் விழுந்து போன கண்களில் புதியதோர் ஒளி பற்றிக்கொள்ள பற்றொன்று கிடைத்த நம்பிக்கை.

"அப்பு சாப்பிடீங்களே, எங்கயும் போவேணுமே, கொண்டுபோய் விடுகிறதெண்டா விடுறன்.

கிழவர் விழிகளை பூஞ்சி பின் வெட்டி அவனது முகத்துக்குள்ளாக பார்த்து ஆளை அலசி விட்டு எழுந்திருக்க முயன்றார். உதவினான்.

'பசியில்லைத் தம்பி, பிள்ளையார் கோவிலடியில் சொந்தக்கார பெடியனொருவன் இருக்கிறான். கொண்டு போய் விடுறியே"

"சரி, அப்பு" அவன் ஆறுதலாக அருகில் அமர்ந்தான். 'தள்ளாத வயசில இந்தக் கடலுக்காலை ஏன் இவ்வளவு கஸ்டத்தையும் படுவான். சாவை ஊரோடை வீட்டோடை தேடியிருக்கலாம்' மனதில் எழுந்ததை சொல்லத் தைரியமில்லை.

"ஏன் தாத்தா இந்தக் கஸ்டத்துக்கை நீங்களும் வெளிக்கிட்டனீங்கள்.

கிழவர் அவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தார். 'ஐயா' என்றவன், 'அப்பு' என்றவன், 'தாத்தா' என்று எவ்வளவு விரைவாக நெருங்கிவிட்டான் என்ற வியப்பு அவர் நெற்றிச் சுருக்கங்களில் படம் வரித்தது.

எதையோ மனதிற்குள் நினைத்து கண்களை மூடியவர் அதை வெளிச் சொல்ல விரும்பாது நெஞ்சுக்குள் திரும்பவும் புதைத்து சமாதி கட்டிவிட்டார்.

"இனி இருந்தும் என்ன பிரயோசனம். கடைசி நேரத்தில என்ர இன சனத்துக்கு நடுவில கண்ணை மூட வேண்டுமென்ற ஆசை. இப்ப இதில சீவன் போனாலும் பரவாயில்லை. உந்த ஓரமா இழுத்துப்போட்டு நீயெண்டாலும் கொள்ளி போடமாட்டியே"

அவன் திகைத்துப்போய் நின்றான். பிரமிப்பில் பெரியவர் மலைபோல உயர்ந்து முன் நின்றார். முதியவரின் உணர்வு வித்தியாசமானது. மரணம் துரத்த துரத்த இவ்வளவு கஸ்ரங்களையும் தாங்கிக்கொண்டு ஓடி வந்து, அநாதரவாக இல்லாமல் தன் இனத்தவனுக்கு நடுவில் சாவதற்காக.

பிள்ளையார் கோவிலடியில் வீடு கண்டுபிடிப்பது ஒன்றும் அவனுக்கு சிரமமாய் இருக்கவில்லை. கிழவரை பிரியும்போதுதான் சிறுமுள் நறுக்கென்று இதயத்தில் தைத்த வலி.

★

விடிந்து பதினொரு மணியாகியும் இன்னும் வெளியில் போகவில்லை. ஏனோ மனது சரியாக இல்லை. அந்தச் சின்னதுகளின் எதிர்காலம் பற்றிய நினைவு நெஞ்சுக்குள் முட்டி மோதியது. திடீரென நேற்று சந்தித்த கிழவரின் நினைவு வந்தது. இன்னும் சில நாள்தான் அவரின் வாழ்வு என்ற எண்ணம் நெஞ்சை உறுத்தியது. எதற்கும் ஒருதரம் பார்த்து வந்தால் என்ன என்ற நினைப்பும் எழுந்தது.

வீதியில் இறங்கியவன் வீட்டுக்குள் குரல் வைத்தான்.

"அம்மா பிள்ளையார் கோயிலடிக்கு போயிட்டு வாறன்"

"கெதியா வா" அம்மாவின் குரல். அவள் எப்பவும் இப்படித்தான். நினைக்க வயிற்றுக்குள் சிரிப்பு வந்தது. தன் மகன் மட்டும் சாவற்ற நித்தியத் தன்மையுடன் இருக்கவேண்டும் என்பது அவள் வேண்டுகை.

பிள்ளையார் கோவிலடி கடந்து எதிர்ப்பக்க வீதியால் இறங்கியபோது அழுகுரல் கேட்டது. நிதானித்துப் பார்த்தான். நேற்று கிழவரை இறக்கிய வீட்டடிதான். நாலைந்து பேர் வாசலில் நின்றார்கள். அவன் அருகில் போய் நின்றான்.

"நேற்றுத்தான் வந்தவர் பாவம், இரவு போய்விட்டார்."

ஆளுக்காள் கிழவரைப் பற்றிப் பேசினார்கள். உள்ளுக்குள் யாரோவொருத்தி தெளிந்த குரலில் ஒப்பாரி வைத்தாள்; அப்புவின் அருமை பெருமை பற்றி.

அப்புவின் சாவு நிறைவானதுதான். இந்தக் கூட்டத்தில் யாராவது ஒருவன் கொள்ளிபோட இருப்பான். அவன் சைக்கிளை திருப்பி மிதித்தான்.

'கேற்'றடிக்கு வரும்போதே வீட்டுக்குள் நடமாட்டம் தெரிந்தது. யாரோ அகதிகள் வந்திருக்கினம். 'யாராக இருக்கும்' சிந்தனையுடன் கேற்றைத் திறந்தவனுக்கு மூத்தக்காவின் முகம் தெரிந்தது.

அப்போ கார்த்தினியும் வந்திருப்பாள். இரண்டு வயதுதான். ஆனாலும் சொல்லமுடியாத துடியாட்டம்.

மூத்தக்காவின் முகமும் தெளிவாக இல்லை. சாவுக்கு தப்பி ஓடிவந்த களைப்பும் வெளிறலும் அவளில் தெரிந்தது. நேற்றிரவு அவளது தூக்கத்தையும் மரணத்தின் நிழல் படிந்த கனவுகள் கெடுத்திருக்க வேண்டும்.

இரவு; அவனுக்கு பக்கத்திலிருந்து கார்த்தினி வீட்டை படாதபாடுபடுத்திக் கொண்டிருந்தாள். விளையாட்டுப் பொருட்கள் முழுக்க சுற்றிவர சிதறிக் கிடந்தன.

அவளுக்கு விளையாட்டுக் காட்டுவதில் பொழுது கரைந்தது. போர்வையை எடுத்து முகம் மறைத்து "ம்பா... பேய் வருகிறது, பேய் வருகிறது" என்றான் அவன். சட்டென்று, நல்லூர் திருவிழாவுக்கு வாங்கிய 'ஓட்டமெட்டிக்' துவக்கை எடுத்து சடசடவென சுட்டாள் கார்த்தினி. அவன் கீழே விழுந்தான். ஓடிப்போய் அவன் நெஞ்சில் ஏறி உதைத்தாள் குழந்தை. அவளை தவறி விழுந்துவிடாது பிடித்தபடி நிமிர்ந்து பார்த்தான். மூத்தக்காவும் சின்னக்காவும் வாய்விட்டு சிரித்தபடி நின்றார்கள். அவன் திரும்பவும் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

குழந்தை, அவன் நெஞ்சில் முகமெல்லாம் மலர்ச்சியாய் குதித்துக் கொண்டிந்தாள். இவ்வளவு நாளும் நெஞ்சை அழுத்திவைத்த பெரும் பாறை துகள்களானது. துகள்கள் பின்பு மண்ணாகியது. மண் புழுதியாகி காற்றில் காணாமல் போனது.

★ ★ ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மீண்டும் துளிர்க்கும் வசந்தம்

வலிக்கும் என் விழிகளில் வழியும்
உதிரக் கண்ணீரின் உணர்வறியாதோரே,
எனது ஆன்மத்துள் ஒன்றிய
விடுதலைக் கனவின் வியாபகம் புரியாதவரே,
எனது துயரப் பாட்டொலி
கேட்காத திசைகளே!
நீண்டு பரந்த சமுத்திரப் பரப்பைத்
தாண்டிவரும் என் உணர்வுகள் தெரிந்திடுக.
கொதிப்பிடை வெந்தும்
குரலுயர்ந்தும் என் கொந்தளிப்பறிக.

எனக்காய் இரங்குமாறும்
கண்ணீர் வடிக்குமாறும்
யாரையும் நான் கேட்கப்போவதில்லை.
பாவப்பட்ட உயிரென்றெனக்குப்
பிச்சையளிக்க முன்வராதீர்.
வீண் கழிவிரக்கத்தில் என்னை
புரிந்து கொள்ள முயலாதீர்.

எனது சுயத்தை அறிக.
வற்றாத வளத்துடன்
எனக்கென்றோர் வாழ்வு
இவ் வையகத்தில் இருந்தது.
யாரையும் பற்றியிருக்காச் சீவியச் செழிப்பில்
வாழ்ந்த தடயங்கள் இப்போதும் உண்டு.
மானம் பெரிதென மதித்த
மாண்பு எனது மரபு.
உமைப்போல் தலை நிமிர்த்தி
மீண்டும் இங்கு நான் வாழ எழுகின்றேன்.
அதிர்வுகளுக்கும் நடுவில்
தளம்பலின்றி,
எனது பயணங்கள்
தடையின்றித் தொடர்கின்றன.
அக்கினிச் சருகுகளின் மேல்
அயர்ந்துறங்கினும்
இமைகள் சேர மறுத்த இரவுகளிலும்
'ஓர் இனிய வாழ்வே'
கனவாய் விரிகின்றது.
தடைப்பட்டுப்போன
குருதிக் குழாய்களில்



நெருப்பை நிரப்பியுள்ளேன்.
வேதனைகளிலிருந்து
வெளிப்பட்டவையெல்லாம்
என்னுள் புதிய வீச்சுக்களாகின.
எல்லாம் முடிந்து விட்டது என
எண்ணியிருந்த போதுதான்
புதிதாய் மீண்டும் சுவாசிக்கத் தொடங்கினேன்.
பட்டுப்போன இடத்திலிருந்து வேர் பாய்ச்சினேன்.
புது விதையாய் முளைவிடுவேன்.
சிதைவுகளில் முகம் துளிர்ப்பேன்.
புதைக்கப்பட்ட இடத்திலிருந்து
மீண்டும் பிறப்பெடுப்பேன்.
இன்னமும் துடிப்பிழந்து போகவில்லை
என் இதயம்.

பூமிச் சுழற்சியில் ஒரு புதிய குழந்தையாய்
பிறப்பெடுக்கப் போகும்
என்னை வரவேற்றுக் கொள்ளுங்கள்.
அஞ்சியும் கெஞ்சியும்
பணிந்தும் குனிந்தும் வாழ்வதல்ல என் விதி.
எனக்குத் திணிக்கப்பட்ட வாழ்வைத்திருத்தி
புதிதாய் எழுதுகின்ற கதையைப் படியுங்கள்.
சாக்குரலின் மத்தியிலும் எழுதப்படும்
இச் சரித்திரத்தை அறியுங்கள்.

சூரியன் பூக்கும் வானத்தில்
இருள் பரவி அழுத்துகையில்
முகில்களைக் கிழித்தெறிந்து
கதிரவனை அழைத்துவர – எனது
கரங்கள் புறப்பட்டு விட்டன.

வெறும் கற்பனையில்
விரிந்ததல்ல என் கனவு.
செயல்களின் கருப்பொருளாய்
நம்பிக்கை தரும் ஒளியில்
தொடர்கிறேன் பயணம்.
மீண்டும் துளிர்க்கும் வசந்தம்.
புதியதோர் வாழ்வு
எனக்கெனப் புலரும்.

–அம்புலி–

www.tamileelamarchive.com




அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2885

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com